1954 Please see page 20

# திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்.



திராவிடன்

சென்னை — மே மலர் — 1954

# அன்று அவர் கூறியது:
# மேதின காணிக்கை

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்—என்ற இம் முழக்கம் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகவே நம் நாட்டில் தொழிலாளர் தலைவர்களால் முழங்கப்பட்டு வருகிறது. இம் முழக்கத்தின் கருத்து—செயலளவிலேயும் இருத்தல் வேண்டும் என்பதற்காக— சில தலைவர்கள் தங்கள் சொந்த வாழ்வினை அர்ப்பணித்தனர். காலமெல்லாம் இக் கொள்கைக்காகவே உழைத்து உழைத்து உருக்குலைந்தனர். எனினும் உலகத்தொழிலாளர்களோடு நம் நாட்டுத் தொழிலாளர்களும் சரிநிகர் சமானமாக இருக்க முடிந்ததா—முடிகிறதா?

இல்லையெனில் இதற்குக் காரணம் என்ன? அதைத்தான் உலகத்தின் திருநாள் என்று போற்றப்படும் இன்று—நம் நாட்டுத் தொழிலாளர்களும் தொழில் இயக்கத் தலைவர்களும் ஆர அமர சிந்திக்கவும் — அச்சிந்தனையின் முடிவுக் கேற்ப செயலாற்றவும் உறுதி கொள்ள வேண்டுகிறோம்.

மேல்நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் உண்மையிலேயே வாழக் கற்றுக் கொண்டார்கள். அப்பேர்ப்பட்ட மகத்தானசாதனைக்கு அவர்கள் செய்த தியாகம் சாதாரணமானதன்று. நம் திராவிடத்திலுள்ள தொழிலாளர்களுக்கும் மேலைய நாட்டுத் தொழிலாளரின் இன்றைய நிலைக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால் வடநாட்டிலே உள்ள தொழிலாளர்களின் நிலைக்கும் நம்நாட்டுத் தொழிலாளர் வாழ்க்கை வசதிக்குங்கூட வித்தியாசங்களைக் காண்கிறோம்.

இவ்வித மேடுபள்ளங்கள் சரியாக்கப் படாதவரை உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று மனதாரக் கூறினாலும் அல்லது வேறு எந்த நோக்கத்தோடு முழக்கமிட்டாலும் நடைமுறையில் அதன்பலனைக் காண முடியுமா என்பதையும் நம் நாட்டிலுள்ள எல்லாத் தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களை நடத்திச் செல்லும் தலைவர்களும் சிந்திக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று தூய்மையான எண்ணத்துடன் முரசுகொட்டியவர், தொழிலாளர் இயக்கக் கர்த்தா பொதுவுடமைக் கொள்கையே எனது மூச்சு, பேச்சு, வாழ்வு அனைத்தும் என்று பணியாற்றிய தலைவர் கல்யாண சுந்தரனார் அவர்கள்.

'உலகத் தொழிலாளர்களோடு— இந்தியத் தொழிலாளர்களும், ஒன்றுபட்டு நிற்க வேண்டுமானால், அதற்கு முதலாவதாக திராவிடம் — தென்னாடு, தனியரசாக அமைதல் வேண்டும். ஏனெனில் தென்னாடு, அரசியல் அறிவியல் துறையில் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களை விட தெளிவு பெற்றிருக்கிறது—பொதுவுடமைக் கொள்கையை ஜீரணிக்க தன்னைத் தகுதியாக்கிக் கொண்டது. ஆனால் வட மாகாணங்களோ இத் தகுதியைப் பெறமுடியவில்லை. எனவே திராவிடத் தனியரசில் பொதுவுடைமைப் பூங்காவினை அமைத்து பின்னர் வங்கமே வா, மராட்டிய மண்டலமே மறுமலர்ச்சிப் பாதையை நோக்கி நட, பம்பாய் மாநிலமே நீயும் பாசிஸப்பிடிப்பிலிருந்து விடுபடு என்று திராவிடம் அன்பழைப்பு விடும். அக்கொள்கை வெற்றியுற ஆவன செய்யும். இவ்வாறாக இந்தியத் துணைக்கண்டம் பொதுவுடைமைக் கொள்கையில் முழு உருபெற்று, பின்னர் உலகத் தொழிலாளர் அணியில்சேரும்' என்று

அவர் குறிப்பிட்டுச் சொன்னதைமேதினவிழாவாகிய இன்று நம் நாட்டுத் தொழிலாளர்களுக்கு காணிக்கையாகத் தருகிறோம்.

தென்னாட்டுத் தொழிலாளர்கள் ஓரளவாவது நல்வாழ்வு பெற வேண்டுமானால் நாட்டுப் பிரிவினையைத் தவிர வேறெந்த சக்தியாலும் முடியாது என்பதை திராவிடர் இயக்கம் வலியுறுத்தி கூறுவதை சிலர் தங்கள் அரசியல் கண்ணோட்டத்தை மனதில் கொண்டு எதிர்க்கலாம். வீண் வியாக்கியானங்களையும் சர்ச்சைகளையும் வளரவிடுவதில் முன் நிற்கலாம். ஆனால் அப்பேர்ப் பட்டவர்களை காலம்விரைவில் [illegible] பெறச் செய்யப்போகிறது என்பது மட்டும் உறுதி

திராவிடத்திலுள்ள தொழிலாளர் பிரச்னை என்பது திராவிட நாட்டுப் பிரிவினை பிரச்னையில் இரண்டறக் கலந்ததாகும்.

எனவே தென்னாட்டிலுள்ள தொழிலாளத் தோழர்கள் அனைவரும் தங்களது மகத்தான சக்தியை உணர்ந்து திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு தருவதன் மூலம், தொழிலரசை—உண்மையான சுதந்திர ஆட்சி முறையை உருவாக்க விரைவில் முடியும்.

அவ்வித மகத்தான கொள்கைக்காகவே திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றி வருகிறது.

நிற்க, நம் நாட்டிலே தொழிற் சங்கங்கள் நிலைபெறவும் சிதறிக் கிடந்த தொழிலாளரின் சக்தியை ஒன்று சேர்க்கவும் தீவிர பணிபுரிந்து மறைந்த தலைவர்களுக்கு —லட்சிய வீரர்களுக்கு மே நாளாகிய இன்று நமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோன்று— தொழிலாளரின் நலனுக்காகப் பணியாற்றி வரும் அனைவருக்கும் எமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொழிலாளர்களிடையேயும் தொழிற் சங்கங்களுக்குள்ளாகவும் மலிந்துள்ள வேற்றுமைகளும் களைந்தெரியப்பட வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறோம்.

வடநாட்டிலேயிருந்து நம் நாட்டுக்கு வரும் மார்வாடி, குஜராத்தி போன்றவர்கள். வீதிகளிலே பிச்சையெடுப்பதை நாம் காண முடிகிறதா? சாதாரண வேலைகளில் ஈடுபடுவதுண்டா? வடநாட்டவர்கள் தங்கள் சொந்த மாநிலத்திலும் சொகுசான வாழ்வு நடத்துகின்றனர். வெளி மாகாணங்களிலும் ஏகபோக உரிமையுடன் வாழ முடிகிறது

ஆனால் திராவிட நாட்டிலே பிறந்த ஏழைஎளியவர்க்கு சொந்த நாட்டிலே தொழில் இல்லை— ஆகவே வெளி மாகாணங்களிலேயும் வெளி நாடுகளுக்கும் சென்று பலவித கொடுமைகளுக்கு ஆளாகி விடுகின்றனர். எந்த வடநாட்டுக்காரனும் சென்னையிலே — மற்ற முக்கிய ஊர்களிலே மூட்டை தூக்கியது கிடையாது. தொல்லைபட்டதையும் நாம் பார்க்க முடிகிறதில்லை.

ஆனால் தமிழர்களோ யெனின் சொந்த நாட்டிலும் வாழ்வுக்கு இடமில்லை, வெளிமாகாணங்களில் கூலிகளாய். பராரிகளாய் வாழ்ந்து கொடுமைகளுக்கு இரையாகி வருகின்றனர்.

மாகாணத்திற்கு மாகாணம் இந்த ஏற்றத்தாழ்வு அதிலும் சுதந்திர ஆட்சியில் ஏன் இருத்தல் வேண்டும் இதற்கு காரணம் என்ன?

அருமைத் தோழர்களே சிந்தியுங்கள் நடுநிலையிலிருந்து சிந்தித்து செயலாற்ற வேண்டுகிறோம்.

—என். வி. என்,

★

முகப்புப் படம்

## அறிஞர் அண்ணா
## மாவீரன் மா-சே-துங்

★

சீன நாட்டின் சென்றகால சம்பவங்களை படிப்பினையாகக் கொண்டு, பொதுவுடமைக் கொள்கையை,சீனநாட்டின்கலாசாரத்துக்கேற்ப அமைத்துள்ளார்.மாசே-துங் அதேபோன்று திராவிடத்திலும் அதன் பண்பு, கலாச்சாரம், சூழ்நிலைக் கேற்ப பொதுவுடைமைக் கொள்கையை அமைத்தால்தான் அக்கொள்கையும் வெற்றியுறும் அதன் மூலம் மக்களுக்கும் நல்வாழ்வு உண்டாக முடியும் என்று விளக்கங்களுடன் கூறிவருகிறார் அறிஞர் அண்ணா.

# உள்ளதைச் சொன்னால்.?

சி. என். ஏ.

உலகமெங்கும் கொண்டாடப் படுகிற பாட்டாளிகளின் தினமாகிய மேதின விழா திராவிடத்திலும் கொண்டாடப் படுகிறது. ஆனால் மேதினவிழா கொண்டாடபடும் இன்று திராவிடத்தின் நிலைமை என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். திராவிடத்தில் உள்ள குறைகளை எடுத்துக் கூறினால் நாம் வீணாக காங்கிரசைக்குறை கூறுவதாக நம் மீது குற்றம் சாட்டுகின்றனர். நாம் கூறுவது சரியா தவறா என்று அவர்களையே சிந்தித்துப்பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன.

இன்று கிராமங்கள் இருண்டு கிடக்கின்றன. உழவர்கள் வாடி வதைகின்றனர். பருவ மழையோ இல்லை. பயிர் வளமோ கிடையாது. பசித் தொல்லையோ பொல்லாது. வேலையோ கிடைப்பதில்லை. வாடுகின்றனர் மக்கள். ஆயிரக் கணக்கிலா அல்ல. இலட்சக் கணக்கில. நமது மாகாணம் முழுதும் இந்த நிலைமைதான். எங்கும் பசி! மூலைக்கு மூலை சோகமே காணப்படுகிறது. ராமராஜ்யம் நடக்கிறது என்று பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். காந்தி வழி நடப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் இருக்கும் நிலை பஞ்சமே, பசியே. வேலையில்லாத் திண்டாட்டமே.

ஏற்கனவே வேலை யின்றி வாடி வதைவோர் தொகை ஏராளம். பசியை, பட்டினியை பஞ்சத்தை, வேலையில்லாக் கொடுமையை ஒழிப்போம் எனக் கூறினவர்கள் ஊராள ஆரம்பித்து உள்ள நிலைமையை மோசமாக்கி, புதிய புதிய பட்டினிப் பட்டாளத்தை உற்பத்தி செய்துவிட்டனர்.

ஊரைவிட்டு, வீட்டைவிட்டு, வாசலை விட்டு, ஆணும் பெண்ணும், குழந்தையும் கிழமும் வானத்தைக் கூறையாகக் கொண்டு வறண்ட நிலத்தை வீடாக்கி, கல்லுடைத்து மண் சுமந்து ஆயிரமாயிரமாக பாதையிலே வழி நெடுக வாழ்ந்து வருவதைக்காணும் யார் மனந்தான் உருகாது. எவர் தான் சகிப்பார் இக்காட்சியை அந்த. மக்களின் பாடும் அவர்கள் உடம்பிலே காணப்படும் புழுதியும், காய்ந்த தலையும் எலும்புந்தோலுமாக இருக்கும் கோலத்தையும், ஒட்டிய வயிறும் உலர்ந்த உதடும், மிரண்ட கண்களும், குழி விழுந்த கன்னங்களுமாக, அவர்கள் இருப்பதைக் கண்டால் தெரியும் இந்நாட்டுப் பஞ்சத்தின் கொடுமை.

தொழிலாளர் ஆயிரவர் வேலையின்றி, வாழவகையின்றி மண்ணில் பிறந்தது ஏன் என்று கேட்டுக்கொண்டு, தானழுது, அழும் குடும்பத்தைத் தேற்றி. சாவாது செத்து இருப்பதை யார் கவனிக்கிறார்கள். அரை வயிற்றுக் கஞ்சிக்கும் 'அஷ்டமத்துச் சனியா' என எண்ணி ஏங்கி அழும் தொழிலாளர் துயர் துடைக்க யார் முன் வருகிறார்கள்? தொழிலாளர்களின் அல்லலும் அழுகையும் எவ்வளவு? இவ்வளவும் போதாதென்று புதிய வரிகளைப் பிடிவாதமாகப் போட்டு விட்டார்கள். இது புதிய பட்டினிப் பட்டாளத்தைக் கிளப்பிவிடும் என்பதில் சந்தேகமேது?

இருந்த தொழிலும் போய் இருக்க வழியும் அற்றவர் எந்த நிலையில் இருப்பர்? பசியின் கொடுமையில் சிக்கினோர் எத்துணை ஆத்திரத்தில் இருப்பர். ஆத்திரக்காரனுக்கு சாத்திரம் ஏது என்றனர் பெரியோர். பசி வந்திடப் பத்தும் பறக்கும் என்றனர் கவி. அந்தப் பசி சொல்லாதது! மிகப்பயங்கரமானது. சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும் பசியுடன் போராடிய மக்கள் பிறகு எத்துடன் போராடவும் துணிவர் என்ற உண்மை.

எல்லாப் புரட்சிகளுக்கும் அடிப்படையான காரணம் எது? சமுதாயக் கலகம், அரசியலாருடன் சமர், ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு பாய்தல், ஒருவரை ஒருவர் தாக்குதல்—இவை எக்காரணம் பற்றி எழுகின்றன? பசி! பசி! பசி! இந்தக் கூக்குரல் நாட்டில் நாள்தோறும் எழும்பிப் பெருகி வளர்ந்து வருகிறது. நாடாள்வோரோ, நாங்கள் காந்தியர்கள், அதைச் செய்தோம் இதைச் செய்தோம் என்று அளக்கிறார்கள். மக்களோ பஞ்சத்திலடிபட்டு வாடுகின்றனர்.

அவர்கள் வாழ வழியில்லை! இந்த நாடு பாலைவனமா? வளப்பம் அற்றதா? இல்லையே! பொன் பூத்துக் காய்த்துப் பழுக்கும் நாடு என்றல்லவா பாவாணர் பாடியுள்ளனர். பின்னர் ஏன் இந்தப் பஞ்சம். இதைப்போக்க ஏன் முன்வரவில்லை சர்க்கார்.

ஆண்டு ஏழாயிற்று ஆடம்பரத்துடன் அரசாள காங்கிரஸ் வந்து. இன்றுவரை ஒரு நூறுபேருக்கு வேலை கிடைக்க ஒரு வழி செய்ததுண்டா? எங்காவது புதிய தொழில் துவக்கப்பட்டதா? எங்கேனும் ஆலைகள் நிறுவினார்களா? எத்தனையோ இலாபகரமான தொழில்கள் உள்ளனவே. பாரதியார் பாட்டிலே பாடிப் பாடிக் காட்டினாரே. அதை ஆடிப்பாடி ஒட்டு வேட்டை நடத்தினீரே ஏன் எழவில்லை எத்தொழிலும்? என்ன செய்கிறது காங்கிரஸ் கட்சி. இந்த இலட்சணத்திலே புது வரிகள்.

சமுதாய அமைதி, சட்டத்தின் மாட்சிமை, சர்க்காரின் நிலைமை இவைகள்கூட பசியால் தாக்குண்ட கூட்டம் படைத்து எழுந்தால் பாதிக்கப்படும். இதுவெறும் வாதம் அல்ல! சரித்திரம்!

தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவாவது இந்த சர்க்கார் இந்த வேலையில்லாக் கொடுமையைக் களைய முன்வரவேண்டும்.

ஊராள வந்தவர்கள் தாமும் அறியார், அறிந்தோர் சொல்லும் கேளாரே, என் செய்வது அவர்கள் தேசபக்தர்கள். நாம் ஏதாகிலும் கேட்டால் கூரையில் ஏறிநின்று கொக்கரிக்க ஒரு கூட்டம் இருக்கிறது, அந்தப்...... புடையைக்கொண்டு நாட்டுக் கொந்தளிப்பை அடக்கலாமென்று காங்கிரஸ் தலைவர்கள் கருதுகின்றனர். அக்கருத்து மிகத் தவறானது, இராணுவப் படைகளாலும் பட்டினிப் பட்டாளத்தின் புரட்சியை அடக்க முடியவில்லை என்று உலக நிகழ்ச்சிகள் கூறுகின்றன. மற்றப் படை என்ன செய்யும் ஏதேனும் உளறிக் கொட்டும். அதனால் பசி அடங்குமா? பட்டினி நீங்குமா வேண்டுமானால் அப்பட்டாளத்தின் பசியும் பட்டினியும் தீரும், ஆனால் இதோ நாட்டிலே பல்வேறு இடங்களிலே கிளம்பி மிரட்டும் பட்டினிப் பட்டாளத்தின் பசி நீங்குமா? நீங்காது. அது இனி நாடு முழுதும் சுற்றிப் பஞ்சத்தைப் பரப்பும். ஆகவே இந்த நிலைமை உடனே தீரவேண்டுமென்றால் நாட்டுப்பிரிவினை மிக அவசியம், திராவிடநாடு தனியாக பிரிந்தால் எல்லாமக்களும் சுகமாக வாழ வழி இருக்கிறது, நம் நாட்டில் ஏராளமான வளம் இருக்கிறது. ஆனால் வகையில்லை. ஆகவே இந்த பிரச்னைகள் எல்லாம் தீர வேண்டுமென்றால் திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இம் மேதினத்தில் நீங்கள் அனைவரும் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் இலட்சிய கீதத்தை உங்களுடைய இருதய முழக்கமாகக் கொள்ள வேண்டுகிறேன்.

## நாஸ்திகர்களே மேலானவர்கள்!

★

"கடவுள்" இருப்பதாகச் சொல்லும் வாதத்திற்கு ஆதாரங்களைக் காட்டுங்கள் என்ற கேள்விக்கு கடந்த 10,000 வருஷங்களாகக் கொடாமல் வாய்ப்பந்தல் போட்டு உலகை ஏமாற்றி வருகின்றீர்களே, நீங்கள் யோக்கியர்களா, அல்லது, எந்த மெஞ்ஞான சாஸ்திரத்திலும் (Science) உயிர் சாஸ்திரத்திலாகிலும் (Biology) பூதபெளதீகத்திலாகிலும் (Physics and Chemistry) வான சாஸ்திரத்திலாகிலும் (Astronomy) பூமி நூலிலாகிலும் (Geology) மற்ற வெவ்வேறு மெஞ்ஞான நூல்களிலாவது, கடவுளுக்கு ஆதரவு எங்குமில்லையே. 'அத்தகைய பொருள் இருப்பதாக நான் எப்படி நம்புவதென்றுகூறும் நாஸ்திகன் யோக்கியபுருஷனா என்று கேட்கிறோம்.

உலகில் கோடானு கோடி மக்கள் (Sufficient Reason) போதுமான காரணமின்றி "கடவுள் இருக்கின்றார் என்றாலும் சரி. "கடவுளை" பார்த்தேன் என்றாலும் சரி, "பிரமத்தோடு ஐக்கியமானேன் என்றாலும் அது யோக்கியமாகாது. அல்லது போதுமான சாட்சியம் அதாவது (Sutficient evidence) இல்லாமல் "கடவுள்" பேய், பூதம். பிசாசு. நரகம், மோட்சம் இருப்பதாக நம்புவதும் யோக்கியமாகாது. பெரியோர்கள் சொல்லுகிறார்கள். பண்டைக்கால நூல்களில் சொல்லியிருக்கின்றது ஆதலால் நான் "கடவுள்" இருப்பதாக நம்புகிறேன் என்பதும் யோக்கியப் பொருப்பு ஆகா.

போதுமான சாட்சியமென்றால். சாதாரண தாழ்வுக்கு வேண்டிய காரணங்கள். நாம் அநேக விஷயங்களை நம்பவேண்டி வருகிறது. சில விஷயங்களுக்குக் காரணங்களைக் கேட்கின்றோம். சிலவற்றிற்கு காரணங்களைக் கேட்காமலே நம்பி நடக்கின்றோம். ஆனால் நாம் நம்பி நடந்தாலும் சரி நடக்காவிட்டாலும் சரி, காரணங்களைக் கேட்டால், கொடுத்தே தீரவேண்டும். எல்லோருக்கும் சாதாரண காரணங்களால் நம்பி நடப்பது பழக்கமாய்விட்டது. இருந்தாலும் காரணங்களைக் கொண்டுதான் நம்பி நடக்கின்றோம்.

திருஷ்டாந்தமாக நமது வீட்டில் விஷம் வைக்கமாட்டார்கள் என்று நம்பி நடந்து போகின்றோம். ஆனால் அதற்கும் காரணமில்லாமலில்லை. பல நாளாய் விஷம் வைக்காமையால் நாளைக்கும் வைக்கமாட்டார்களென்ற நம்பிக்கை உண்டாகின்றது. உத்யாதி விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் அவைகளின் காரணங்களை அறிந்தே நடக்கவேண்டியிருக்கின்றது. ஆதலின் தகுந்த காரணமின்றி நாம் எதையும் நம்பி நடப்பதில்லையாதலால் மத விஷயங்களில் மாத்திரம் காரணமின்றியே கடவுளையும் பேய் பிசாசுகளையும், மறு பிறப்பு, கடைசி நாள் (Dooms Day) முதலிய கற்பனைகளை நம்புகின்றோம். இது யோக்கியமா. ஆனால் இது விஷயங்களில் நாஸ்திகன் யோக்கியனாகவே நடந்து கொள்ளுகின்றான்.

—சிந்தனைச் சிற்பி மா. சிங்காரவேலர்

# கொள்கைக்கோமான் குணக் குன்று

இந்தியத்துணைக்கண்டத்திலே குறிப்பாக தென்னாட்டிலே முதன் முதல் தொழிலாளர் சங்கம் கண்டவர் நமது மகத்தான தலைவர்-தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள்தான் என்பதை இந்தியத்துணைக் கண்ட தொழிலாளர் உலகமும் அதன் வரலாறும் எடுத்துக் காட்டுகின்றன.

தன்னலங்கருதாத கொள்கைக் கோமானாகிய தொழிலாளர் தந்தை திரு. வி. க. அவர்கள் தொழிலாளர் சங்கம் காணவேண்டி, ஆற்றியுள்ள பணியைப்போல இந்தியத் துணைக்கண்டத்திலே வேறு எவரும் செயலாற்றியிருக்க முடியாதென்று கூறினால் மிகையாகாது.

மற்ற தொழிலாளர் தலைவர்களெல்லாம் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கி கொடுமைகளுக்கு ஆளாகி யிருக்கின்றனர் என்பதை நாம் மறுக்கவில்லை, எனினும் சிதறிக்கிடந்த தொழிலாளர்களின் சக்தியை ஒன்று திரட்டி—அவர்களது உரிமையையும் நினைவூட்டி எழுச்சி பெறச் செய்த பெருந்தகை நமது கல்யாணசுந்தரனர் அவர்களேயாவார் அவரது சீரிய முயற்சியாலும் அன்று அவரோடு ஒத்துழைத்த அன்றைய தொழிலாளர் தலைவர்களான ஜி. செல்வபதி (செட்டியார்) ராமாஞ்சலு(நாயுடு) போன்றவர்களின் தூண்டுதலினுலுமே இந்தியத் துணைக் கண்டத்தில் முதன் முதலாக தொழிற் சங்கம் நிறுவப்பட்டது.

அச்சங்கந்தான் இன்று சொந்த கட்டிடத்தைக் கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் சென்னைத் தொழிலாளர் சங்கமாகும். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தொழிலாளர் சங்கங்களுக்கு இது தாய்ச் சங்கமாகும். மறைந்த மாவீரர் திரு. வி. க. அவர்களின் உடல், உயிர், குடும்பம். சொத்து அனைத்துமே சென்னைத் தொழிலாளர் சங்கந்தான்.

1918-ம் ஆண்டில் தொழிலாளர் தலைவர் திரு. வி. க. அவர்களின் இலட்சியம் ஈடேற—அவரோடு நின்று பெரும்பணியாற்றியவர்கள், தோழர்கள் வாடியா கேசவப்பிள்ளை, வ உ.சிதம்பரனர், சக்கரைச் சேட்டியார் இ.எல். அய்யர் ஹரிசர்வோத்மராவ், இராசகோபாலாச்சாரியார், ஆதிநாராயண செட்டியார், எம். சி. ராசா. நாகை பக்கிரிசாமிப் பிள்ளை, ஜார்ஜ் ஜோசப், எஸ். நடேச (முதலியார்) ஆகியவர்களும் நீதிக் கட்சித் தலைவர்களான சர். பி. தியாகராயர், டாக்டர் நடேசனர், ஒ தணிகாசலம் (செட்டியார்) பனகல் அரசர் ஆகியோருமாகும்.

**1947-ம் ஆண்டு சென்னைத் தொழிலாளர் சங்கம் நடத்திய போராட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்களும் பொதுச் செயலாளர் அண்ணு அவர்களும், ஏன் கழகமே தொழிலாளர் பக்கம் பெருந்துணையாக நின்றது.**

1918-ம் ஆண்டு ஏப்ரல் 4-ம் நாள் சென்னைத் தொழிலாளர் சங்கம் (இந்தியாவில் முதன் முதலாக) தோற்றுவிக்கப்பட்டது.

1931-ம் ஆண்டு சென்னைத் தொழிலாளர் சங்கத்திற்கு—சொந்த கட்டிடம் திறக்கப்பட்டது. தொழில் உலகம் தலை நிமிர்ந்து நின்றது.

சென்னைத் தொழிலாளர் சங்கத்திற்குத் தலைவராகவும், பின்னர் கௌரவத் தலைவராகவும், தம் வாழ்நாள் வரை பணியாற்றி பல வித தொல்லைகளையும் கொடுமைகளையும் தமது இயற்கையான அன்பினல் அரும் குணத்தால்—அரசியல் அறத்தால் தூள் தூளாக்கினர்.

1953 செப்டம்பர் 18-ம் நாள் நம்மைவிட்டு—நமது நாட்டைவிட்டு, மறைந்தார்— மறைந்தார். அம் மாவீரன் மறைந்தார் சென்னை மாநிலமே - ஏன் இந்தியத்துணைக்கண்டமே அன்று துக்கத்திலாழ்ந்தது.

தமிழ்ப் பெரியாரால் துவக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட சென்னைத் தொழிலாளர் சங்கத்திற்கு அவரது வழியைப் பின்பற்றி இன்று தோழர் எஸ். ஸி ஸி. அந்தோணி(பிள்ளை) அவர்கள் தலைவராகவும் தோழர் எஸ். பக்கிரிசாமிப் (பிள்ளை) அவர்கள் பொதுச் செயலாளராகவும் இருந்து பணியாற்றி வருகின்றனர்.

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தொழிற் சங்கங்களின் தாய்ச்சங்கமாகிய சென்னைத் தொழிற் சங்கம் அதன் கொள்கையில் மேலும் மேலும் வெற்றியுறவும், அதேபோன்று மற்ற எல்லா தொழிற் சங்கங்களும், தொழிலாளர்களும் தங்களின் மகத்தான சக்தியின் மூலம் நிரந்தரமான உரிமையைப் பெற வேண்டுகிறோம்.

தோழர். எஸ். ஸி. ஸி. அந்தோணி (பிள்ளை)

## குற்றம் சாட்டுகிறார்

★

"சர்க்காரும் முதலாளிகளும் தொழிலாளருக்கு நியாயமாகச் செய்ய வேண்டியதை செய்யவில்லை. சர்க்காருடன் தொழிலாளர் ஒத்துழைக்கவில்லை என்று கூறுவது சரியல்ல தொழிலாளாகள் மோசமாக கை நழுவ விடப்பட்டார்கள் என்றே நான் சொல்லுவேன்.

—ஜெயபிரகாஷ் நாராயண்

தோழர். எஸ். பக்கிரிசாமி (பிள்ளை)

# மே தினமும் நம் நாடும்

இன்று மே நாள்: ஒரு ஆண்டின் மே மாதத்தின் முதல் நாள் மேநாளாகும். இதற்கு ஏன் மே நாள் என்று பெயர் வந்தது? மேநாள் என்ருல் என்ன? மேநாளை ஒவ்வொரு ஆண்டும் ஏன் கொண்டாடுகிருர்கள்? மேநாளுக்கும் திராவிட இயக்கத்திற்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா இப்படிப்பட்ட கேள்விகள் யாருக்கும் எழச்செய்யும்.

உலகத்தில் யந்திர தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் தொழிலாளர்கள் மற்ற மக்களின்றும் தனி ஒரு வர்க்கத்தாராக வாழ்ந்து வருவது நமக்குத் தெரிந்ததே. தொழிலாளர்கள் இப்படி தனி வர்க்கமாக நடத்தப் படுவது நம் திராவிட இயக்கத்தின் கொள்கைக்குப் புறம்பானது என்பதும் நாம் அறிந்ததே. தொழிலாளர்கள் எந்த நாட்டிலும் மிகக் கேவலமாக நடத்தப்பட்டு வந்துள்ளார்கள். மிருகங்களுக்காவது ஓய்வு என்பதொன்று உண்டு. ஆனல் தொழிலாள வர்க்கத்தினருக்கோ ஓய்வுமில்லை ஒழிவுமில்லை என்ற நிலை இருந்து வந்தது. ஓய்வும் ஒழிவும் தொழிலாளருக்கு அவசியம் என்பதை தொழிற்சாலைகள் மண்டிக் கிடக்கும் அமெரிக்காவில் இருந்த தொழிலாளர்கள் உணர்ந்தனர். உணர்வினுல் ஏற்பட்ட தம் விருப்பத்தை முதலாளிகளிடம் தெரிவித்தனர். அட்டைக் குணம்உள்ள முதலாளிகளா தொழிலாளரின் அவாவை மதிப்பர்? அவமானத்தால் தாக்குண்டத் தொழிலாளர்கள் தன்மானம் அடையத் துவங்கினர். 1806-ல் **பிலடல்பியாத்** தொழிலாளர்கள் தங்கள் விருப்பத்தை அடைவதற்காக ஒரு வேலை நிறுத்தம் செய்தனர். இவர்கள்தான் உலகத்திலேயே முதன் முதல் தொழிற் சங்கம் நிறுவியவர்களாகும். இந்த வேலை நிறுத்தத்தால் முழுப்பயன் ஏற்படவில்லையானுலும் தொழிலாளர்களின் வேலை நேரக் குறைப்பு ஒரு சிறிது ஏற்படச் செய்தது. பிறகு திட்டவட்டமான மொழியில் ஒரு நாளைக்கு 10 மணி நேரம்தான் தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தி 1820, 1827, 1834-ம் ஆண்டுகளில் **பிலடல்பியா, நியூயார்க், சிகாகோ,** போன்ற பெரிய நகரங்களில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். இவ்வேலை நிறுத்தங்கள் 1837-ல் 10 மணிநேர வேலையை சர்க்கார் தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் அமுலுக்குக் கொண்டுவரும்படியான நிலையை ஏற்படுத்திவிட்டன. ஆனல் பத்து மணிநேர வேலையைக் கோரி போராட்டம் நடந்து வந்த அதே சமயத்தில் பல தொழிற் சங்கங்கள் எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையை முன்வைத்து போராடத் துவங்கி விட்டன. இக்கோரிக்கை எள்ளி நயாடப்பட்டாலும் தொழிலாளர்கள் தளராது ஒன்றுபட்டு தம் எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையை வளர்த்து வந்தனர். '**எட்டு மணி நே**ர **வேலை, எட்டு மணி நேர பொழுதுபோக்கு, எட்டு மணி நேர ஓய்வு**' என்ற அரும் பெரும் கோரிக்கையை தென்கிழ்க் கோடியில் உள்ள **ஆஸ்திரேலியத்** தொழிலாளர்கள் எழுப்பிய முழக்கம் அமெரிக்கர்களின் எட்டு மணிநேர வேலைக் கோரிக்கையை பலப்படுத்தியது. ஆஸ்திரேலியத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையில் 1856-ல் வெற்றியடைந்து விட்டார்கள். ஆனல் அமெரிக்க, ஐரோப்பிய தொழிலாளர்களோ இவ்வெற்றியை அடைய நீண்ட நாள் ஆயிற்று.

அமெரிக்க தொழிலாளர் ஸ்தாபனம் 1884-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ந்தேதி கூடிய கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின் பலன்தான் மேநாள் பிறப்பு. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் சாரம் இதுதான்.

"1886ம் ஆண்டு மேமாதம் முதற்தேதி முதற்கொண்டு எட்டுமணி நேரந்தான் தொழிலாளர்களின் சட்டபூர்வமான வேலை நேரமாக இருக்க வேண்டுமென்று இந்த அமெரிக்கத் தொழிலாளர் ஸ்தாபனம் தீர்மானிக்கிறது, ஆகவே சகல அமெரிக்க கனடா தொழிற்சங்களும் தங்கள் தங்கள் வட்டாரங்களில் இத்தீர்மானப்படி குறிப்பிட்ட மே மாதம் முதல் நாளிலிருந்து தமது சட்டதிட்டங்களை வகுத்துக்கொண்டு நம் கோரிக்கைக்கு போராடும்படிக் கேட்டுக் கொள்கிறது."

இத்தீர்மானப்படி 1886ம் ஆண்டு மேமாதம் முதல்நாள் அன்று எட்டுமணிநேர வேலையை வற்புறுத்தி வேலைநிறுத்தம் செய்வதற்காக அமெரிக்கத் தொழிலாளர்கள் மிக விரிவான முன்னேற்பாடுகளைச் செய்தனர். 1886 மே முதல்நாளும் வந்தது. வேலை நிறுத்தமும் தொடங்கியது. வேலை நிறுத்தப் போராட்டத்தில் பல லட்சம் தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். உயிர்ச்சேதம், பொருட்சேதம், ஏற்பட்டாலுங்கூட போராட்டம் வெற்றிகரமாக முடிந்தது. சிகாகோ நகரத்தில் நடந்ததுதான் மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டமாகும்.

இம்மேநாள் போராட்டத்தைப்போன்றதொரு போராட்டத்தை தொழிலாளர் உலகம் அதற்கு முன் கண்டதில்லை, எட்டுமணிநேர வேலை கோரிக்கையும், வேலைநிறுத்தப் போராட்டமும் தொழிலாளர் உலகில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் அந்தஸ்தை கொடுத்துவிட்டது இந்த 1886 மே முதல்நாள் உலகத் தொழிலாளர்களின் சுதந்திர நாளாகத் திகழவும் ஏற்பட்டு விட்டது,

## அமெரிக்க மேநாளும்—
## அகில உலக மேநாளும் :—

மேநாளின் விவரத்தைத் தெரிந்து கொண்ட நமக்கு எழும் அடுத்த ஐயம் மேநாள் அகில உலக மேநாளாகியது எப்படி என்பதுதான்.

எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையை வற்புறுத்தி வந்த அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைக்கு மற்றஉலகத் தொழிலாளர்களின் அனுதாபத்தைத் தேட விரும்பினர். அதே சமயத்தில் அகில உலக தொழிலாளர் ஸ்தாபனமும் அமெரிக்கத் தொழிலாளர்களின் எட்டு மணிநேர வேலைக் கோரிக்கையைத் தங்கள் அகில உலக தொழிலாளர் புரட்சிக் கொள்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர். 1889-ம் ஆண்டில் நடைபெற்ற 'இரண்டாவது கம்யூனிஸ்ட் ஸ்தாபன' கூட்டத்தில் அமெரிக்கத் தொழிலாளர்களின் எட்டு மணிநேர வேலைக் கோரிக்கை விளக்கப்பட்டது. இவ்விளக்கத்தைக் கேட்ட கம்யூனிஸ்ட் ஸ்தாபனம். எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையை சர்வதேச தொழிலாளர்களும் தங்கள் போராட்டமாகக் கொள்ள வேண்டும் இந்த சர்வதேச போராட்டத்திற்கு மே மாதம் முதல் நாளையே உரிய நாளாக ஒப்புக் கொள்கிறது இந்த இரண்டாவது கம்யூனிஸ்ட் ஸ்தாபனம்." என்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத்தீர்மானத்தின்படி 1890-ம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் கொண்டாடப்பட்டது, இப்படியாக உலக நாடுகள் யாவும் மே முதல் நாளைக் கொண்டாடத் துவங்கின. இப்போதும் கொண்டாடி வருகின்றன.

இம்மேநாளை கார்ல் மார்க்ஸ், ஏஞ்சல்ஸ், லெனின் ஆகியோர் முக்கியத்துவம் கொண்ட நாளாக ஏற்றுக் கொண்டனர். சாவதேச போராட்டத் தினமாக காரல் மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் இருவரும் ஏற்படுத்தி விட்டனர், இம்மேநாள் "ருஷ்ய மக்களின் அரசியல் விடுதலைக்கான மாபெரும் போராட்ட நாளாக இருக்க வேண்டும்" என்று ருஷ்ய மக்களுக்கு லெனின் அறிமுகப்படுத்தி வைத்தார். இப்படியாக மே நாளானது கம்யூனிஸ்ட்களால் புரட்சி நாளாகவும், சிவப்பு நாளாகவும் கொண்டாடப்பட்டு வளர்ந்து வந்தது,

## மேதினமும் நம்நாடும்

நம் நாட்டில் 1917க்கு முன்னர் தொழிற் சங்கங்கள் இருந்ததில்லை, மேநாள் கொண்டாட்டமும் இருந்ததில்லை என்றே தெரிகிறது, இந் நூற்ருண்டின் ஆரம்பத்திலிருந்துதான் யந்திர தொழிற்சாலைகள் மிகுதியாக ஏற்படலாயின. சென்ற நூற்ருண்டில் சில ரயில்வே தொழிற்சசாலைகளும், பஞ்சாலைகளும் ஏற்பட்டன எனலாம். இத்தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் ஆங்காங்கே தம் கோரிக்கைகளைக் கூறி வந்தனர். சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டு எந்த வகையான காரியங்களும் செய்து வரவில்லை. ஸ்தாபன ரீதியில் இந்தியாவில் முதன் முதல் தொழிற் சங்கம் அமைக்கப்பட்டது சென்னையில்தான். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களால் "சென்னைத் தொழிற்சங்கம்" இந்தியாவிலேயே முதல் தொழிற் சங்கமாக துவங்கப்பட்டது. இத் தொழிற் சங்கத்தில் பெரும் பங்கு கொண்டு தொழிலாளர் நலனிற்காக இரவு பகலாக உழைத்த உத்தமர் **திரு. வி. க. அவர்கள்தான்** தொழிலாளர்களின் வேலை நேர குறைப்பிற்காகவும் கூலி உயர்விற்காகவும் அரும்பாடுபட்ட அண்ணல் திரு. வி, க. அவர்கள்தான். அவருடைய உண்மைத் தொண்டுகளையும், அவருக்கு தொழிலாளர்பால் இருந்த அன்பு ஆர்வத்தையும் சொல்லிச் சொல்லி வாயாரப் புகழ்ந்தனர் அக்கால நீதிக் கட்சித் தலைவர்களான சர் தியாகராயர், பனகல் அரசர், டாக்டர் நடேச முதலியார், ஓ. தணிகாலம் செட்டியார் அவர்கள். "சென்னை திராவிட கழகம்" கண்ட தந்தை திரு. நடேசனுர் அவர்கள் "சென்னை தொழிற் சங்கம்" கண்ட தொழிலாளர் தந்தை திரு வி. க. அவர்களை பாராட்டிப் புகழ்ந்துள்ளார். சென்னை திராவிட கழகம் திரு. வி. க. அவர்களின் தொழிலாளர் பிரச்னைகள் பற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டு தொழிலாளர்களுக்கு தன் கடமையைச் செய்யத் தவறவில்லை. 1921-ல் நடந்த தொழிலாளர் சச்சரவில் பெரும் தொண்டுபுரிந்த தொழிலாளர் தலைவர் திரு. வி. க. அவர்களை கண்ணும் கருத்துமாக இருந்து காப்பாற்றினர் வீரர் **தியாகராயரும்** மற்றவர்களும். திரு. வி. க. அவர்களை உத்தேசித்து தம் கட்சி மந்திரி சபையை ராஜினுமா செய்வதற்கும் தயாராகிவிட்டவர்கள் தியாகராயர் பனகல் போன்றவர்கள். திரு. வி. க, அவர்களின் தொழிலாளர் தொண்டு இந்திய உபகண்ட சரித்திரத்தில் முக்கிய இடம் பெறத் தக்கவைகளாகும்.

கம்யூனிசம் என்பது இதுதான், தொழிலாளர் உரிமை என்பது இதுதான் என்று அஞ்சா நெஞ்சமுடன் மக்களுக்கு எடுத்துக்கூறிய மாவீரர் **சிங்காரவேலரின்** பெயரைநம் மறத்ற்கியலாது. தொழிலாளரிடையே முதன்முதல் பகுத்தறிவுப் பிரசாரம் செல்த உண்மைத் தொழிலாளர் நண்பர் சிங்காரவேலர் என்பதை நாம் மறந்துவிடவில்லை.

கம்யூனிசம் என்பதின் உண்மைப் பொருளை நேரில்கண்டு தெரிந்துவந்து கம்யூனிச தத்துவத்தை இந்நாட்டு மக்களிடையே முதன்முதல் பரப்பிவிட துணிவுகொண்டு கம்யூனிசம் என்றும் தொழிலாளர் உரிமையென்றும் கூட்டங்களில் முழக்கமிட்டு அடக்கு முறைக்கு ஆளாகிய திராவிடப் பெரியார் **ஈ. வே. ரா.** அவர்களை மேநாளாகிய இன்று போற்றிப்புகழ்வோமாக!

இந்நாட்டின் சமுதாய அமைப்பு முறையில் மேல் கீழ் நிலைமைகள் இருக்கும் வரையிலும், வேலை செய்யும் சாதியார் என்றும் வேலைசெய்யாது பொழுது போக்கும் சாதியாரென்றும் பாகுபாடு இருக்கும் வரையிலும், இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப்பற்றி நினைக்க முடியாது என்ற உண்மையை நீதிக்கமிஷனிடம் கூறி தொழிலாலர்கள் மேண்மைக்கு பாடுபட்ட **டாக்டர் டி. எம். நாயர்** அவர்களை தொழிலாளர்கள் மறந்துவிடவில்லை. 1922ம் ஆண்டில் ஏற்பட்ட பாக்டரி சட்டம் நாயர் அவர்களின் உண்மைக் கூற்றுகளை அப்படியே ஏற்றுக் கொண்டதும் இவன் கூறுவது கடமையாகும்.

இப்படியாகத் தொழிலாளரின் உரிமை நாளாகிய இன்று திராவிட இயக்கம் தொழிலாளருக்குப் புரிந்துவந்த, வரும் சேவையை எடுத்துக் கூறும்போது திராவிட இயக்கத்திற்கும்—தொழிலாளருக்கும் உள்ள உறவை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

மேநாளை எப்படி லெனின் சுதந்திராப் போராட்ட நாளாகவும், மக்கள் அரசியல் விடுதலை நாளாகவும் பயன்படுத்திக் கொண்டாரோ, அதே போன்று திராவிட இயக்கம் மேநாளை திராவிட சுதந்திர நாளாக கொண்டாடி தனித் திராவிட சுய ஆட்சிக்குப் பயன் படுத்திக் கொள்கிறது என்பதை தொழிலாளர்கள் உணரவேண்டும்.

வேலைநேர பிரச்னையிலும், ஊதிய உயர்வுப் பிரச்னையிலும் தன் முழு ஆதரவையும் தந்துவரும் திராவிடர் இயக்கமானது, திராவிட நாடு திராவிடருக்கே என்ற சுதந்திர முழக்கத்தை எழுப்பிவிடுவது ஏனென்ருல் தொழிலாளர்களாக இருந்து உழலும் திராவிடப் பெருங்குடி மக்களை சுதந்திர மக்களாகத் திகழும்படிச் செய்ய வேண்டும் என்ற உன்னதக் கொள்கையினுலேதான். செயற்கை முதலாளித்துவத்தோடு கூட, பிறவி முதலாளிந்துவத்தையும் அழித்து ஒழிப்பது திராவிட இயக்கத்தின் குறிக்கோளாகும்.

இவ்வுண்மையை உணர்ந்து, திராவிடத் தொழிலாளர்கள், திராவிட இயக்கத்தில் பங்கு கொண்டு, திராவிட நாடு திராவிடருக்கே ஆகும்படி செய்ய வேண்டிய பிரதிக்னையை மே நாளாகிய இன்று எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

—திராவிடப்பித்தன்

**அடுத்த வாரம்: திராவிடன்**

சேலம் மாநாட்டு நிகழ்ச்சிகள் முழுதுந் தாங்கி பிரத்யேக வெளியீடாக 16 பக்கங்களுடன் வெளிவரும், விலை: 4 அணா.

# நேருவின் இந்தியா!

ஆ. மீ. அலி சேக்மன்சூர்

உலக உத்தமர் காந்தியார் ஒரு தடவை, வானத்தைச் சுட்டிக் காட்டியபடியே தன் நண்பரொருவரிடம் கேட்டாராம்! "டிக்கன்ஸ் எழுதியுள்ள நாவலில் ஒரு குழந்தை வருகிறது. அது தன் தாயிடம், வானத்தைச் சுட்டிக் காட்டி, தான் அங்கே போகமுடியுமா என்று கேட்கின்றது- இதை நீங்கள் படித்திருக்கின்றீர்களா? அதோ அந்த குழந்தையைப் போலவே, எனக்கும் அந்த வான மண்டலத்துக்கு யாத்திரைசெய்ய ஆசையாய் இருக்கிறதே!" காந்தியார் தன் நண்பரொருவரிடம் இப்படிச் சொன்னாராம்!

"காந்தியாருக்கு குழந்தைகள் என்றாலே உயிர். குழந்தைகளோடு பழகுவதில் அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? இதோ அவருடைய குழந்தை உள்ளத்தைப் பாருங்களேன். வான மண்டலத்துக்குப் போக வேண்டுமாம்! ஆகா! எத்தகைய குழந்தை மனம்?;'

தேசீயத் திருவாளர்கள் இப்படியெல்லாம் பேசுவார்கள், மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்தைச் சுட்டிக் காட்டி! வானளவப் புகழ்வார்கள். மண்டபம் எழுப்புவார்கள். காந்தியாரை மண் பொம்மையாக்கு வார்கள்! அதிலே மலர் மாலை சூட்டி முப்பத்து முக்கோடி பரமாத்மாக்களுடன் அவரையும் ஒன்றாகச் சேர்த்துவிடுவார்கள்! ஆனால் அவர் சொன்னதை, வாழ்ந்த விதத்தை எண்ணிப் பார்க்க மாட்டார்கள். எண்ணிப் பார்க்காத காரணத்தால் பேசவும் மாட்டார்கள். பேசாத காரணத்தால், அதன் வழி, நடக்கவும் மாட்டார்கள்!

பச்சிளங் குழந்தைகளின் மீது பற்றும் பாசமும் கொண்டு, குழந்தை மனதுடனே, எந்த காந்தியார் வாழ்ந்துவந்தாரோ, அந்த காந்தியாரின் நாட்டிலேதான், அந்த காந்தியாரின் வாரிசுகள் என்று கூறிக்கொள்வோர் பரிபாலனம் செய்யும் இந்த புண்ணிய பூமியிலேதான், இன்று வீதியிலே விம்மும் குரலுடன், ஆனால் வேறு வழியற்று, குழந்தைகளை விற்பனை செய்யும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த நாட்டிலேதான், பெற்றெடுத்த தாயும், பேணிக் காக்கவேண்டிய தந்தையும் ஒருமனப்பட்டு, மழலைமொழிக் குழந்தைகளை, கிணற்றிலோ, ஆற்றிலோ, அல்லது ஆழ்கடலிலோ, வீசியெறிய மனமின்றி, ஆனால் வேதனை தீர்க்க மார்க்கமின்றி, வீசியெறிந்து, விழிகளிலே நீர்ததும்ப வீடுதிரும்பும் காட்சிகள்! இம்மட்டோ! தாய் யாரோ, தந்தை யாரோ, என்ற நிலையிலே, குப்பைத் தொட்டியிலே குவாகுவா என்று கதறியழும் குழந்தைகளின் படப்பிடிப்பு இந்த நாட்டிலேதான்! அதுவும் காந்தியாரின் திருநாமத்தைச் சொல்லி வாழ்வு நடத்தும் தேசியவீரர்கள் ஆட்சியிலேதான்!

"எந்த இந்தியாவில் பஞ்சை பராரின் சொல் அம்பலம் ஏறுமோ, எந்த இந்தியாவை அவர்கள் தமது என்று எண்ணுகிறார்களோ, அந்த இந்தியாவுக்காகவே நான் உழைப்பேன்"

இதனை காந்தியார் அன்று சொன்னார். இன்று காந்தியார் உயிரோடு இல்லை; இருந்திருந்தால் 'நான் என்ன எண்ணி உழைத்தேனே, அல்லும் பகலும் அருப்பாடுபட்டு வாழ்ந்தேனே, அந்த எண்ணம் ஈடேறவில்லையே என்று கூறி கண்ணீர்தான் வடித்திருப்பார். ஆம் காந்தி மகாத்மாவின் வைரமொழிகளை துச்சமென, மதித்து தூக்கி எறிந்தார்கள் நேரு குழுவினர்! காங்கிரஸ் மெய்யன்பர்கள் மறந்த அளவுடனேவாவது நின்றதா நிலைமை? காந்தியாரின் நேரடி வாரிசு என்று போற்றிப் புகழப்

பட்ட நேரு பண்டிதரே காந்தியாரின் சொற்களை மறந்தார்; அலகாபாத் பண்டிதர் காந்தியை மட்டுமா மறந்தார்? தன்னையே அவர் இப்பொழுது மறந்து விட்டார்! ஆம்! பொது மக்களின் சர்க்கார் எதுவாக இருக்க முடியும் என்பதை அவர் ஒரு காலத்திலே உணர்ந்திருப்பதை நாம் மறக்கவில்லை. மறைக்கவுமில்லை.

"நலிந்துபோன கோடிக்கணக்கான மக்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்கும் சர்க்கார்தான் பொது மக்களின் சர்க்காராக இருக்க முடியும். இந்த நலனைக் கவனிக்காத எந்த சர்க்காரும், பொதுஜன சர்க்காராக இருக்க முடியாது"

இவை பண்டித நேரு அன்று சொன்ன—ஆனால் இன்று மறந்திருக்கிற சொற்கள்! தன்னுடைய கடந்த கால சொற்களை சற்று நினைவுபடுத்திப் பார்ப்பாரேயானால், நேரு பண்டிதர் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வந்திருப்பார். வந்து சாகை வேண்டும். நலிந்துபோன கோடிக்கணக்கான மக்களுக்கு, நல்வாழ்வு தேடிக்கொடுக்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்றாத தன்னுடைய காங்கிரஸ் சர்க்கார், சந்தேகத்துக்கிடமின்றி, பொதுஜன சர்க்காரில்லை--பொதுஜன சர்க்காராக இருக்க முடியாது என்ற உண்மையை—முடிவை—நேருஜி அவர்கள் ஒப்புக்கொண்டு தானாகவேண்டும்.

அதுமட்டுமா? பண்டித நேருவின் கடந்த கால வாழ்க்கை ஏட்டின் மற்றொரு பக்கத்தை புரட்டிப் பார்ப்போம். பதினெட்டு ஆண்டுகள் கழிந்தோடி விட்டன. —1936—அதே ஆண்டுதான். பண்டித நேரு அப்போது பிரதமராக இல்லை. காங்கிரஸ் தொண்டராக—சுற்றிச் சுற்றி வந்து சூறாவளிப் பிரசங்கம் செய்யும் சுதந்திர வீரனாக இருந்தார்! 1936 அக்டோபர் மாதத்தில் தான் அவர் சென்னைக்கு வந்திருந்தார். ஒரு நாள் காலை எட்டு மணி இருக்கும். காலஞ் சென்ற சத்திய மூர்த்தி அவர்களின் வீட்டிலிருந்து வெளியே வந்து காரில் ஏறப்போகும் சமயம் அப்போது ஒருவர், நேருவிடம் ஏதே ஒன்றை நீட்டினார்.

'என்ன இது?'

"வேறொன்றுமில்லை, இது தாங்கள் தீட்டிய "சமீபக் கறைகள்" என்ற புத்தகத்தின் பிரதி!",

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?"

"இந்த புத்தகத்தில் தாங்கள் தங்களது கையெழுத்தை போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்".

உடனே நேரு தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு "நான் திட்டப்படி கண்டிப்பாக நடப்பவன். கூட்டத்துக்குப் போக இப்போதே நேரமாகிவிட்டது" என்றார்!

"பண்டிட் ஜீ, உங்கள் கையெழுத்தைப் பிச்சை கேட்கிறேன். போடுங்கள்."

"எனக்குப் பிச்சைக்காரர்களைக் கண்டாலே பிடிக்காது. அவர்கள் எனக்கு வேண்டவே வேண்டாம்!" நேரு சற்று கோபத்தோடு கூறினார்

"ஆனால் இந்தியா நிறைய பிச்சைக்காரர்கள்தானே இருக்கிறார்கள்:" அந்த நண்பரும் சற்று குத்தலாகவே கேட்டார்.

"நீர் என்னை அவமதிக்கின்றீர். உமக்கு நான் ஒன்றை மட்டும் உறுதியாய்ச் சொல்ல ஆசைப்படுகிறேன். கேட்டுக்கொள்ளும். எனது இந்தியாவில் பிச்சைக்காரர்களுக்கு இடமே கிடையாது. பிரிட்டிஷ் இந்தியாவில் வேண்டுமானால் அவர்கள் இருக்கலாம்"—நேரு அளித்த பதில்தானிது.

பண்டித நேருதான் இப்படிச் சொன்னார்! 1954ல் அல்ல. ஆனால் 1936ல்! அப்போது ஆண்டது வெள்ளைக்கார ஏகாதிபத்தியம். ஆகவே அப்படிச் சொன்னார்! இப்போது ஆள்வது நேரு ஏகாதிபத்தியம்! ஆகவே அப்படிச் சொல்ல மாட்டார் இப்போது! அது மாத்திரமல்ல. சொன்னதை எண்ணிப் பார்க்கவும் மாட்டார், அதனையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டாமா என்று யாராவது எடுத்துச் சொல்லிவிட்டாலோ, இருக்கவே இருக்கிறது 'நான்ஸென்ஸ்' என்பதில் துவக்கி பைத்தியக்காரர்கள் என்ற மதுரமான—நேருவுக்கே உரித்தான வார்த்தைகள்—அதனை அவர் பயன்படுத்தத் தவறவும்மாட்டார்!

"எனது இந்தியாவில் பிச்சைக்காரர்களுக்கு இடமே கிடையாது. பிரிட்டிஷ் இந்தியாவில் வேண்டுமானால் அவர்கள் இருக்கலாம்!"

எவ்வளவு அருமையாகச் சொல்லியிருக்கிறார் காந்தியின் வாரிசு. ஆனால் அதனை இன்றுதான் எண்ணிப் பார்த்தாரில்லை. நேருவின் இந்தியாவில் பிச்சைக்காரர்கள் பிரச்னை சட்டசபை பிரச்னையாக மாறி—பிச்சைக்காரர்கள் மாநாடே நாட்டிலே நடக்கக்கூடிய அளவுக்கு நிலைமை படுமோசமாகி விட்டது. நடை பாதையிலே நடக்க முடியாத அளவுக்கு பிச்சைக்காரர்கள் கூட்டம். வீதியிலே பிணக் குவியல்! இங்கே திரும்பினால் 'ஐயோ பசிக்கிறதே' என்ற குரல்! அங்கே பார்த்தால் 'அம்மா சாப்பிட்டு நாலு நாளாகிறதே என்ற வேதனை கீதம்! இவையெல்லாம் பிரிட்டிஷ் இந்தியாவிலல்ல! ஆனால் நேருவின் இந்தியாவில்! பொது மக்கள் சர்க்கார் எது என்பதற்கு இலக்கணம் வகுத்தவர் முகாம்கள் ஆளும் இந்தியாவில்! தென்னாட்டிலேயுள்ள மரங்களிடம் கேட்டால், அவைகள் கூறும் நேருவின் இந்தியாபற்றிய விளக்கத்தை. சோற்றுக்கில்லாமல் வாடியலைந்து, கடைசியிலே தங்களது இறுதி மூச்சை எங்களுடைய கிளைகளிலேதான் விட்டுச் சென்றன ஏராளமான குடும்பங்கள் என்று அந்த மரங்கள் கூறும் நேரு நாட்டின் சோக நாடகத்தை. வேலையின்றித் தவித்தோர் விழிகளிலே நீரோடு வந்து தங்களோடு வந்து சங்கமமான நெஞ்சுருக்கும் கதைகள் பல சொல்லும், பாழுங் கிணறுகளைக் கேட்டால்.

இவைகள் பிரிட்டிஷ் இந்தியாவிலல்ல! "நேருவின் இந்தியாவில் பிச்சைக்காரர்களுக்கு இடமே கிடையாது" என்று எந்த நேரு 1936-ல் சொன்னாரோ, அதே நேருவின் இந்தியாவில்தான் இந்த வேண்டாத காட்சிகளெல்லாம்! "நேருவின் இந்தியாவில் பிச்சைக்காரர்களுக்கு இடமே கிடையாது.' நேரு உண்மையைத் தானே சொல்லியிருக்கின்றார். "இடமே கிடையாது" ஆம். பிச்சைக்காரர்களுக்கு இடமே கிடையாத அளவுக்கு பிச்சைக்காரர்கள் இந்த நாட்டிலே—நேருவின் இந்தியாவிலே அதிகரித்துவிட்டனர்.

நாடாளத் தகுதியற்றவர்கள்—என்றாலும் நல்ல தம்பிகள் என்று தங்களை அழைத்துக் கொள்ள தவறாதவர்கள். பஞ்சத்தையும் பட்டினியையும் போக்காதவர்கள். என்றாலும் பஞ்சாங்கம் பார்த்து பாராள வந்த புத்திசாலித்தனமான தெய்வீக சர்க்கார் இது தான் என்று சொல்லிக்கொள்வ

# பாராளவந்தோரே பாட்டாளி துயர் தீர்ப்பீரோ?

பன்னெடுங்காலமாக வெற்றிலைத் தொழில் தமிழ்நாட்டின் முக்கிய விவசாயத் தொழிலாக யிருந்துவருகிறது, சேலம் மாவட்டத்தின் காவிரி பாயும் பிரதேசமான நாமக்கல் வட்ட தென் பகுதியிலிருக்கும் பொத்தனூர், வேலூர், பாண்ட மங்கலம், மோகனூர் ஆகிய பெருங் கிராமங்களும், திருச்சி கரூர் வட்ட புகளூர் சுற்றுப்பகுதிகளும் வெற்றிலைத் தொழில் ஒன்றையே நம்பி உயிர் வைத்திருப்பனவாகும்.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அனுப்பப்படுவதால் ரயில் மூலமாகவும, இலங்கை மலேயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் கப்பல், விமானம் மூலமாகவும், வணிகப் பொருளாதலால் வரி மூலமாகவும் வெற்றிலை, அரசாங்கத்திற்கு நல்லதொரு வருமானத்தைக் கொடுத்து வருகிறது, இத்தொழிலால் இப்பகுதி மூலமாக மட்டும் ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் மேலாக செலவாணி (*Transaction*) ஆகிறது. வெற்றிலைப் பயிரிடப்படுவதால் நிலத்தின் தரமும் வளமும் உயர்ந்து வருகிறது இதன் காரணமாக இப்பகுதியிலிருக்கும் நன்செய் நிலம் ஒரு ஏகர் 20லிருந்து 25 ஆயிரம் ரூபாய் வரை விலையாகிறது, வெற்றிலைக்கொடி காலில் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலையிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு ஒரு ஏகர் கொடிக்காலுக்கு முட்டு வழிச்செலவு ரூ 7000 ஆகிறது, ஒரு ஆண்டுக்குப்பிறகுதான் பலனை எதிர்பார்க்க முடியும். வெற்றிலை இரண்டரை ஆண்டு பயிராகும்.

ஆனல் கடந்த இரண்டாண்டுகளாக வெற்றிலைத் தொழிலுக்கு நலிவு ஏற்பட்டுள்ளது. செழித்து வளர்ந்து பலன் தரும் காலத்தில் வெற்றிலைக் கொடி திடீரென காய்ந்து வருகிறது. இதனுல் உற்பத்தியாளர்கள் பாடுபட்டும் பலன் காணுதவர்களாக விளங்குவதோடு கடனாளிகளாகி மனைகளை ஜப்தியில் இழக்கநேரிடுகிறது. இதன் புள்ளி விவரங்கள் அரசாங்க இலாக்காக்களில் இருக்கின்றன. கோவை விவசாய இலாக்கா உதவி டைரெக்டரும், மாவட்ட விவசாய அதிகாரியும் நலிந்து போன கொடிகளைப் பார்வையிட்டு இது ஒரு தொத்து நோய் என்றும், இரண்டு மருந்து வகைகளைத் தெளித்து நிலைமையை சமாளிக்கும்படியும் கூறிச் சென்றுர்கள். அவர்கள் கருத்துப்படி மருந்து வகைகளைத் தெளித்தும் பயனில்லாமற் போய்விட்டது.

அவர்கள் குறிப்பிட்ட மருந்து வகைகள் (*Zinc Sulphate. Copper Sulphate, Burnox*) இவைகளை அவர்கள் குறிப்பிட்ட அளவில் சுண்ணாம்பு நீரில் கலந்து அவர்கள் அறிவுரையின்படி தெளிக்கப்பட்டும் நனைக்கப்பட்டிருந்தும் பயனில்லாமல் போய்விட்டது.

இக்குறையை ஆச்சாரியார் மந்திரி சபையினருக்கு இப்பகுதி வாழ் மக்கள், வரவேற்பு மூலமாக எடுத்துரைத்து நீக்க வேண்டுமென வேண்டிக் கொண்டனர். அமைச்சர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. நலிவினுல் மக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள் என்பதைக் காட்ட புள்ளிவிவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொழிலின்றி மக்கள் வறுமையால் வாடுகின்றனர். வெற்றிலைத் தொழிலாளர்களுக்கு வாழ வழிகாட்டுமாறு எல்லா கட்சி தலைவர்களையும் $1\frac{1}{2}$ லட்சம் மக்கள் சார்பில் பொத்தனூர் தி. மு. கழகம் கேட்டுக்கொள்கிறது. கொடியை அரித்து வரும் கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளை ஒழித்துக்கட்ட அரசாங்கம் எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். மாதிரிப் பண்ணைகளை அரசாங்கமே இப்பகுதிகளில் ஏற்படுத்தி வெற்றிலை விவசாயிகளுக்கு வழிகாட்டுவதன் மூலம் வெற்றிலைக்கேற்பட்டுள்ள தொத்து நோயைப் பரவவிடாமல் தடுக்கமுடியும்.

**1950—51 ஆண்டுகளில்** (செழிப்பான காலம்)

(1) ஆண்டு ஒன்றுக்கு 1000 ஏக்கர் நிலம் பயிராகிறது

(2) ஒரு ஆண்டுக்கு ஒரு ஏக்கர் குத்தகை 3000 ரூபாய்.

(3) மொத்தம் தொழிலாளர்கள் $1\frac{1}{2}$ லட்சம்

(4) ஆண்களுக்கு தினசரி கூலி 2—0—0. பெண்களுக்கு 1—0—0.

(5) தினசரி ஏற்றுமதியான கூடைகள்(உள் மாகாணம் 3,000. (வெளி மாகாணம்) 10,000.

(6) இறக்குமதியாகும் மூலப்பொருள்கள் ஆண்டு ஒன்றுக்கு: (அ) மலபார் வெற்றிலை காலிக் கூடைகள் ஆண்டு ஒன்றுக்கு 1 லட்ச ரூபாய் மதிப்பு. (ஆ) மலபார் கயிர் கட்டுகள் 50 ஆயிரம் ரூபாய் மதிப்பு. (இ) விருத்தர சலம் வருகம்புல் 10 ஆயிரம் ரூபாய் மதிப்பு. (ஈ) பரோக் மூங்கில் ஒரு லட்ச ரூபாய் அளவில்.

(7) அரசாங்கத்திற்கு வருமானங்கள். (அ) விற்பனை வரி 5 லட்ச ரூபாய் (ஆ) வருமான வரி 2 லட்ச ரூபாய் (இ) ரயில்வே கட்டணம் 5 லட்ச ரூபாய்.

(8) வெற்றிலை வியாபாரிகள்: 200,

**1952—53ம் ஆண்டுகளில்.**

(நோயினுல் பாதிக்கப்பட்டபிறகு)

(1) 100 ஏக்கர்.

(2) 1000 ரூபாய்

(3) 5000 தொழிலாளர்.

(4) ஆண். 0-12-0. பெண் 0-6-0.

(5) உள் மாகாணம் 500—வெளி மாகாணம் 1000.

(6) (அ) ரூ. 5000. (ஆ) ரூ 1000. (இ) ரூ. 500. (ஈ) ரூ. 5000,

(7) (அ) ரூ. 50 ஆயிரம். (ஆ) X (இ) ரூ. 50 ஆயிரம் (ஈ) 20 வியாபாரிகள் மட்டுமே.

எம். ஜெகன்னுதன்,
செயலாளர், தி. மு. கழகம்,
பொத்தனூர், சேலம் மாவட்டம்.

# சிங்க ஏறே சினந்து எழு!

★

நா. புகழேந்தி, தூத்துக்குடி.

★

மின்வெட்டும் போர்வாளே, உழைப்பவனே!
மேதினக் கொளியூட்டும் பெருநிலவே!
விண்முட்டும் மாளிகைகள் ஆக்குங்கையே
வீரனே! இளந்தோழா! சிங்கஏறே
உன்னுட்டில் உன்வீட்டில் இருளின் தேக்கம்
ஊடாடிக் கிடப்பதையேன் அறிந்தாயில்லை?

பொன்சேர்த்தாய் பொருள்சேர்த்தாய் மூச்சடக்கிப்
புதைந்தகடல் முத்தெடுத்து அணியும்சேர்த்தாய்
கன்னலல்ல எனதுவுயிர் என்றே எண்ணிக்
கடும்வெயிலில் ஏருழுதாய் கதிரும்தந்தாய்
இன்னலிலே உன்குடும்பம் உனதுநாடு
இருக்கின்ற கோரமதை ஏனறிந்தாயில்லை?

பட்டினியால் வாடுகின்றுர், உன்து நாட்டார்;
பாடுபடும் செல்வமெல்லாம் வடவர் தங்கள்
பெட்டியிலே பூட்டுகின்றுர்; அந்தோ! அந்தோ!
பேசாத ஊமைகளாய்க் கற்சிலையாய்
பட்டமரம் உற்றதுணை யற்றது போல்
பார்க்கின்றுர், வேர்க்கின்றுர் துன்பம் துன்பம்!

உன்னுட்டைத் திராவிடத்தை வடவர் கூட்டம்
உறிஞ்சிமிகக் கொழுப்பது போல், செல்வர் தாமும்
பொன்னுட்டைச் சுடுகாடாய் ஆக்கவெண்ணிப்
போகின்றுர் வடவர்பின், அழித்தொழிக்கும்
மின்வெட்டுப் போர்வாளே திறமையெங்கே?
மிதித்திடுவாய் அவர்கொள்கை, மேதினத்தில்.

## மலையேறிவிட்டது!

தொழிலாளரை, உப்பு புளி போல் குறைந்த விலைக்கு மார்க்கெட்டில் வாங்கிவிடக் கூடிய பண்டங்களாக கருதிய காலம் மலையேறிவிட்டது. நெற்றி வியர்வை நிலத்தில்விழ உழைத்து, இலாபம் சம்பாதித்துக் கொடுத்தவர்களை முதலாளிகள் தங்களுடன் சமபங்காளிகளாகவே பாவித்தல் வேண்டும்.

—ஜகஜீவன்ராம்
டெல்லி சர்க்கார் அமைச்சர்

## நேருவின் இந்தியா...தொடர்ச்சி

தில் பெருமையடையக் கூடியவர்கள். வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க வழியற்றவர்கள் என்றபோதிலும், வீரமாகப்பேசி, மாற்றுக் கட்சித் தோழர்களை காரணமின்றி தாக்குபவர்கள். 'வினைச்சலில்லையே நீர்ப்பாசன வசதி செய்து தந்தால் என்ன' என்று கேட்டால், மழையில்லை என்று கூறுவார்கள். ஏனய்யா மழையில்லை எனக் கேட்டால், 'நாட்டு மக்களிடையே ஒழுக்கமில்லை. ஆகவே மழையில்லை' என்பார்கள். குழந்தைகளை விற்கும் வேதனைச் செயல் நடைபெறுகிறதே. இருக்கலாமா இந்த நிலை என்று கேட்டால், "வேதனைச் செயலல்ல தேவைக்கு அதிகமான குழந்தைகளைப் பெற்றவர்கள், குழந்தையே இல்லாத - ஆனல்- குழந்தையை விரும்புகிற பிறருக்கு கொடுப்பதை குழந்தை விற்பனை என்று எப்படிச் சொல்லலாம் என்று வீம்பு பேசக்கூடியவர்கள்.

ஆம் தேசியவாதிகள் என்ற பெயரால்—காந்தியாரின் சீடர்கள் என்ற பெயரால்—காங்கிரஸ்காரர்கள் என்ற பெயரால்—பாரதமாதாவின் குழந்தைகள் என்ற பெயரால் நாடாள வந்தவர்கள்! மொழிவழி மாகாணம் பிரியவேண்டியதுதான் என்று ஒரு காலத்திலே தீர்மானம் நிறைவேற்றியவர்கள்; அதே மொழிவழி பிரியவேண்டுமென்ற கிளர்ச்சியை. தற்போது 'குறுகிய மாகாணப்பித்து' என்று தூற்றித் திரிபவர்கள.

இவர்களத்தனைப் பேரும் வாழ்கின்றுர்கள்—பைத்தியக்கார விடுதியிலே அல்ல. ஆனல் வெளியுலகத்திலேதான். பைத்தியக்கார விடுதியிலே இருப்பதற்குப் பதிலாக, வெளியுலகத்திலே இவர்களெல்லாம் எப்படி இருக்கின்றுர்கள் என்று, பொதுமக்கள் ஆச்சரியப் பட்டுக் கொண்டிருக்கும் போதே, இதனையெல்லாம் மறந்து நேரு நம்மைப்பற்றி ஆச்சரியப்படுகின்றுராம்! "திராவிட இயக்கத்தாரெல்லாம் பைத்தியக்கார விடுதியில் இல்லாமல், வெளியுலகத்திலே எப்படி இருககிறுர்கள் என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது" நேரு கூறியிருக்கிறுர் சிதம்பரத்திற்கு வந்த சமயத்திலே. பாவம் பரிதாபம்!

அன்றிருந்த நேரு இன்றில்லை. அன்று சொன்னதை இன்று எண்ணிப் பார்க்கவில்லை நேரு. அன்று, தான் சொன்னதையும், இன்றுள்ள நேருவின் இந்தியாவையும், அவர் தன் மனக்கண் முன் சற்று கொண்டு வருவாரேயானல், அவரே சந்தேகப்பட்டிருப்பார், தான் வெளியுலகிலே நடமாட வேண்டியவரா அல்லது வேறு எங்கேயாயினும்......? நாம் ஏன். அதைப்பற்றி கூறவேண்டும். மக்களே தீர்ப்புக்கூறட்டுமே.

# உலகின் முதல் விஞ்ஞானி

வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. ஆடவர் பெண்டிர் பலர் குளிப்புத் துறையில கழுத்தளவு நீரில் இருந்து ஆர அமர குளித்துக் கொண்டிருந்தனர். நகரின் பலபகுதிகளில் தின்பண்டம், தணிமணிவிற்பவர்களைச்சுற்றிலும் சிறுவர் சிறுமியர் கூடி பொருள்கள் விலைகேட்டுக் கொண்டிருந்தார்கள். வயதுசென்ற சிலர் ஆங்காங்கே நிழலில் தங்கி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று ஒரு மூலையிலிருந்து ஒரு அமளி குமளி ஏற்பட்டது. அமைதி குலைந்தது. சிறுவர் சிறுமியர் 'கூகூ' என்று இரைந்தனர் பல பெண்கள் 'ஐயோ' இதென்ன, இப்படியும் உண்டா? என்று முகத்தை மூடித் தங்கள் வியப்பைக் காட்டினர்.

கூடிய கும்பலைக் கவனிக்காமல் ஒருவன் அறைகுறை ஆடையுடன்—ஈரமான உடலைக்கூட கவனிக்காமல்—தலைமயிரிலிருந்து சொட்டும் தண்ணீரைப் பொருட்படுத்தாமல் ஓடினான்,

நாகரீக சமுதாயத்தில் அடிக்கடி காணாத காட்சி-ஆகவே சிறுவர் சிறுமியர் வேடிக்கை பார்த்தனர். நல்லவர்கள் எவரும் ஒத்துக் கொள்ளாத — இணக்கம் அளிக்காத (பலமாகக் கண்டிக்கிற) செயல் அதனாலேயே பெண்டிர் முகத்தைக் கோணிக்கொண்டு வியப்பைத் தெரிவித்தனர்.

அவன் வீணனாயிருக்க முடியுமா? முடியாது. சுரகூசர் நகரம் செல்வர்கள் வாழ்ந்த நகரம். சட்ட திட்டங்கள் உள்ள நாகரீக நகரம். வீணனும் கூச்சமில்லாமல் அங்கே இப்படி நடந்துகொள்ள மாட்டான்.

அவன் பைத்தியக்காரனாயிருக்க முடியுமா? அப்படித்தான் இருக்க வேண்டும். பைத்தியக்காரனாயில்லாவிட்டால் பேய்பிடித்தவனாக, வெறி பிடித்தவனாக இருக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் எண்ணினர். இல்லாவிட்டால் அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

சுரக்கூசா அந்நாளில்—இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு மூன்—உலகத்தின் முக்கிய துறைமுகங்களில் ஒன்று, சீனத்திலிருந்து பட்டு, தமிழகத்திலிருந்து முத்து, பொன், சங்கு, மிளகு, எகிப்திலிருந்து தந்தப் பேழைகள் அங்கு வந்து இறங்கின. பதுமை விளக்குகள் வண்ணத் திரைச் சீலைகள் அங்கிருந்து ஏற்றுமதியாயின. கப்பலில் ஏற்றும்சரக்குகளையும் கப்பலிலிருந்து இறங்கிய சரக்குகளையும் மாட்டுவண்டிகள் நகருக்குள் ஏற்றிச் சென்றன.

அரை ஆடையுடன் சென்ற காட்சியைப் பலர் அடுத்த நாளே மறந்து விட்டனர். ஆனால் அதைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்த உள்ளம் ஒன்று இருந்தது அதுதான் அந்த நகரத் தலைவன் உள்ளம். ஊர் காவலன் அவனிடம் சென்று 'நகரில் ஒரு வெறியன் அரையாடையுடன் தெருவில் ஓடினான்' என்று குற்றம் சாட்டினான்.

'அவன் பெயர் என்ன?' என்றான் தலைவன்.

'ஆர்க்கிமீடிஸ்!'

'ஆ, ஆர்க்கிமீடிஸா? எங்கே அவன்?'

'காவற் கூடத்தில்!'

தலைவன் காவற் கூடத்துக்கு ஓடினான் ஆர்க்கிமீடிஸ் கரி கொண்டு தரையில் கிறுக்கிக்கொண்டிருந்தான்.

தலைவனைக் கண்டதும், அவன் கண்டு பிடித்துவிட்டேன் நண்பரே! கண்டு பிடித்து விட்டேன்' என்று கூவினான்.

தலைவர் முகம் மகிழ்ந்தது. அவர் அவனைக் கட்டிக் கொண்டார்.

சுரகூசாவின் வாணிகர் குழு கட்டி கட்டியாகத் தங்கம் வாங்கி ரோம் நகரத்துக்கு விற்றுப் பெரும் பொருள் ஈட்டியது. ஆனால் அடிக்கடி பித்தளையைத் தங்கம் என்று கொடுத்து, வெளி நாட்டு நாடோடிகள் அவர்களை ஏமாற்றினார்கள்.

'அதைக் கண்டு பிடிக்க ஒரு வழி சொல்லு' என்று தலைவர் ஆர்க்மீடிஸைக் கேட்டிருந்தார்.

ஆர்க்கிமீடிஸ் கண்டு பிடித்த வழிதான் நீர் எடை. தண்ணீரில் தங்கத்தை நிறுத்தால் எடை குறையும் மொத்த எடையில் இவ்வளவு குறைந்தால் தங்கம்;அதற்குமேல் குறையுந்தோறும் அதில் வேறு பொருள் கலந்திருக்க வேண்டும்? என்று காண்பதே ஆர்க்கிமீடிஸ் கண்டு பிடித்த புது முறை.

குளிக்கும் சமயத்தில் இதைக் கண்டு பிடித்த மகிழ்ச்சி யின்பத்தில்தான் அவர்.



பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்

தலை துவட்டுவதை மறந்து, மேலாடையை மறந்து ஓடினார்.

அந்த ஆர்வத்தில் தான் காவல்கூடத்தில் அடைபட்ட போதும், நிலத்தில் கரி கொண்டு தன் ஆராய்ச்சிகளை நடத்தினார்!

சுரகூசாவின் தலைவன் கண்டெடுத்த கருவூலம் ஆர்க்கிமிடீஸ். ஆபத்து வேளைகளில் அவன் அவரை நம்ப, பயன்படுத்தத் தவறியதில்லை.

புதிதாக எதிர்பாராத ஆபத்து சுரகூசாவுக்கு ஏற்பட்டது. புதிதாக ஒரு வல்லரசு ரோம்—வளர்ந்து வந்தது. அது தங்கம் வெள்ளி குவித்த அரசல்ல, தரைப்படையும் கடற்படையும திரட்டிய ஏகாதிபத்தியம். அது இத்தாலி முழுவதையும் வென்றது. கடல் கடந்து சிசிலி தீவையும் அதிலுள்ள செல்வம் நிறைந்த சுரகூசா நகரையும் விழுங்கத் திட்டமிட்டது.

சுரகூசாவிடம் தங்கம் இருந்தது, தரைப் படை இல்லை. கோட்டை இருந்தது ஆனால் அது சுங்கக்கோட்டை. கப்பல் இருந்தது ஆனால் அது வாணிகக் கப்பல். ரோமரின் கடற் படைகளுக்குமுன், படை வீரர்களுக்கு முன் என்ன செய்வது?

தலைவர் கலங்கினர் ;

'ஆர்க்கிமீடிஸ் நீர்தான் கதி. என்ன செய்யலாம் என்று அவன் கேட்டான்.

கேட்ட பொருள்களெல்லாம் தந்தால், படையில்லாமலே நகரை காக்கிறேன்!

'அப்படியா தாராளமாக எதையும் கேளும்'

அவர் கேட்டதெல்லாம், கம்புகள், ஆணிகள், சில மருந்துகள், சரக்குகள் ஆகியவைகள்தான். சில குடிசைகளும் கோட்டையைச் சுற்றிக் கட்டப்பட்டன.

உரோம கப்பற்படை இறுமாப்புடன் சுரகூசாத் துறைமுகத்தில் வந்தது.

கோட்டையிலிருந்து ஒரு கல் உருண்டது. அதனால் ஒரு கப்பல் கவிழ்ந்தது.

ஒரு படைவீரன் கரையில் இறங்கினான். ஒரு நீண்ட கழி அவனை நோக்கி வந்தது. இன்னதென்று பார்க்குமுன் அது அவன் கழுத்தைத் திருகிற்று.

ஒரு சிறுபடை கோட்டையில் ஏறிற்று திடுமென ஏதோ கொட்டப்பட்டது. அது கொதிக்கும் எண்ணெய். வெந்து மாண்டவர் போக மற்றவர் மீண்டனர் ஓடினர்.

படையில்லை படைவீரர் இல்லை. கப்பல்கள் இல்லை. மாயமாகத் தம்மை எதிர்த்த பகைவன் யார் என்று அறியாமல் உரோமர் திகிலுடன் ஓடினர்.

சுரகூசா நகரம் ரோம் நகருக்கு அஞ்சாமல், இறுமாப்புடன் பின்னும் பணம் திரட்டிக் கொக்கரித்தது.

ஆனால் சில நாட்களுக்குள் தலைவர் இறந்தார். புதிய ஆட்சி ஏற்பட்டது.

ஆர்க்கிமீடிஸின் தேவையை எல்லாரும் மறந்து விட்டனா. அவனும் கிழவனானான்.

புதிய தலைவர் பவனி சென்றார். காவல் வீரர் அவன் முன்னே குதிரை மீது சென்று வழி விலக்கினர்.

பாதையில் ஒருவன் நின்று ஏதோ கூறல் கீறிக்கொண்டிருந்தான். அது ஆர்க்கிமீடிஸ் தான்.

குதிரைவீரன் 'யாரடா, விலகிப்போ' என்றான்

ஆர்க்கிமீடிஸ் ஆராய்ச்சி உலகத்தில் இருந்தான்.

குதிரையின் காலடி அவனை எற்றியது.

அவன் விழுந்தான். இறந்தான். அவன் ஆர்க்கிமீடிஸ் என்பதையே சுரகூசா மறந்திருந்தது.

ஆனால் ரோம் ஆர்க்கிமீடிஸை மறக்கவில்லை. ரோம் நகரின் ஒற்றர்கள் அவன் இறந்ததை உணர்ந்து தாய்நாட்டுக்குத் தெரிவித்தனர்.

அடுத்த ஆண்டே சுரகூசா நகரம் அதன் செல்வம் ரோம வீரரால் சூறையாடப் பட்டது.

கோட்டைகளில் பதுக்கி வைக்கப்பட்ட பயங்கர ஆயுதங்களை முதல் முதல் கண்டு பிடித்தவன் ஆர்க்கிமீடிஸ்தான். உரோமர்கள் அதை அவன் சீடர்களிடமிருந்து கற்று உலகில் பரப்பினார்கள்.

பண்டைத் தமிழகத்திலே உரோமர்களே கோட்டைகளில் இத்தகைய பொறிகளை வைத்து இயக்கினார்கள் என்று சங்கநூல்கள் முழங்குகின்றன.

உலகின் முதல்விஞ்ஞானி ஆர்க்கிமீடிஸ்—உலக மறியாமலே வாழ்ந்து மாண்டகதை இது.

★

# நிலவில்..!

மா. தங்கவேலர்

அந்தப் புதுத் தம்பதிகள், சோலையிலே அடி எடுத்துவைத்துக்கொண்டிருந்தனர். தேன் நிலவொளி தென்றலோடு கலந்து அவர்களின் இன்னுடல்களிலே மோதி வரவேற்றுக் கொண்டிருந்தது. நடந்து சென்ற இருவரும் மணல் மேட்டிலே அமர்ந்துகொண்டனர். மேலேயிருந்து உதிர்ந்துகொண்டிருந்த முல்லை மலர்கள் அவர்களின் பாதங்களை முத்தமிட்டுக் கொண்டிருந்தன. முத்துமுத்தாக முகத்திலே அரும்பிக்கொண்டிருந்த வியர்வையை கைக்குட்டையால் துடைத்துக்கொண்டே அந்த காந்தச்சிலை பேசத்துவங்கியது...

"அத்தான்! சரியாகக்கூட உணவெடுக்கவில்லையே. காய்ச்சிய பாலைக் கூட டம்ளரிலேயே வைத்துவிட்டு சோலைக்கு அழைத்துவந்து விட்டீர்களே! என்னதான் அவ்வளவு அவசரம். இப்படி வியர்த்துக் கொட்டுகிறதே பார்த்தீர்களா? நல்ல அவசரக்கார அத்தான்!"

"கோபித்துக்கொள்கிருயே கண்ணே காரணமில்லாமல் அழைத்து வருவேனு? வியர்வை கொட்டி உனது மேனி மெருகை அழித்து விடுமேவென பயப்படுகிருயா? அப்படியானல் உனது பரம்பரைக் குணம் இப்போதும் போகவில்லை என எடுத்துக்காட்டுகிருய் போலும். உன் தந்தைதான் மாளிகை வாசி...மிடுக்கோடு வாழ்பவர்...தனது குண இயல்புக்கேற்ப மேனிமெருகைக் காப்பாற்றிக்கொண்டிருப்பவர். அவரது பாதையை இன்னும் நீ மறக்கவில்லையா? குடிசையிலே பதுங்கிக்கிடந்த என்னை நீ கண்டாய்....காதலித்தாய்....ஜாதித் தடுப்புகளும் மோதிப்பார்த்தன...என்றாலும் திருமணம் முடித்துக்கொண்டோம். ஏழைதான் நான்—என்னிடம் அறிவுத்தெளிவு இருப்பதாகக் கூறினய்...!"

"அத்தான்... பிரசங்கமே செய்யக் கிளம்பி விட்டீர்களே! இது உங்களது வழக்கமான பல்லவி! வியர்த்துக் கொட்டுகிறதே யென்று நான் கூறியதற்கு இவ்வளவு நீண்ட பேச்சா? ஏன் வீணுக அப்பாவை இழுத்து வைத்துப் பேசுகிறீர்கள். நாம் எக்கேடுகெட்டால் தானென்ன என்று இருந்து கொண்டா அவரோடு என்னையும் ஏன் ஒப்பிட்டுப் பேசுகிறீரே. நீங்கள் வர்ணிக்கிறபடி என் தந்தை முதலாளித்துவச் சேறு... அதிலே நான் நீங்கள் விரும்புகிற செந்தாமரைதானே! சரி சரி என்ன சொல்ல வந்தீர்களோ அதைச் சொல்லித்தான் முடியுங்களேன்."

"தாமரையே! சாதாரண வியர்வையைப்பற்றி அவ்வளவு நேரம் ஏன் பேசினேன் என்று கூறினயே. காரணம் இல்லாமலில்லை. 'வியர்வையின் கதை'யைக் கூறுவதற்காகத்தான் இங்கே நான் உன்னை அழைத்து வந்திருக்கிறேன்!,"

"வியர்வை...அதற்கு ஒரு கதை... அத்தான் ஆச்சரியமானதாகவல்லவா யிருக்கிறது! எதை எதைப்பற்றி யெல்லாம் கூறியிருக்கிறீர்கள் பேசியிருக்கிறேரும். முன்னரெல்லாம் எனக்கு நீங்கள் படிக்க பல பல புத்தகங்களை மறைவாக அனுப்பி யிருக்கிறீர்களே! புதுமையான தலைப்புக் கொண்ட புத்தகங்கள்...அவற்றை யெல்லாம் படித்துத் தானே யிருக்கிறேன். அவைகளெல்லாம் கூருத கதையையல்லவா நீங்கள் சொல்லப் போவதாகக் கூறுகிறீர்கள். நான் பள்ளியிலே படித்தபோது கூட இந்தக் கதையை யாரும் எனக்குக் கூறவில்லையே!"

"கூறவே மாட்டார்கள்! பள்ளியில் மட்டுமேயல்ல உயர்தர கல்லூரிகளிலும் கூட இந்தக் கதையைக் கூறவே மாட்டார்கள்! உலகமென்னும் அறிவுப் பள்ளியிலே உலவிக் கொண்டிருக்கும் ஆராய்ச்சி ஆசிரியர்கள்தான் அந்தக் கதையைக் கூறுவார்கள், அவர்கள் எனக்குக் கூறியதைத்தான்...இப்போது உனக்குக் கூறுகிறேன். கதை என்றதுமே கதாநாயகன் வருவான் அவன் காதலியும் வருவாள்...இன்னும் யார்யாரோ வந்துபோய் கதையும் ஒரு மாதிரியாக முடியும்...என்று கருதிவிடாதே. நான் கூறப்போவது கற்பனையால் கோர்த்துப் பார்த்த நினைவுப் பின்னலல்ல? நாளும் நாளும் நடந்து கொண்டிருக்கும் கதை. நினைத்தாலே நெஞ்சு குமுறும் நிலை. அந்த வேதனைச் சித்திரத்தைத்தான் இப்போது கூறப் போகிறேன்!"

"அத்தான் வானத்தின் அந்தக்கோடியைப் பாருங்கள் இருண்டு கிடக்கிறது. இடிஇடிப்பதைப் பார்த்தீர்களா... எனக்கென்னவோ அதிர்ச்சியைத் தருகிறது. வீட்டிலே சென்று பேசுவோம் வாருங்களேன்."

"செந்தமரையே! சிந்தை கலங்காதே! முதலாளியின் கர்ஜனையைப் படம் பிடித்துக்காட்டுகிறது, இந்த இடியோசை. முதலாளித்துவம் வீசும் ஆதிக்க வீச்சைப்போலத்தான் இந்த மின்னல் வீச்சும் நான் உன்னிடம் கூறப்போகும் சம்பவத்தை தடுத்து நிறுத்தப் பார்க்கிறது. பயப்படாதே! இடியும்...மின்னலும் சிறிது நேரத்திலே அடங்கிவிடும்—தொழிலாளர் சக்தியிடம் பணிந்துவிடும். முதலாளியைப் போல!"

"அத்தான்! உங்கள் பேச்சே தனிரகம். வார்த்தைக்கு வார்த்தை முதலாளி, தொழிலாளி என்று குழப்பிக் கொண்டேயிருக்கிறீர்களே தவிர...... எடுத்துக்கொண்ட விஷயத்தை மறந்து விடுகிறீர்களே"

"நான் கூறப்போகும் சம்பவத்துக்கு அந்த முதலாளியும்—தொழிலாளியும் தானே காரணஸ்தர்கள். அவர்களைப் பற்றி கூறுமல் என்ன செய்வது. அடித்துப் பணியவைத்த எஜமானர்கள்... ஏழையரின் விழிப்புணர்ச்சியைக்கண்டு அலறியடித்துப் பதுங்கிய நாள் தான் நாளை நம்மை சந்திக்கப் போகிற பொன்னுள்! அந்த நாளிலே உழைப்பின் உருவங்களெல்லாம் உவகையாகிக் கிடக்கும். தர்பார் ராகம் பாடியவர்களெல்லாம் தலை குனிந்து நடக்கும் நாளும் நாளைதான். ஆண்டுக்கொரு முறை இது மாதிரியான பொன்னுள் வந்து வந்து போவதுண்டு. அந்த ஒவ்வொரு முறையும் ஒடிந்த இதயங்கள் உரம்பெற்றுக்கொண்டே வருகின்றன. ஐயாரத்தோடு உலவியவர்கள் நடுநடுங்கிக் கொண்டேயிருக்கின்றனர். ஆண்டுக்கொரு முறை வரும் இந்தப் பொன்விழாவிலே ஆமாம்......மேதின விழாவிலே, வியர்வைசிந்தி தங்களது வாழ்வுக் கதையை நடத்தும் உழைப்பின் உருவங்கள் புதுப்புது திட்டங்களை முடிவாக்கிக்கொள்ளுகின்றன. முதலாளித்துவம் எந்தக் கோணங்களிலே இனி மோதிப்பார்த்தாலும் அதை—அதன் கொட்டத்தை அடக்கியே தீருவதென கர்ஜனை புரிந்து கொண்டுதானிருக்கின்றனர். நாளை வரப்போகும் மேதினம்... எவ்வளவு சுவையுள்ளது எழுச்சிப்படைத்தது என்றெல்லாம் எண்ணி ஏழையின் இதயம் இந்தத் தேன் நிலவின் இரவிலே துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கும். ஆனல், இதே இன்பவேளை மாளிகைவாசிகளுக்கு, மதோன்மத்தர்களுக்கு இவர்களுக்கெல்லாம் தாங்க முடியாத வேதனையைத்தான் தந்து கொண்டிருக்கும்!"

அத்தான்! மே விழாவைப் பற்றியா கூறப்போகிறீர்கள். நான் ஏதோ கதையைக் கூறப் போகிறீர்களோவென்று அசட்டையாக யிருந்தேன். சொல்லுங்கள் அத்தான் உங்களுக்கே உரித்தான அழகுச் சொற்களிலே இனிக்க இனிக்கப் பேசுங்களத்தான். மேவிழாவின் இனிமையை நீங்கள் கூறி நான் கேட்க வேண்டும் போலிருக்கிறது!

நான்கூறி நீ கேட்கவேண்டு மென்பதற்காகத்தானே கண்ணே இங்கு உன்னை அழைத்து வந்திருக்கிறேன். நேற்று நாம் மாலையிலே உலவிவிட்டு வீடு திரும்பும்போது...இந்தச் சமூகம் ஆண்டவனின் படைப்பு அதைகுறை கூறக்கூடாது...என்று ஜீயர் சுவாமிகள் பக்கத்துத்தெரு பஜனை மடத்திலே காலட்சேபம் செய்து கொண்டிருந்தாரே அது உனக்கு நினைவுக்கு வருகிறதா? சமூகத்திலே மேட்டையும் பள்ளத்தையும் படைக்காமல் சமமாகப் படைத்திருந்தால் இந்த ஆண்டவனையும் அவனின் ஏற்பாட்டையும் யார் குறைகூறப் போகிருர்கள். ஜீயர் சாமிகள் நாம் வாழ்கின்ற இந்த நாளிலே மட்டும் அதுபோலக் கூறவில்லை. அவரது பரம்பரை இங்கு மட்டுமல்ல—அகில உலகிலுமே பலபல நூற்றுண்டுகளாக இதே பல்லவியைத்தான் பாடி வருகிறது.

சமூகத்தின் மேட்டிலே உழைக்காது வாழும் சோம்பேறிகள் உலவிக்கொண்டிருப்பதும்...பள்ளத்திலே உழைப்பின் உருவங்கள் பதுங்கிக் கொண்டிருப்பதுமான—ஏற்பாடு ஆண்டவனுல் செய்யப்பட்டது. அந்த முறையை ஒரு குறையெனக் கண்டு யாராவது மாற்றித் திருத்த முயன்ருல் அது ஆண்டவனையே எதிர்க்கும் செயலாகும்...என்றுதான் அன்றிலிருந்தே அபாயக் குரல் கொடுக்கப்பட்டது. சமுதாயம் புதுமை மணம் பரப்புவதாக இருக்க வேண்டுமானல் ...எந்த ஒரு நல்ல சமுதாயத்தை விரும்பி விரும்பி அழைக்கின்ருேமோ அந்த சமுதாயம் பூக்க வேண்டுமானல் முதன் முதலாக சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்கள் அகற்றப்பட்டு சமப்படுத்தப்பட்டாக வேண்டும். இதுதான் சமுதாயத் திருத்தத்திற்கான பாலபாடம்...என்று காலத்தால் வளர்ந்து கொண்டே வந்த அறிஞர்கள் கூறிக் கொண்டே யிருந்தனர். ஆனல் சமுதாய சதிகாரர்கள் கேட்க வேண்டுமே! இது நீதிதானு? என்ற கேள்விக் குரலை மக்கள் மன்றத்திலே நீதிமான்கள் கிளப்பினர்கள். பாதிரிகளும் அவனுக்கு பக்கபலமாக இருந்த பணப் பதுமைகளும் ஓலமிட்டன—தேவகட்டளையை மீறுவதாக.

நாள் முழுவதும் பாட்டாளியை கசக்கியெடுத்து வேலை வாங்குகிருனே முதலாளி என்ற போர்வைக்குள்ளே உலவும் நாசகாரன்—அவனது வெறியை சிறிதாவது மட்டுப்பட செய்து கொஞ்சம் கொஞ்சமாகவாவது அவன் அந்தப் பாட்டாளி வாழ்வின் சுவையை அறியும்படி ஏற்பாடு செய்யுங்கள் என வேண்டுகோளிட்ட அறிஞர் உலகைப் பார்த்துத்தான் பாதிரி சீறினன். எந்தப் பாதிரி...பாவத்தை நீக்கிவிட்டு புண்யத்தைப் புகுத்துகிறேன் என்று கூறினனே அதே பாதிரி ஏழையின் இதயத்திலே முதலாளியால் ஏற்றப்பட்டுவந்த பாவச் சுமையை இறக்கி வைக்க முடியாமல் தத்துவார்த்தம் பேசினன். ஜெபமாலை அவன் கரத்திலே உருண்டு கொண்டுதானிருந்தது. ஏசுவையும்—சிலுவைப் பீடத்தையும் காட்டி அந்த வெள்ளுடையிலே உலவி வந்தவன் போதனை புரிந்து கொண்டுதானிருந்தான். ஆனல் மக்களின் வேதனை போக்க நினைத்தானு! சிற்றிடைகள் சிவந்த அதரங்களைத் திறந்து காட்டியபோது அந்தப் போகப்பூனை சிரித்தது! தூயவரே துயர் துடையுங்களென மக்கள் வேண்டிய பொழுது அந்த 'உத்தமர் சீறினர். பாதிரிகளை பாணமாக வைத்துத்தான் ஏற்றங் கொண்டோர் வாழ்ந்தனர். தங்களது ஆதிக்கக் கோட்டைக்கு பாதிரிகளின் சொல்லோவியத்தைத்தான் அவர்கள் அஸ்திவாரமாக்கிக் கொண்டனர்.

23-ம் பக்கம் பார்க்க


## புத்திர சந்தான எண்ணெய்

பெண்ணின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தை புசித்துவிடுவதினுலும் விபரீதச் சேர்க்கையாலும் கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சொறிபற்றி ரத்தங் கட்டி யிருந்தாலும் மதத்துக் கொழுத்திருந்தாலும் மூலச்சுழியில் வாய்வு பித்தம் தங்கினுலும் கருத்தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இரு வேளையும் 15 நாள் சாப்பிட்டால் கருக்குழியிலிருந்து ஆறுவித குற்றங்களையும் நீக்கி கருக்குழியை சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பம் தரிக்கும். இது அனுபவமான எண்ணெய். கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருத்தரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்துபோவதுமுண்டு. இப்படிப்பட்ட கர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும்.

இதன் விலை ரூ. 2 : 3 புட்டி விலை ரூ. 5 : தபால் செலவு தனி

என். வி. கோபால் அண்ட் கோ

63, கிருஷ்ணப்ப நாயக்கன் குளத்துதெரு, கொண்டிதோப்பு, சென்னை-1

# நாஸ்திகமும் கம்யூனிஸ்டும்!

"சேல்வம்"

தோழர் ஜீவா 'நான் நாஸ்திகன்' என்ற ஒரு கட்டுரை முன்பு தீட்டியுள்ளார். நாஸ்திகத்துக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் உள்ள தொடர்பை விளக்கப் புகுந்த அவர் பகுத்தறிவு வாதிகளின் நாஸ்திக வாதத்தைப் பற்றிய தன் கருத்தை—ஏன்? கம்யூனிஸ்டு கட்சியின் கண்ணோட்டத்தையே—விளக்கியிருக்கிறார். பொதுவாக பகுத்தறிவு வாதிகளாகிய நம்மை அறைகூவும் போக்கில் அக்கட்டுரை அமைந்திருப்பதாலும், குறிப்பாக நமது அறிஞர் அண்ணாவையும் அதில் சேர்த்துப் பேசப்பட்டிருப்பதாலும் நாம் நம்முடைய நிலையை விளக்கவேண்டியது இன்றியமையாததாகிறது.

பழங்கால மனிதன் தன் உயிர் வாழ்வு முயற்சியின் பயனாக இயற்கையோடு போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தொல்லைகளும், துயரங்களும் நிறைந்த இயற்கையமைப்புச் சூழல்களோடு விஞ்ஞான வளம் பெறாத அறிவு நிலையில் தன் உடல் வலிமையைக் கொண்டு அவன் போராடினான். அதில் அவன் கண்ட தோல்விகள், அவன் சக்தியை மீறிய இயற்கையின் கோரத்தாண்டவங்கள், இவைகள் அவனை பயம் என்னும் இருட்குகைக்கு இழுத்துச் சென்றன. அந்தப் பயங்கர இருளிலே அவனது ஒடுங்கிய உள்ளம் கண்ட தேர்வுதான்-தெளிவற்ற வீண் நம்பிக்கைதான், மதத்தின் அடிப்படை —அரும்புப் பருவம்.

கால வளர்ச்சியிலே அறிவு நிலையிலே தெளிவும், விஞ்ஞானமும் இடம்பெற, உற்பத்தி முறையில் மாற்றமும் மலர்வதாயிற்று. நிலைமைக்கு ஏற்ப மத உணர்ச்சியும் மாறுதலைப் பெற்று வலிவடைந்தது. வாழ்வுப் போராட்ட வழி முறைகளில். வரலாற்றின் வளர்ச்சிக் கட்டத்தில் வர்க்கப் பிரிவு தோன்ற-ஆள்வோர், அளப்படுவோர்-ஏஜமானர், கூலிகள்-என்ற நிலை பிறந்தது. அந்தச்சூழ் நிலைக்கு ஒத்தாற்போல மதம் ஆள்வோர்--ஆதிக்கக்காரர் கை ஆயுதமாக ஆளப்படுவோர் மேல் ஏவி விடப்படுவதாயிற்று. இன்றும் ஏமாற்றுக்காரர், எத்தர்கள் இவர்கள் வீட்டுச் செல்லப் பிள்ளையாக கபட நாடகமாடிகளான தரகர்களின் கையில் உருளும் பாய்ச்சிகையாக-மதம் விளங்குவதே அதற்குச் சான்று.

இந்த உணர்ச்சியின் கூடவே பய உணர்ச்சியை உதறியெழுந்த உள்ள உரம் படைத்தவர்கள், வாழ்க்கையை விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆராயப் புகுந்தவர்கள் மனிதாபிமானம் கொண்ட மனத்தினராய் ஏமாற்றுக்காரர்களின் கொடுமைகளை வெறுத்து ஒதுக்கிய நல்லவர்கள், பழைய பொருளாதார கொள்கையில் மாற்றம் காண விழைந்த சில பல முற்போக்காளர்கள் ஆகியவர்கள் நாஸ்திகர்களாக வளர்வதும் இயல்பாயிற்று. அப்படி பிறந்து நாளடைவில் உருவாகி வந்த கொள்கைதான் நாஸ்திகம். இதுதான் ஆஸ்திக நாஸ்திக வாதத்தைப் பற்றிய பொருள் முதல் வாதக்கொள்கை. (Materialistic Phenomena)

தோழர் ஜீவாவின் மொழிப்படி மார்க்ஸ் குறிப்பிட்டார் "மதம் துன்பப் படுபவர்களுக்குப் பெரு மூச்சாகும்; இதயமற்ற உலகத்திற்கு இதயமாகும்; உயிரில்லாத பௌதீகச் சூழ் நிலையின் உயிராகும்; மக்களுக்கு அபினி அது."

நாஸ்திகம் என்பதுஒரு தத்துவம்; (Philosophy) விஞ்ஞானத்தைக் கருவாகக் கொண்டு மலரும் ஒரு கொள்கை கொள்கை அல்லது தத்துவம் என்ற அளவில் முதலாளிகளும் அதைப் பின்பற்றலாம்; தொழிலாளிகளும் அதைக் கைக்கொள்ள முடியும்; ஏகாதிபத்திய வாதிகளுங்கூட ஏற்றுக்கொள்ள இயலும். அவரவர் கண்ணோட்டத்தின் தக்குவம் — அறிவியல் ஆராய்ச்சியின் அளவு பகுத்தறிவுப் பண்பாட்டின் வளர்ச்சி ஆகியவற்றைப் பொறுத்தது அது. தனிப்பட்ட முறையில் யாருக்கும் உரிமையுடையதல்ல அந்தக் கொள்கை.

நாஸ்திகத்தை அரசியல் கொள்கையாக நடை முறைப்படுத்த முயன்ற பிரஷ்ய நாட்டுப் பெருந் தலைவன் பிஸ்மார்க் ஒரு ஏகாதிபத்திய வாதி. தோழர் ஜீவா தனது நாஸ்திகவாத விளக்கத்திற்குத் துணையாக வருவித்துக்கொண்ட ஆங்கில நாட்டு அறிஞன்—"ஷெல்லி ஒரு நாஸ்திகன்; ஒரு ஜன நாயகவாதி; ஒரு மனிதன்"-என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ள விழையும் நல்லிசைக் கவிஞன்—ஷெல்லி ஒரு பிரபு (Lord) சோவியத் நாட்டின் அரசியல் தந்தை-புத்துலகம் படைத்த பொது உடைமைச் சுடர்-மக்கள் நல் வாழ்வின் கலங்கரை விளக்கம்-தோழர் லெனின் நடுத்தர வகுப்பில் உதித்த பாட்டாளித் தலைவன். இதைக் கொண்டு பார்த்தால் நாஸ்திகம் அதை ஒப்புக்கொள்கிறவர்கள் யாருக்கும் உரிமை உடையது. உடன்பாடானது.

ஆனால் கம்யூனிஸ்டுகளைப் பொறுத்த வரை நிலைமை அப்படியில்லை; இருக்கவும் முடியாது. அவர்கள் நாஸ்திகர்களாகத்தான் இருக்க முடியும்; இருக்கவும் வேண்டும். ஏனெனில் அவர்கள் பொருள் முதல் வாதிகள்-(Materialists)--விஞ்ஞானத்தின் வெளிச்சத்தில் எதையும் ஆராய்பவர்கள். இது ஒரு போது. ஆனால் கண்டிப்பாய் நிலவவேண்டிய உண்மை. இதை மறைமுகமாக-ஆனால் மிகத் தெளிவாக இரண்டிடங்களிலும், வெளிப்படையாக ஓரிடத்திலும் ஒப்புக் கொள்கிறார் நமது நண்பர் ஜீவா.

ஷெல்லியின் வாயிலாக-"நான் நாஸ்திகன்; மனிதன்"—என்றும்; கட்டுரையின் இறுதியில் அவரே நேரிடையாக "நான் ஒரு நாஸ்திகன். காரணம் நான் மனிதனை நேசிக்கிறேன்", என்றும் கூறுகிறார் இதிலிருந்து மனிதனை--மனிதகுலத்தை--நேசிக்கிறவர்கள், மனிதாபிமானத்தை வழிபடுகிறவர்கள், நாஸ்திகர்களாகத்தான் இருப்பார்கள் என்பது பெறப்படுகின்றது.

இதையே மிக விளக்கமாக, ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமின்றி மற்றோர் இடத்தில் ஒப்புக்கொள்கிறார். அவர் சொல்கிறார்: "மார்க்ஸீய வாதியாகிய நான் **பொருள் முதல் வாதியாக** இருப்பதால் திட்டவட்டமாக எல்லாவித மத நம்பிக்கைகளுக்கும் பரம வைரியென்பதில் சந்தேகமில்லை"-என்று. தன்னை மிகமிகக் கடுமையாகவே பிரகடனப் படுத்திக் கொள்கிறார், "**எல்லா மத நம்பிக்கைகளுக்கும் பரம வைரி**" என்பதாக. அதே ஜீவாதான் அடுத்தாற்போல் எழுதுகிறார்: "லெனினுடைய கருத்தில் புரோகிதனுங்கூட கம்யூனிஸ்டு கட்சியில் சேரலாம்," என்று. கட்சிக் கட்டுப்பாடு கண்களை மறைக்க தலைமை பீட இனவெறியர்களின் கூட்டுறவு சிந்தனைக்குத் திரையிட கைதடுமாறி நமது அருமை ஜீவாவின் பேனா இப்படி முன்னுக்குப்பின் முரணாக எழுதுகிறது. (ஐயோ பாவம்!)

வற்புறுத்தி கேட்டால் 'நான் என் சொந்த முறையில் எப்படியிருந்தாலும் நான் இவ்வாறு எழுதுவது யாதர்த்த நிலைக்கு (Realism) பொருந்துவது; மத உணர்ச்சியினால் பிளவுபடும் தொழிலாளி வர்க்கத்தை அதிலிருந்து தடுத்து ஸ்தாபன ரீதியாக ஒன்றுதிரட்டுவதற்காக வேண்டி. எடுக்கப்பட்ட திட்டவட்டமான இந்த முடிவு மார்க்ஸீய—லெனினிஸ ஞானசிரியர்களின கண்ணோட்டத்தில் தவறானதல்ல; மாறாக ஒப்புக்கொள்ளக் கூடியதுமாகும்' என்று பதில் சொல்லலாம். இது நமக்குத் தெரியும். அவர் சொல்கிறார்:

"எனது பொருள் முதல் வாதம் பகுத்தறிவு வாதிகளுடைய பொருள் முதல் வாதத்தைவிட எத்தனையோ மடங்கு சிறந்ததாகும்...மத நம்பிக்கைகளுக்கு யதார்த்தமான லௌகிகமான காரணங்கள் உண்டு என்று நான் கருதுகிறேன்."

"எத்தனையோ மடங்கு சிறந்தான பொருள் முதல் வாதம்" என்று அவர் குறிப்பிடுவதிலே ஒளிந்து நிற்கும் தற்பெருமையும், காழ்ப்பும், சவடாலும் ஒரு புறமிருக்க அவர் கூறும் யதார்த்த நிலைக்கு (Realistic view) ஒத்தது என்பதுதான் என்ன? உள்ள நிலையை (சூழ் நிலையை) அதன் உண்மையான உருவத்தில் காணும் தன்மை தானே! அந்த நிலையைப் பகுத்தறிந்து உணரும் பண்பு தோழர் ஜீவாவுக்குக் கிட்டியது எவ்வாறு? அறிவு பூர்வமாக—பின்பு உணர்வு பூர்வமாக—வளர்ந்ததால்தானே? அறிவு நிலை வளர்ச்சியினால் மனதில் மாறுதல் காணுவதற்குப் பிரச்சாரம் உதவி செய்யாதுஎன்று தோழர் உள்ளபடியே கருதுகிறாரா நிற்க.

அவர் மேலும் எழுதுகிறார்: "அந்தக் காரணங்கள் (மேற்கண்ட யதார்த்த லௌகிக காரணங்கள்) நிலைத்து நிற்கும்வரையில் மத நம்பிக்கைகள் நிலைத்து நிற்கும். வெறும் தத்துவார்த்தப் பிரசாரத்தால் மட்டும் மத நம்பிக்கையை ஒழித்துவிடமுடியாது' என்று. உண்மைதான் ஆனால் இந்த உண்மை நமக்குத் தெரியாததல்ல. அந்த வேலை எளிதானதல்ல என்பது மட்டுமல்ல; அதை எத்தகைய சூழ்நிலையில் செய்ய வேண்டியதிருக்கிறது என்பதும்நன்று

அஞ்சா நெஞ்சன்—மறைந்த மாவீரன்
அழகிரிசாமி அவர்கள்
நாகையில்—ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு அடக்குமுறைக்கு ஆளாகிய தன்மான இயக்கத் தளபதி.

தெரியும் நமக்கு. தோழர் மார்க்ஸ் மிக அழகாகவே சொல்லியிருக்கிறார் இதை...வரலாற்றை உருவாக்குபவர்கள், ஏன்! உண்டாக்குபவர்களே மனிதர்கள்தான் என்றாலும் அந்த வேலையை அவர்களாகவே தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள சூழ்நிலையில் செய்ய முடியாது. முன்னமே அமைந்து விட்டிருக்கிற சூழ்நிலையினிடையேதான் செய்யவேண்டும்'' என்று.

"பகுத்தறிவுக்கு விரோதமானவை (மத நம்பிக்கைகள்) என்றும் பகுத்தறிவாலும், அறிவுப் பிரசாரத்தாலும் மத நம்பிக்கைகளை வேரோடு சாய்த்துவிட முடியும் என்றும் பகுத்தறிவு வாதிகள் நம்புகிறார்கள்." என்கிறார் ஜீவா. ஆம்! பகுத்தறிவால் முடியும் தான். பகுத்தறிவு என்பது தோழர் ஜீவாவின் கண்ணோக்கில் எதுவாகப்பட்டாலும் நம்முடைய கருத்து இதுதான். "ஒரு தத்துவம் அல்லது கொள்கை நடைமுறைப்படுத்தும்போது, அல்லது ஏற்றுக்கொள்ளப்படும்போது அவற்றின் எதிரொலியாக மனிதன் பெறும் செயலறிவு—அனுபவ முறை—விஞ்ஞான அறிவு". இது மனிதனில் மாறுதலை விளைவிக்காது என்று ஜீவா எவ்வாறு கருதுகிறாரோ? ஆனால் அறிவுப் பிரசாரத்தைப் பொறுத்தவரை அதை முழுமூச்சாக நம்பிவிட நாம் ஒன்றும் மக்கள் மனப்பண்பை (Mass psychology) உணராதவர்களல்ல, ஜீவா சொல்கின்ற பௌதிக (physical) சூழல்களை பற்றியும் நாம் அறிவோம். அதே நேரத்தில் வளரும் கட்சிக்கு—பரவும் கொள்கைக்கு—பிரசாரம் ஒரு நல்ல பயனுள்ள சாதனம் என்பதை நாம் மட்டுமல்ல; கம்யூனிஸ்டு தோழர்களும் உணர்ந்திருக்கிறார்கள். உணர்ந்திருந்தும் வருந்தத்தக்க நிலையில் அந்த உண்மையை மறைக்கிறார் நமது மதிப்பிற்குரிய ஜீவா.

"மார்க்ஸ் தோற்றுவித்த இயக்கத்துக்கு வர்க்கப் போராட்டக் கோட்பாடும் புரட்சிப் பிரசாரமுமே முதுகெலும்பு போன்றதாகும்" என்ற ஹெராட் லாஸ்கியின் வாய்மொழியை தோழர் ஜீவாவின் கவனத்துக்கு கொண்டு வருகிறோம். நீண்டகால தன்மான இயக்கப் பிரசாரத்தால் இன்றைய தமிழகத்தில் மலர்ந்துள்ள மறுமலர்ச்சியை—குறிப்பாக—சுயமரியாதைத் திருமணங்களை, தோழரின் அறிவுக்கு விருந்தாக்குகிறோம். அதே தன்மான இயக்கத்தில் அறிவு விளக்கம் பெற்ற பழைய ஜீவா அன்றே—தலைசிறந்த பொருள் முதல் வாதியாக மலர்ந்துள்ள இன்றல்ல—"நான் ஏன் நாஸ்திகன்?" என்ற தோழர் பகத்சிங்கின் நூலை மொழிபெயர்த்திருக்கிறார் என்பதை அவருக்கு நினைவூட்டுவதோடு, அதுபோன்றே எல்லோரையும் அறிவு விளக்கம்பெற வீங்கள் என்று மிகப் பணிவாகவே வேண்டுகிறோம். இல்லையானால் அத்தகைய பொன்னான வாய்ப்பு பிறருக்கு கிடைக்காது — கிடைத்தாலும் கூடாது என்று தோழர் ஜீவா கருதுகிறாரா என்றுவினவ ஆசைப்படுகிறோம். பின் ஏன் நமது பகுத்தறிவுப் பிரசாரத்தை பழிக்க வேண்டும் அவர்?" மத நம்பிக்கைகளுக்கு எதிராகப் பகிரங்கப் போர் முழக்கம் செய்வது அறிவீனம்" என்று அவர் தன் அளவிறந்த அறிவுச் செல்வக் குவியலை (!) அளந்து காட்டவேண்டிய கட்டாயம் தான் என்ன? அறிவும், தொழிலும் முறையாக வளர்ச்சியுற--அத்தகையதொரு அரசியலை உருவாக்க நாங்கள் ஆசை கொண்டிருக்கிறோம். இதில் நமக்கு ஒளிவு மறைவோ துடை நடுங்கித்தனமோ சிறிதும் இல்லை. பகல் வேடம், பஞ்ச தந்திரம் இவற்றின் பக்கம் நாம் செல்வது கிடையாது. ஓயாமல் உருண்டோடும் இயந்திரங்களின் சக்கரங்களோடு சக்கரங்களாக மக்களை ஆக்க விரும்புவதோ-தொழிற்சாலையை அலை ஓயா ஆழ் கடலாக்கி, அதில் புரண்டுவரும் அலையூடு அலையாக மனித இனத்தை மாட்டிச் சிதைப்பதோ-நாங்கள் உருவாக்க எண்ணும் அரசியல் அமைப்பல்ல.

"மத எதிர்ப்புப் போரைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் லட்சியமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற வாதம் பூர்ஷுவா அராஜக வாதிகளுடைய வாதம்' -என்கிறார் ஜீவா. அது யாருடைய வாதமானாலும் சரி; நாம் அதை எப்போதும் கூறியதில்லை; கூறவும் மாட்டோம். மதம் உயிர் வாழ்வதற்குரிய பல காரணங்களுள் ஒன்று, அது இயற்கையோடு பொருந்தக்கூடிய சில பல அறவொழுக்கங்களை--நெறி முறைகளை (Ethical Features)த் தன்னகத்தே கொண்டிருப்பதால்தான். நல்லெண்ணம் கொண்ட



"சாபம் கொடுக்கும் சாஸ்திரங்களும் புரோகிதர்களும் மலிந்து கிடந்த காலத்தில் தான் நமது நாட்டை அன்னியர் பிடித்துக் கொண்டது." —சாமி கைவல்யம

பற்பல மக்களிடத்தும் நீண்டதொரு செல்வாக்கை மதம் பெற முடிகிறதென்றால் அது அதனால்தான். மத உணர்ச்சி அழிந்தால் மக்கள் ஒழுக்கம் கெடும் என்ற வாதமே அதை மெய்ப்படுத்தும். ஆகவே ஒரு பொதுவான அரசியல் கட்சியின் லட்சியக் கோட்பாடுகளில் அது கண்டிப்பான இடத்தைப் பெற முடியாதுதான். அதாவது கோயிலை இடிக்கவேண்டும்—சிலைகளைத் தகர்க்கவேண்டும் என்ற தன்மையில் இடம் பெறமுடியாது. ஆனால் எந்த ஒரு கொள்கையையும் இடைவிடாத பிரச்சாரத்தால் மக்களிடையே பரப்பி, அவர் தம் மனத்திலே மாற்றம் கண்டு, பின் அரசியல் சட்டம்—கோட்பாடு--ஆகியவற்றில் ஒரு தலைகீழான மாற்றத்தை விளைவிக்க முடியும். அப்படிப்பட்ட முயற்சிதான் எந்தக் கட்சியின் அரசியல் வெற்றியும் கூட; வேகத்தில் மாறுபாடு இருக்கலாமே தவிர இறுதி லட்சியத்தில் மாறுபாடு கிடையாது.

இன்னும் சொல்லப்போனால் நமது மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் தொடங்குகிற பொதுவுடைமைப் புரட்சிகள்—போராட்டங்கள் தோல்வி காணுவதற்குக்கூட காரணம், அதில் ஈடுபடும் மக்கள்—ஒத்துழைப்பை நல்கும் பொதுமக்கள் முறையான—சரியான அறிவு விளக்கம், உணர்வு பெறாததே. கம்யூனிஸ்டுகளின் மொழியிலே சொல்வதானால் அறிவு பூர்வமாக—உணர்வு பூர்வமாக வெகுஜனப் பகுதி வளர்க்கப்படாததே. பரந்த அளவில் எல்லா மக்களும் ஒரு படித்தாய் வளர்ச்சி பெறுவது என்பது உடனடியாக முடியக்கூடிய ஒன்றல்லதான். ஆனால் பெரும்பான்மையான மக்கள் தங்கள் நோக்கில், லட்சியத்தில் தெளிவு பெற்றிருக்க வேண்டாமா? தங்கள் வழி சரியானதுதான் என்பது தெரிய வேண்டாமா அவர்களுக்கு?

மக்கள் எழுச்சிக்கு—வெகு ஜனப் போராட்டத்திற்கு பகுத்தறிவுப் பிரசாரம் ஊறு விளைவிக்கும் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையானால் அதையே பிரச்சாரம் செய்து வரும் கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு மகத்தானதாக இருப்பானேன்? அவர்கள் நடத்தும் போராட்டமெல்லாம் மக்கள் எழுச்சி—மக்கள் போராட்டம் ஆகாவா? அந்த ஆதரவு—அந்த ஒத்துழைப்பு கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும் எப்படி கிடைக்காமல் போகுமோ?

ஒரு கட்சி பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தாலும் மக்களிடையே பரவி நிற்கும் இயல்பான — முறையான ஒழுக்கமுறைகளுக்கு நல்லதொரு மதிப்பை ஈந்து—மக்கள் நன்மையிலேயே நீங்கா நாட்டமுடையதாகி—தியாக உணர்வோடு அவர்களின் நல உரிமைகளைப் பாதுகாக்க எழுந்தால் அது மதிப்பிழக்காது—மாறாக வளரும். கம்யூனிஸ்டு தோழர்கள் கற்பனை செய்வது போல அது ஒன்றும் வெகுஜனப் பகுதியிடைப் பிளவை உண்டுபண்ணாது. உண்மையான புதிய மாறுதலை—உலகத்தை அதுதான் உண்டுபண்ணும்.

கடைசியாக ஒன்று: "புரட்சிகரமான தத்துவமில்லாமல் புரட்சிகரமான செயல் முறையும் இருக்க முடியாது"—என்கிறார் தோழர் லெனின்.

தொழிலாளர்களின் காலனியிலே பிள்ளையார் கோவிலைத் திறந்து வைப்பதும், கும்பாபிஷேகம் காணுவதும்தான் புரட்சிகரமான தத்துவமோ? அன்றி புரட்சிகரமான செயல் முறையோ? நடைமுறைக்குப் பொருந்தக்கூடிய—யதார்த்தநிலைக்கொத்த தலைசிறந்த பொருள் முதல் வாதத்தின் லட்சணம் இதுதான் போலும்!

ஜாதி-மத நல கோட்பாடுகளின் மீது கட்டப்படும் வெறும் மணற் கோட்டைதான் நம்நாட்டு கம்யூனிஸ்டுகளின் கம்யூனிஸம் என்பது உணரப்படுகிறதல்லவா இதனால்?

**ஆசிரியர் குறிப்பு**—சென்ற ஆண்டு 'ஜனசக்தி' மேதின இதழில் அருமைத்தோழர் ஜீவா அவர்கள் 'நான் நாஸ்திகனா' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு பதில் தரும் முறையில் நண்பர் 'செல்வம்' அவர்கள் இவ்விளக்கத்தை வரைந்து சென்ற ஆண்டு இறுதியில் அனுப்பிவைத்தார். எனினும் 'திராவிடன்' மேதின மலரிலேயே இக்கட்டுரையை பிரசுரிப்பது பொருத்தமாகும் என்றே சற்று தாமதித்து வெளியிட்டுள்ளோம்.


# தனியரசு

மாதம் மூன்று முறையாக மே மாதம் முதல் 1, 10, 20, தேதிகளில் வரும்

ஆசிரியர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கட்டணம் (தபாலில்)

| | | |
|---|---|---|
| ஆண்டுக்கு | ரூ. | 4 8 0 |
| ஆறுமாதம் | ,, | 2 4 0 |
| மூன்று மாதம் | ,, | 1 4 0 |

தனிப்பிரதி 2 அணு

அரசியல். பொருளாதாரம். சமுதாயம்.

சிறக்கும் கருத்து. இனிக்கும் எழுத்து

புதுப்புது அம்சங்களுடன் புத்துலகு பூக்க மலருகிறது.

பிரதி ஒன்றுக்கு 0 6 0 வீதம் தேவையான பிரதிகளுக்கு முன்பணம் ஏஜெண்டுகள் அனுப்ப வேண்டும்

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் முன்பணம் அனுப்புவோருக்கு ஏஜென்சி தரப்படும்.

விபரங்களுக்கு : : தனி அரசு : : விருதுநகர்.

வாரந்தோறும் நல்விருந்து!

# 'முரசொலி'

ஆசிரியர் :
கலைஞர் கருணாநிதி

★

விலை அணு 2.

முரசொலி : சென்னை 24

# பரிசு!

மு. அருச்சுனன்

●

இன்பப் பெருவானத் தேறிச் சுடரொளியால்
துன்ப இருள் நீக்கித் தூய்மை மிக சேர்த்து
வாள் வெளியின் வனப்பாய்; வளம் நிறைநல்
காணத் தருநல் கவினாய்; ஒளிர்ந்திலங்கும்
இன்பப பொருளாய் எழிலாய்; இதயம் சேர்
பண்பின் உருவாய்; பயனாய் மிளிர்கின்ற
புவிப் பொருளே வாழ்க பெரலி லுருவே வாழியஎன்
றுவப்பால்கடல் வாழ்த்தொலிக்க; உளம் மகிழ்ந்து
புள்ளினங்கள் பாடப்; புலரும் பகல் கண்டே
கல்லான் உளம் போல் கருத்த இருட் புவியே
செல்லென்று ஓட்டிச் சிறக்கும் பகல் வாழ்த்தி
வெல்லத் தமிழிசையால் வீணை ஒலி சேர்த்து
இன்குரலால் பாட்டிசைத்தும் பெண்கள் இருக்கத்தன்
கண் மலரப் பெற்றே களித்தார்கள் ஆடவர்கள்

★

தங்கம் எழுந்தாள் தன் அத்தானை முன் வாழ்த்திப்
பொங்கும் கடல்மேல் எழும் கதிரைப் பின்போற்றி
தமிழ் வாழ்த்தித் தன்னுழைப்பால் ஞாலம் வளர்க்கின்ற
அமிழ் தன்னார் நல்லுழவர் தன்னை மிகப் பரவி
நாட்டுக் குழைக்கின்ற நல்லோர்; நலம் பயக்கும்
ஏட்டால் தமிழமுதம் ஈகின்றார் எல்லோர்க்கும்
என் வாழ்த்து என்றே எழிலாள் உளம் மகிழ
''அன்பே!'' எனவேலன் அங்கு வரக் கண்டே
இன்பத்தால்-''அத்தான் நீர் என்றைக்கும் போலெழுந்திர்
ஊரார் மகிழ்வில் உளம சாய்த்தார்-இன்பத்தின்
பேரார்வம்-இன்பம்-பெருவாழ்த்து-மேநாளை
வாழ்க' வளர்க'! எனப் போற்றும் இன்னொலியை
கேளுங்கள்'' என்றாள்'' கிளிமொழியே ஆமாமாம்
நான் மறந்தேன் நான மறந்தேன் நங்காய் நாம்
—தாழ்வினின்றும்
மீண்டு வந்த நாளன்றோ மேநாளன்றோ கண்ணே'
''மனங்களிக்க வந்ததுதான் அத்தான் மகிழ்வோம்பின்
புனலாடி வம்மின் புதுமை வரவேற்போம்'
'இல்லம் புதுக்கிடுக-ஏற்றது செய்-நான்சென்று
உள்ளம் களிக்க உடன் மீள்வேன்; ஒண்றொடியே
தேனூறும் பண்ணயங்கள் தித்திக்கச் செய்திடுக
காதுக்குக் கம்மல்; கழுத்துக்குச் சங்கிலி இல்
லாது இருப்பது வா ஏன் இஃதுபோட்டிடு முன்
நான போய் வருகின்றேன் நங்காய்' எனவெளியில்
வேலன் நடந்தபின்பின வேல்விழியாள் எண்ணுகிறாள்

★

தன் கழுத்துச் சங்கிலியைத் தந்தஃதால் தன்னத்தான்
மென் கரத்தில் தோலில் மிடுக்காய் மிளிர்கின்ற
கடிகாரம் மேலும் கவின் பெறவே பொன்னினால்
வடிவுறும் நல் சங்லியொன் றன்னவர்க்கு வாங்கியதை
கண்டிருந்தால் கண்ணே கழுத்துக்கணி இடுக
என்பாரா—என் அன்பு அத்தான் இதம் மகிழ
காலை உண முடித்துக் கண்ணே என்றன்னவர் என்
தோளைத்தழுவித் துடிதுடிக்கும் என்னுதட்டில்
முத்தம தர வருங்கால் முன்னறிதைப்பெற்றிடுங்கள்
சித்தம் சிறப்புறுக செல்வத்திருவன்னாய்

என்னுள்ளம் பூரிக்க இருக்கின்றாள் தன்மனைவி
என்பதறிந்திருந்தால் இவ்வாறியம்புவரா
கனிமொழியாள் இவ்வாறுளம் களிக்கும்போழ்து
புனலாடி வீட்டிற்குப் போகின்ற வேலன்

★

என் அன்பு கண்மணியால் இன்பப் பூங்காவன்னாள்
பண்பின் நிறைவு பயன் விளைக்கும் நல்லமுது
மேநாளே வாழ்கவென்று மேலேறும் இன்பத்தால்
பா நிகர் நல் பொங்கல் தனைப் படைத்துப் பண்புடையீர்
இன்பப் பரிசை எழில் பரிசைப் பெற்றிடுக
அன்புடையீர் இஃது அடியேன் தரும் பரிசு
கன்னல் நிகர் பரிசு; காதல் தரும் பரிசு
என்பாள் இதழோடு இதழ் சேர்ப்பாள் ''இச்'' சென்ற
உள்ளம் மகிழும் உயர் பரிசைத் தந்துவப்பாள்
நல்ல கவியின்பம் நானடைவேன்-அன்னவட்கு
நன்னாள் பரிசளிக்க வேண்டும் நடந்திடுக''
என்றே உளம் துரத்த இல்லம் விரைந்திட்டான்

★

ஊண் முடித்த வேலன் உவகைப் பெருக்கினால்
''ஏன் தங்கம் எங்கே? எடு நின் பொன் சங்கிலியை
பாரதற்கு ஏற்பப் பளிங்குப் பதக்க மொன்று
சீர்பெற நான் பார்க்க சிறக்க அணிந்திடுக
ஆர்வம் துடிக்கிறது அன்பே விரைந்தெழிலைச்
சேர் எந்தன் உள்ளத்தில் சேர்மீளா இன்பத்தை''
என்று தன் மேநாள் பரிசை-எழில் பதக்கம்
தன்னைத் தன் அன்பு மனைவியிடம் தந்தான்.

★

''கடிகாரம் எங்கே அதை முன்னம் காட்டுங்கள்
எடுங்கள் அதற் கென்றெழிற் சங்கிலி யொன்றை
என் கழுத்துச் சங்கிலியை ஈந்து பெறலானேன்
மன்னிக்க வேண்டும் மனம் நினைத்ததத்தானுக்
கின்னாள் தனில் பரிசை ஈந்துவக்க வேண்டுமென
எண்ணினேன் சங்கிலிதான் இல்லாவிட்டால் என்ன
அன்பரே! என் பரிசை ஆதரிக்க வேண்டு''மென
தன் பரிசைத் தங்கம் தர வேலன் செப்பினான்
''அன்பே நான் உந்தன் அகம் மகிழவேண்டுமென,
எந்தன் கடிகாரம் தன்னை விலைபேசி
பெற்ற பணத்தால்தான் இப்பதக்கம் பெற்றேன்நான்
விற்றாயா சங்கிலியை வேல்விழியே என்னமுதே!
எங்கெ அதுவிற்றாய் யாண்டறைக இப்போதே
இங்கதனைக் கொண்டு வருகின்றேன்' என்றிடுங்கால்
'வேலா!' என முருகன் வந்தான் விருந்தினனை
'வாழ்க' என வாழ்த்தி வேலன் வரவேற்று
'என்ன முருகா இனித்ததா மேநா'ளென்
றன்பால் உபசரித்தான் வேலன் அவனிடத்தில்
கடிகாம் ஒன்றும் கழுத்துக்குச் சங்கிலியும
'அடியேனின் மேநாள் பரிசென்று' வகையால்
முருகன் அளித்து முறுவல்பூத் துள்மகிழ
இருந்தான் எதிர் புறத்தில் இன்பத்தால் பூரித்து
வேலன் மகிழ்ந்தான் வேல்விழியாள் தங்கம், மே
நாளின்பப் பூரிப்பால் நன்மை விளைவித்தாள்

★

''எல்லோர்க்கும் இன்பநாள்-யாவருக்கும் வாழ்வென்று'
வள்ளுவன் தன் இன்முரசால் வாய்மை உரைத்தல் காண்
என்று வந்தார் மக்கள் இதயப் பெருமகிழ்வால்
நன்றென்போம் நாமும் அதை.

1921-ம் ஆண்டு தொழிலாளர் தலைவர் திரு. வி. கலியாணசுந்தரனார், உள்ளிட்ட பல தலைவர்களை நாடு கடத்தும் உத்திரவிட்டரே அன்றைய கவர்னர லார்ட் வெல்லிங்டன்! அவரது அடக்கு முறையை வீழ்ச்சியுறச் செய்த வெண்ணுடை வேந்தர்

சர். தியாகராயர்

●

விவசாயத் தொழில்துறை நிபுணர் உழைப்பாளர்களின் உற்ற தோழர்

சவுந்திரபாண்டியனார்

# செஞ்சொல் வீரர் சார்லஸ் டிக்கன்ஸ்

நெல்லை. மு. கணேசன்

காளைப் பருவத்திலே வாழ முடியாத வறிஞராய், இன்னல் படுவதையே தன்னுடைய இலக்கியப் பயிற்சியாய் பயின்று பாராரியாய்—நடைபிப்பிணமாய் உலவிய நேரத்திலே உமிழ்ந்து தள்ளிய உலகம், வாழ்க்கைக்கு வாழ்த்து கூறிஇறப்பை இறுக அணைக்கத் தன் இரு கரங்களையும் இச்சையோடு நீட்டும் வயோதிகப் பருவத்தில்தான் இன்பம் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தது. கல்வி பயில வேண்டிய இளமையிலே கருத்துக்களைச் சுவைத்து, சிந்தனை எனும் சிறு குடலிலே ஜீரணிக்கச் செய்ய வேண்டிய சிறுமையிலே கருணைக் கண்களைக் கொண்டு பாராத கனவான்கள்—பணப்பேழைகள் சோகச் சொட்டுக்கள் நிரம்பிய அவரின் இளமையை எண்ணிப் பார்க்க இடமில்லாமல் அல்ல, இரக்கமில்லாமல் போயிற்று.

இன்னலின் அணைப்பிற்கு ஆளாகி இறப்பதா அல்லது இன்பத்தை எட்டிப்பிடித்து அதோடு இணைந்து வாழ்வதா என்று எண்ணியபோது எவரும் பக்கத்தில் வர இருதயம் இடங்கொடுக்கவில்லை. ஆனால் புகழிலே பூத்துக் கமழ்ந்து, புதுமைக் கருத்துக்களை நகைச்சுவைத் தேன்துளிகளிலே துவைத்து அள்ளி வீசிய போது பாகு என அள்ளிப் பருகினர் பலர்—பாசானத் துளிகளோ என பயந்து பக்கத்தில் வர மறுத்தனர் சிலர்! நகைச்சுவையின் மூலம் நாசகாலர்களின் நடத்தைக்கு நச்சுப் பொய்கை அமைக்கப் படுகிறதே என்ன ஆகுமோ என்று கிலி பிடித்து ஓடி ஒழிந்தது ஒரு கூட்டம். வறுமையில் வடித்தெடுத்த பிரிதி பிம்பங்களாய், வறுமையிலே மூழ்கி அதன் ஆழத்தை அளந்தறிந்த ஏழைகள்—இன்னும் எண்ணிலா மக்கள் அவரைப் போற்றி, அவரின் இலக்கியச் செல்வங்களை இரு கண்களாக மதித்துப் போற்றினர் போற்றுகின்றனர்.

உடைந்து கிடந்த சமுதாயத்தை ஒன்றுபடுத்தி, மனிதனை மனிதனாக உலவவிட வாழ்விலே வறுமையால் தாக்குண்டு வாழ்விழக்கும் ஏழைகள் சமுதாயத்திற்கு நேர்மைத் தேடிக் கொடுக்க பணப் பேழைகளின் நெஞ்சிலே நெளியும் நீசத் தன்மையைக் கைவிச் செல்லும் காற்றெனக் கருத்துப்பொறி பறக்கும் காவியச் சுடர்களை படைத்து பொய்யர்களைப் பொசுக்கிப் பொட்டிட்ட பொன்னேடு இருள்படியா இன்ப நிலவு-தரணிபெற்ற தங்க விளக்கு அணையாத அருட்பெருஞ்ஜோதி சார்லஸ் டிக்கன்ஸ் தன் எழுத்தின் மூலம் அன்றைய நாளில் ஏழைகள் பட்டப்பாட்டினை விரட்டியடிக்கும் வகையிலே வாழ்க்கைச் சித்திரங்களை வகுத்து தன் பேனா முனையை ஏழைகளுக்காக அசைத்து—அர்ப்பணம் செய்து அரும் புகழ்பட வாழ்ந்த ஓர் எழுத்துலக சிற்பியாவர்.

ஏழைகளின் சிற்பி எழுத்துலக மன்னன் சார்லஸ் 182 ம் ஆண்டு பெப்ரவரி 7-ம் நாள் 'ஸான்ட் போர்ட்டில்' துன்பத்தில் துவண்டு, துயரத்துக்குத் துதி பாடப் பிறந்தார். தந்தையான ஜான் டிக்கன்ஸ், 'ஸாமர் ஸெட் ஹவுஸ்' என்ற பெயரில் இயங்கி வந்த வாணிபக் கூட்டுறவுக் கழகத்தில் வேலை செய்து எளிய வாழ்க்கையில் நீந்திக் கொண்டிருந்தபோது சார்லஸ் இரண்டாவது குழந்தையாக பிறந்தார். முதற் பிள்ளை பெண் மகவு. சார்லஸின் இரண்டாண்டுப் பருவத்திலே, அவரின் தந்தை லண்டனுக்கும் அதன்பின் 'சாதமுக்கும்' மாற்றப்பட்ட காரணத்தால் சார்லஸ் ஓரளவுக்கு ஒழுங்காக பள்ளி சென்று பயில இடம் ஏற்பட்டது. அப்போதுதான் நல்ல நிலையிலிருந்த அவரின் குடும்பம் வறுமையில் வழுக்கி விழுந்து, அவர்களின் வாழ்வு வறண்ட பாலைவனத்தில் வடிக்கப்பட்ட வர்ணக் குழம்பாக—பாழ்பட்ட பளிங்கு மண்டபமாக—சிதைந்து போன சித்திரக்கூடமாக மாறியது. அதிலும் சார்லஸ் தன் பத்தாண்டு பருவத்தில் பட்ட துன்பத்தைப் போல் அவர் வர்ழ்வில் வேறு எப்போதும் அனுபவித்த தில்லை என்றே கூறலாம்.

1822-ல், துள்ளிச் செல்லும் புள்ளி மானைப் போல பள்ளிக்குச் சென்ற பத்தாண்டு பருவத்தில் தாய் தந்தையர்கள் கடன் பட்ட காரணத்தால் அவர்கள் குடும்பம் கவலைக் கடலில் கரை சேர முடியாமல் துவளுகின்ற துன்க்கொடியாக துயரத்தின் சின்னமாக — இன்னலின் இலக்கியமாக விளங்கியது. இதனால் சார்லஸின் பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளியிடப்பட்டது. கடனை திரும்பக் கொர்டுக்க வழியில்லாத காரணத்தால் சட்டம் அவர்களைக் கண்டு சிரித்தது. அச்சிரிப்பின் முடிவில் மார்ஷல்ஸியின் சிறை வாய் திறந்தது, சார்லஸின் தாய் தந்தையர்கள் அச்சிறையிலேயே தள்ளப்பட்டு வாடி வதங்கினர். அந்த இரண்டு மலர்களும் வாடியபோதும் மானம் எனும் மகரந்தம் பாழ்பட்டுப் போய்விடவில்லை. இந்த நிலைமையிலே சார்லஸ் டிக்கன்ஸ்க்கு வர்ழ்க்கை வெறுப்பாக தோன்றவில்லை. மேலும் மேலும் அவருக்கு வாழ்க்கையிலே புதிய நம்பிக்கையே தோன்றியது.

குடும்பத்தைச் சீர்படுத்த எண்ணிய அவ்விளைஞன் குடும்பத்தை தாழவிடாமல் வாழவிட வேண்டும் என்று எண்ணிய அச்சிறுமையின் சின்னம் தன் படிப்புக்கு முடிவுரை கூறிவிட்டு தொழிலால் பணம் திரட்டி வறுமையை விரட்டி அடிக்க முடிவு கட்டினார். அதன் காரணத்தால் தோல் தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கமர்ந்தார்

தொழிலில் துவண்டு துயரத்துக் குட்பட்டு துயரத்தின் பிம்பமாக விளங்கிய சார்லஸ் தன் குடும்பத்தின் பொருள் நிலைமை சீர்பட்டபோது மீண்டும் பள்ளிசென்று பயிலத் தொடங்கினார். அப்போது அவருடைய அறிவின் உழைப்பு படிப்பிலே மட்டுமன்றி இலக்கியச் சேவையிலேயும் இடம் பெற்றது. சிறுகதைகன் எழுதியும் சிறுவர்களோடு நாடகங்கள் பல நடித்தும் பிற்கால வாழ்வுக்கு தம்மைத்தாமே தயார் செய்து கொண்டார்.

பள்ளி வாழ்வை முடித்துக் கொண்டு பரந்த உலகில் வாழ்க்கைக்கு வேண்டிய வருவாயை பெறுதல் வேண்டி லிங்கன்ஸ் என்ற இடத்தில் உள்ள நியூஸ் குவயரில் வேலை செய்து வாரம் ஒன்றுக்கு பதின்மூன்றரை வெள்ளிகள் பெற்று தன் வாழ்க்கையின் மேடு பள்ளங்களை மெருகிடத் தொடங்கினார். ஆனால் எண்ணிய இச்சை எட்டாத காரணத்தால் நாடகத்திலே நடிக்க வேடம் தாங்கப் புறப்பட்டார். அதிலேயும் ஏமாற்றத்தின் ஏகப் பிரதிநிதியானார்.

பின்னர் வாழ்க்கையின் மேடுகளிலே மோதி பள்ளங்களிலே பதுங்கி 'மார்னிங் கிரானிக்கிள்' போன்ற பத்திரிக்கைகளுக்கு நிருபராக (Reporter) அமர்ந்து அதிலே மேம்பாடு பெற்றார் பத்திரிக்கை ஆசிரியர்களின் பாராட்டுதலுக்கு பாத்திரமான இவரின் உள்ளத்திலே ஆசைக் கொடி படர்ந்து கிடந்தது. ஆம். தானும் பத்திரிக்கைகளுக்கு ஏதேனும் எழுதவேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்திலே ஊஞ்சலாடிய படி உல்லாச சிந்துபாடியது. உல்லாச சிந்து உயர்ந்த சிந்தனையாக மாறி கற்பனை மலர்களாகி கதைக் கனிகளாக மாறியது. அவைகளைப் புனைப்பெயரால் குறித்து உறை ஒன்றில் அடைத்து தபாலில் போட்டார். நாட்கள் சிலவாகியபின் 'மந்த்லீ மாகஸீன்' என்ற பத்திரிக்கையில் தன் கதைக் கனியைக் கண்ட அவருடைய உள்ளத்திலே வியப்பும் மகிழ்ச்சியும் கை குலுக்கியது.

பின்னர் பாஸ் என்ற புனைப் பெயர் பூண்டு பல கட்டுரைகள் எழுதி புகழ் வானிலே புதுமைச் சந்திரனாக யுத்தொளி வீசினார். ஈவினிங் கிளானிக்கிள்' என்ற பத்திரிகையில் பாஸின் கைவரிசைகள் என்ற தலைப்பின் கீழ் சிறு கட்டுரை வெளியிட்டு மக்கள் மன்வந்தில் உலவ விட்டார். இதனை 1836ல் க்ருக்ஷாங்' என்பவரது உதவியால் இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டு வெற்றி முரசு கொட்டியது. 1836-ல் பிக்விக் என்ற பத்திரிகையின் மூலம் புதுமை சிந்தும் இலக்கியச் செல்வங்களை வெளியிட்டார். டிக்கன்ஸின் செல்வாக்கும் புகழும் செவ்வானத்தை எட்டிப் பிடிக்கத் தொடங்கியது. 1839ல் நிக்கோலஸ் நிக்கல் பீ என்ற கதையை 3000 பொன்கள் பெற்று எழுதி முடித்தார்.

1838ல் 'ஆலிவர் டுவிஸ்டும்' இதைத் தொடர்ந்து 1840–41ல் 'பழம் பொருட் கடை' என்ற புனைக் கதையும் 'மார்டின் சஸ்ஸில் விட்' 1844லும் ப்ளீக் ஹவுஸ் 1853லும் பேர் ஆர்வங்கள் 1861 லும் வெளியிடப்பட்டு மக்கள் மன்றத்திலே தவழ்ந்து சென்றன. டிக்கன்ஸின் கற்பனையில் வடித்த வாழ்க்கைச் சித்திரங்களில் போற்றிப் புகழப் படும் டேவிட் கரப்பர் பீல்டு 1880ல் எழுதப்பட்டது. பிரஞ்சுப் புரட்சியை சித்தரிக்கும் வகையிலே 1859ல் இரு நகரங்களின் கதை' என்றபெயரில் நெஞ்சைக்கிள்ளிவிட்டு நேர்மையை நிலை நிறுத்தத் தூண்டும் துணிகரச் செயல்கள் நிரம்பிய இக்கதையை எழுதினார். இதோடு மட்டுமன்றி டிக்கன்ஸ் எழுதிய பல கட்டுரைகளும் கதைகளும் பல பத்திரிகைகளின் வாயிலாக வெளிவந்தன. 1846ல் அவர் துவக்கிய பத்திரிகையின் மூலமாகவும் வீட்டு மொழிகள் ஆண்டு முற்றும் மூலமாகவும் கதைகள். கட்டுரைகள் பாடல்கள் முதலியன வெளியிடப்பட்டன. இவ்வாறு அவர் ஈன்றெடுத்த புகழின் காரணத்தால் அவரின் இறுதிக் காலத்தில் அமெரிக்கா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து 100.000 பொன்கள் நன்கொடையாக பெற்று இறுதியில் மாநிலத்தை விட்டு மறைந்து மனிதகுல மாணிக்கமானார்.

கலைச் செல்வனாக காவிய வரலாற்றிலே இடம் பெற்றுள்ள சார்லஸின் அறிவுரை அழிந்து கிடக்கும் சமுதாயத்திற்கோர் அறிவினால் ஆக்கப்பட்ட நாவுக் கிண்ணம்! சரிந்து கிடக்கும் சமுதாயத்தில் சண்டித்தனம் செய்யும் சமூக்கர்களுக்கோர் நச்சுக் கிண்ணம்!

வாழ்க அவர் இலக்கியம்!

★


வெளிவந்து விட்டது! விற்பனையாகிறது!

மறுமலர்ச்சி எழுத்தாளர்

இரா. இளஞ்சேரன் தீட்டிய

**பாரி மகளிர்**

பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்

மதிபபுரையுடன் கூடியது.

மூவண்ண முகப்பு ★ விலை 4 அணு

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு

விவரங்களுக்கு:

**பாண்டியன் பதிப்பகம்**

16, ரிலையன்ஸ் ரைஸ் மில்ஸ் தெரு, சென்னை-1.

கே. பி. சாமுண்டீஸ்வரன்

சென்னை தொழிலாளர் சங்கச் செயலாளர்

# வெற்றி வீரன்

மணக்குடவன், ஆரணி

'பெரு!'
'பனுமா!'
'பொலிவியா!'
'ஈக்வடார்!'
'வெனிசூலா!'
'கொலம்பியா!'

எண்ணற்ற அறிஞர்களின் இதய கீதத்தை, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று தீரமுள்ள இளைஞர்கள் வெகுண்டு உரைக்கும் சொற்களின் கோவையை, வேம்பெனக் கருதும் விவேகமற்ற வர்கட்கு உள்ளெரிச்சல் தரும் நாடுகள்!

கல்லையும் முள்ளையும் நீக்கி காடு கழனிகளை வெட்டிக் கண்ணிருட்டும் சுரங்கத்தில் காலமெலாம் உழைத்தவன் கண்டெடுத்த கனக மணிகளைக் கடவுளின் பெயர் சொல்லி வாங்கி ஏமாற்றி, தனது கட்டழகியின் கழுத்திலே கட்டி விட்டு இன்பம் காணும் கசடர்களை கழுகு மரம் நோக்கச் செய்த நாடுகள்!

அறிஞர்கள், அறிவியக்க இளைஞர்கள் மலேயாவுக்கும், சிங்களத்துக்கும் தனது உடன் பிறந்தவர்களையும், ஊட்டி வளர்த்தவர் அனுப்பிவிட்டு வாழ வகையின்றி திண்டாடும் வாழ முடியாதவர்களின் கண்ணீரையும், செந்நீரையும் துடைத்து, அவர்கள் எழுப்பும் உரிமைக் குரலுக்கு உணர்வூட்டும் நாடுகள்!

"தனி நாடு கேட்கிறாயே தரணியாளத்தெரியுமா? நாட்டை துண்டாடுவது நியாயமா?" என்று அர்த்தமற்ற கேள்விகளை எழுப்பும் கூடாரத்தினருக்கு அறிவூட்ட அவனியிலே தன்னாட்டாட்சியைத் தாங்களாக நடத்திக் கொள்ளும் தன்மானமுள்ளவர்களை ஈன்றெடுத்த நாடுகள்!

"அடிமைத் தளையால் கட்டுண்டு கிடந்தாலும் கிடப்பேன், உறுதி இழக்க நேரிட்டாலும் உறுதி இழப்பேன், ஆனால் அமைதிகுலையமாட்டேன், உயிரை இழக்கமாட்டேன்" என்று கூறும் அளவு உயிரும் அமைதியும் அவ்வளவு இனிமையோ? வேண்டாம்! மற்றவர்கள் என்ன விரும்புவார்கள் என்று யானறியேன். ஆனால் என்வரையில் எனக்குத் தேவை 'விடுதலை' அல்லது 'வீரமரணம்' என்று கூறிய பாட்ரிக் ஹென்றியின் உழைப்பின் பயனாய் சுயாட்சி பெற்றஅமெரிக்காவின்தொடர்ச்சியான தென் அமெரிக்காவில் காணப்படும் குடியாட்சி நாடுகள் தான் இவ்வாறு நாடுகளும்!

"கலைந்து போங்கள் புரட்சிக்காரர்களே! ஏன் கலையமாட்டோம் என்கிறீர்கள்? தேளெனக் கொட்டுவேன்! தேனீயாக நடமிடுவேன்! தூக்கிலிடுவேன்! துயர்விளைவிப்பேன்! இரத்தக்கண்ணீர் சிந்தும்படி செய்வேன்! தீ வைப்பேன்! உங்கள் சொத்தை திருடுவேன்! கொலை செய்வேன்! கொள்ளையடிப்டேன்! விலகுங்கள் என்றுரைத்த பிரிட்டிஷ் வீரனுக்கெதிராக புரட்சிப்படையினரை நோக்கி 'வீரர்களே! வெகுண்டெழுங்கள். எதிரிகள் நம்மைச் சுட்டாலொழிய நீங்கள் அவர்களைச் சுடாதீர்கள். எதிரிகள் போர் விரும்பிகளென்றால் இந்தீ இடத்திலேயே உரிமைப் போர் துவக்குவோம்!' என்று வீர மணிமொழி பேசிய வித்தகர்கள் ஈன்றெடுத்த தனியாட்சி நாடுகள்!

தோட்டக் காடுகளின் தலைவனாய், தான் உழைத்த உழைப்பினால் தன்னை உயர்த்திக் கொண்டு தொழிலாளர் துயர் துடைக்கத் தீவிர பணிபுரிந்து அமெரிக்க படைகட்குத் தளபதியாக ஏழு ஆண்டுகள் இலவச பணிபுரிந்து, வெற்றி தோல்வி பல கண்டு, பாராள் வோன் பார்வைக்கும். பணக்காரர் பயமுறுத்தலுக்கும் ஆளாகாமல் உரிமை போரிட்ட உயர் பண்பினன் ஜார்ஜ் வாஷிங்டனை அடுத்துத் தோன்றிய சைமன் பொலிவரின் சலியா உழைப்பினால் தன்னாட்சி பெற்ற நாடுகள் இவை. ஆறுநாடுகளின் விடுதலை கோரிக்கையை விண்ணெட்டக் கிளப்பிய செயல் வீரன் சைமன் பொலிவர்!

1783 ஜூலை 24-ம் நாள் வெனிசூலா நாட்டிலே வீரன் சைமன் பொலிவர் தோன்றினான்! மெலிந்த உடல், கூறிய விழி, நுண்ணறிவு பொறுமை இவை தாம் பொலிவரின் இயற்கை அமைப்புகள்!

வட அமெரிக்கா விடுதலை முரசு கொட்டி விட்டது! தென் அமெரிக்கா 19-ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஸ்பானிய ஆட்சிக்கு அடிவருடிக் கொண்டிருந்தது! காடுகளை வெட்டிக் கழனிகளாக்கியவர்களையும், புது நாடு கண்ட புரவலர்களையும் அடக்கி ஏகாதிபத்திய ஆட்சி நிறுவி விட்டது ஸ்பெயின்! ஸ்பானிய அரசு படை வன்மை கொண்டு தென் அமெரிக்க நாடுகளை அடக்கி ஆண்டு வந்தது! அக்கொந்தளிப்பான காலத்தில் சைமன் பொலிவர் 15ஆம் வயதில் ஐரோப்பா சென்று சடடக் கல்வி பயின்று மீண்டான்.

மனமொத்த மனைவியைத் தேடி வாழ்க்கையைத் துவக்கினான். ஓராண்டுக் காலத்திற்குள்ளாக அவனது மனைவி மாண்டாள்! பொலிவர் மீண்டும் ஐரோப்பா சென்றான். தனிநாடு பெற்று தன்னாட்சி நடத்தும் தரணிகள் பல கண்ட காரணத்தால் அவன் அகத்தெழுந்த எரிமலை விடுதலை அனல்கக்கத் தொடங்கியது! நாட்டு விடுதலையைத் தனது இலட்சியமாக ஏற்று, தொண்டுகள் பல செய்யத் தொடங்கினான்.

1811-ல் ஸ்பெயினை ஆளப் புதிய மன்னன் நியமிக்கப் பெற்றான். ஸ்பெயின் நாட்டு தீரர்கள் திரண்டெழுந்து விடுதலைக் கிளர்ச்சி செய்தார்கள்! ஸ்பெயினில் உள் நாட்டுப் போர் மூண்டது. அந்த நிலைமையைத் தனக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான் பொலிவர்! தனது நாட்டிலே விடுதலைப் பண்பாட ஆரம்பித்தான்.

1811-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5-ம் நாள் வெனிசூலா தன்னாட்சி பெற்றது என்ற சேதியை உலகுக்கு விடுத்தான்.

பொலிவர் கண்ட நினைவு நிலை பெற அவனது நாட்டு மக்கள் ஒன்றுபட்டிலர்! எனவே பல முறை தோல்வி கண்டான்! "கொலம்பியா" நாட்டுக்கு விடுதலை அளித்தான். கொலம்பியர் நாட்டுபடைகளுடன் வெனிசூலா மீண்டு விடுதலைப் போரிட்டான் மீண்டும் தோல்வி கண்டான். ஜமெய்க்காவுக்குச் சென்றான்!

1817-ல் ஜமெய்க்கா விலிருந்து வெனிசூலா மீண்டான்! விடுதலைப் பண்பாடினான்! 1819ம் ஆண்டு கொலம்பியா, வெனிசூலா ஈக்வடார் நாடுகள் தன்னாட்சி பெற்றன!

'பெரு' நாட்டையும் உரிமைப் போராட்டம் நடத்தி தன்னாட்சி பெறச் செய்தான்! பொலிவர் தொண்டின் பயனாக 'பொலிவியா' தன்னாட்சி நாடாகத் தோற்றமெடுத்தது! பொலிவியாவைப் பின்பற்றியது "பனமா!"

47-ம் வயதில் 1830-ல் மறைந்த மாவீரன் பொலிவர் "இன்றும் நம்மைப் பார்த்து, "ஜனத்தொகை குறைவான நாடுகள் எல்லாம் குடியாட்சி பெற்று விட்டன, வாழப் பிறந்த திராவிடர்களே நீங்கள் ஏன் வாளா யிருக்கிறீர்கள்" என்று கூறி எள்ளி நகையாடுகிறான்! தனியரசு நடத்திய சேரன் செங்குட்டுவன், கரிகாலன், நெடுஞ்செழியன் வழிவந்தோரே! வாரீர் வகுத்த வழி நடப்போம் வண்டார் சோலை நிறைந்த இன்பத் திராவிடம் காண! மேதினமாகிய இன்று உறுதி கொள்வோமாக!




அருமைத் தாய்மார்களே தோழர்களே
கைத்தறி ஆடைகளையே அணிவீராக!


## இவை வேண்டும்

கடையநல்லூர் ப. புகழேந்தி

★

திருவிடமோர் தனிநாடாய்ப் பிரியவேண்டும்
திறமைமிகு அரசாகத் திகழவேண்டும்
உருவான உயிர்நாட்டின் எழில் மொழிகள்
உயர்நிலையை அடையப்பல வழிகள் வேண்டும்

உழைப்போரைச் சுரண்டு(ம்)கெட்ட உலுத்தர்கூட்டம்
உடனடியாய் ஒழியநல்ல திட்டம் வேண்டும்
சளைக்காத நெஞ்சம் இவர்தம் நெஞ்சமெனச்
சகமக்கள் கூறும்படி நடக்க வேண்டும்.

பகுத்தறிவைப் பயன்படுத்த மறந்து விட்டோர்
பழமையிலே மனம் நோக்கிப் பண்பிழந்து
புகுத்துகின்ற புதுமைகளைப் புறக்கணிப்போர்
பொல்லாங்கு செய்வோர்மற்றும் தீயோர் நீங்கி

'இது எனது' எனக் கூறும் சிறுமைவிட்டு
'எல்லார்க்கும் வளமெல்லாம் என்னும் நல்ல
பொதுவுடமை மலர்வாடை பெற்று இன்பப்
பொழில் வாழ்வில் பொதுமக்கள் திளைக்கவேண்டும்.

பிறநாட்டார் அனைவரும் வியந்திடவே
பிணிகள்ஒரு துளியும்இங்(கு) இல்லாமலே
மறவீரர் நாங்களென மக்களெல்லாம்
மட்டற்ற மகிழ்ச்சியோடு வாழவேண்டும்.


## "திராவிடன்"

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ... ரூ. | 8 0 0 |
| ஆறுமாதம் | ... ,, | 4 0 0 |
| வெளிநாடு. ஆண்டு | ... ,, | 9 0 0 |
| ,, ஆறுமாதம் | ... ,, | 4 8 0 |

தனிப்பிரதி 3 அணா

தோழர்களே, சந்தா தாரராகச் சேர்ந்து ஆதரவு தரவேண்டுகிறோம்

# இரத்த ஞாயிறு!

திலீப. மறைமுதல்வன்

**1905-ம்** ஆண்டு ஜனவரி மாதம் 22ம் நாள்!...ஞாயிற்றுக்கிழமை!......

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் (**St. Petersburg**) நகரின் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக சுமார் இரண்டு லட்சம் பேர் ஜார் மன்னனின் மாரிகால மாளிகை நோக்கிச் சென்றனர்!...

தங்கள் குறைகளைச் சொல்லி, அன்பையும் ஆதரவையும் பெற அவர்கள் சென்றுர்கள்!...ஆனல்......

மன்னன் விலாடிமிர் (**The Grand Duke Vladimir**) நீதி கூறினுன்—"இந்த மக்களின் இரத்தம்தான் ராஜவம்சத்தைக் காப்பாற்றும்" என்று!...

ஆம்! இரக்கம் வேண்டி வந்தவர்களின் இரத்தத்தைக் கேட்டான்!...

கொடுங்கோல் மன்னன் உத்தரவிட்டான்— "தளபதியே! சுடு! தயங்காமல் சுடு! உன்னல் முடிந்தவரை சுட்டுக் கொல்!" என்று...... அந்தோ! கொடுமை!! கொடுமை!!......

துப்பாக்கியின் வெடிச் சத்தங்கள் வானைப் பிளந்தன... குறை தீர்த்துக்கொள்ள வந்தோர் அனல் வாய்ப்பட்ட புழுக்கள் போல துடித்தனர்!... பீட்டர்ஸ்பர்கின் பனி படிந்த வீதிகளில் இரத்த ஆறு ஓடியது. எழுபதுக்கு மேற்பட்ட பிணங்கள் அதில் தெப்பங்களாக மிதந்தன. படுகாயமுற்ற நூற்றுக் கணக்கானோர் குருதிக் குளத்தில் நீந்தினர்!...

எங்கும் பிணக்காடு! பிரேத ராஜ்யம்!...

ஐயகோ! பரிதாபமான காட்சி!...

ரஷ்ய சரித்திரத்தில் ரத்த முத்திரை' போட்ட அன்று ஞாயிற்றுக் கிழமை. நகரமே செவ்வானம் போன்று தோன்றியதாம்! அந்த அளவுக்கு அன்று அங்கு குருதி ஓடியதாம்!...

இதைத்தான் வரலாறு "இரத்த ஞாயிறு" (*Bloody Sunday*) என்று அழைக்கிறது!...

ஆனல்...

'இரத்த ஞாயிறு' என்று அழைக்கப்படும் இந்த சம்பவம்தான் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்...1917 பிப்ரவரி 27-ல்...அக்கிரமக்காரர் ஆட்சியை அஸ்தமிக்கச் செய்தது!...

'இரத்த ஞாயிறு' சம்பவம் மக்களை குமுறும் எரிமலையாக்கிற்று: 12 ஆண்டுகளுக்குப் பின் எரிமலை தீக்குழம்பை வாரி வீசியது. ஏக்காளப் பித்தர்கள் சாம்பலாயினர்!... செஞ்ஜோதி உதயமாவதின் அறிகுறியாக கிளம்பிய விடிவெள்ளிதான் இரத்த ஞாயிறு'!...

'இரத்த ஞாயிறு'...ரஷ்ய புரட்சி சரிதத்தின் முதல் அத்தியாயம் விரிக்கப்பட்ட பொன்னுள்!...

இந்த சம்பவத்தை 1917-ம் ஆண்டு புரட்சிக்கு நடந்த ஒத்திகை! என்று வர்ணித்தார் லெனின் (*Lenin*)... அந்த 'ஒத்திகையை' அன்று பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த **மாக்சிம் கார்க்கி** (*Maxim Gorky*) நேரில் கண்டான். அவன் இருதயம் சூருவளியானது! பேனு பிடித்தான்! பேயர்கள் ஆடிய வெறிக்கூத்தை தனக்கே உரித்தான ஆவேச நடையில் படம் பிடித்து மக்களிடம் நீட்டினுன்! புயல் எழுந்தது!...

படிப்பவர்களின் எண்ணங்கள் எரிமலையாகும் விதத்தில் அவன் தீட்டிய அந்த எழுத்துச் சித்திரம்தான் சுருங்கிய அளவில், ஆசிரியரின் எண்ணங்கள் பழுதுபடாமல், இங்கே உங்கள்முன் விரிக்கப்படுகிறது. கருத்தைப் பதியுங்கள்...

★

பொங்கிவரும் கடலைப் போல அந்தக் கூட்டம் நகர்ந்து சென்றது. கடலின் அலைக்கரங்கள் தாங்கி நிற்கும் அழுக்குப் படிந்த நுரையைப் போல மக்களின் சாம்பல் நிற முகங்கள் மினுமினுத்தன.

மறுமலர்ச்சிக்கு வித்திட்ட மாக்ஸிம் கார்க்கி

சிறு பறவைகளின் கூச்சலைப்போல அவர்களிடையே வார்த்தைகள் வட்டமிட்டன...

சகிக்கமுடியாத துன்பங்களை அனுபவிப்பதைவிட இறப்பது மிகவும் நல்லது...

அவசரப்படாதே! குறைகளை சொல்லத்தானே 'அவனி'டம் போகிறோம்.

அவன் நல்லவன்—கருணையுள்ளவன்.

ஆமாம். நமது வேதனையைப் புரிந்துகொள்வான் 'அவன்'. ஆதரவு தருவான் நமக்கு...

எல்லோருமே 'அவனை'ப் பற்றி பேசினுர்கள் ஆனல் 'அவனை'ப் பற்றி...மன்னன் ஜாரைப் பற்றி... ஒலித்த அவர்கள் வார்த்தைகளில் 'ஜீவன்' இல்லை. 'அவன்' யார் என்று அவர்களுக்குத் தெரியாது! 'அவன்' எதற்காக இருக்கிறுன் என்றும் அவர்களுக்கு தெரியாது. ஆனல் இப்போது 'அவனை'ப் புரிந்துகொள்ள எல்லோரும் ஆவலாக இருந்தனர். 'அவனி'டம்...மக்களின் குறை போக்க கோல் பிடித்த கொற்றவன் ஜாரிடம்...இரக்கத்தை எதிர்பார்த்து சென்றனர். உழைத்து களைத்த அவர்கள் உதவிவேண்டிச் சென்றுர்கள். கடுமையான கொடுமையால் கசக்கப்பட்ட அவர்கள் கருணை வேண்டிச் சென்றுர்கள்...

தோழர்களே! ஏமாற்றும் எத்தர்களுக்கு இடந்தந்து விடாதீர்கள்! இப்படி திடீரென்று ஒரு கம்பீரமான குரல் கூட்டத்திலிருந்து எழுந்தது.

நீ சும்மா இரு! பாதிரி கேபன் நம்முடன் இருக்கிறுர்... எவனே ஒரு வயதானவன் பதிலளித்தான்.

கருகிய மேகக் குவியல்கள் போல, குறுகிய சந்துகளின் வழியாக அந்தக்கூட்டம் அசைந்து சென்றது. சந்தேகத்தின் மங்கிய சாயல் அங்கு நிலவியது. வெற்றியில் நம்பிக்கை வைத்து முன்னேறும் அவர்களுடைய முகங்களில் கவலையின் ரேகைகள் லேசாக படிந்திருந்தன. விநாடிக்கு விநாடி அவர்கள் கூட்டம் பெருகிக்கொண்டே சென்றது. தங்களுடைய குறைகளை கவனிக்குமாறு 'அவனை'...ஜாரை...கேட்டுக்கொள்ள அடிமை மக்களுக்கு உரிமை உண்டு என்ற உணர்வை அது தூண்டிவிட்டது.

"நாமும் மனிதர்கள். அது அவனுக்குப் புரியும்...புரியத்தான் வேண்டும்...

அவன் நல்லவன். நாம் கேட்கவே செல்கிறோம். அவன் தருவான்...

தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ள விரும்பிய அவர்களின் பயங்கலந்த முணுமுணுப்பு! அதற்குள் ஒரு வாலிபன் ஓங்கிக் கத்தினன்.

"தோழர்களே! சுதந்திரம் கொடுங்கள் என்று யாரும் கேட்டதில்லை..."

அடித்து விரட்டுங்கள் அந்த தறுதலையை. பாதிரி கேபனுக்கு எல்லாம் தெரியும்... முதுகு வளைந்தவனின் முணுமுணுப்பு!

வழுக்கை விழுந்த ஒரு வயதானவன் பேச ஆரம்பித்தான். 'அவனைப்' பற்றிப் பேசினுன்—ஜாரைப்பற்றி! கூட்டம் கவனமாகக் கேட்டது. உயிர் கருகிய ஒரு பிணத்துக்கு—ஊளுத்து ஓடாகிப்போன ஒரு பொம்மைக்கு—ஜீவனளிக்க சிரமப்படுவது போலிருந்தது அவன் முயற்சி. பிரசங்கியின் வார்த்தைகளில் புகழ்ச்சி இருந்தது— உணர்ச்சி இல்லை. பிரசங்கி 'அவனை' கடவுளுடன்ஒப்பிட்டார். சக்தி வாய்ந்தவனுக—கருணையே உருவானவனுக—நீதி நிறைந்த நேர்மையாளனுக—மக்கள் குறைகளை தகப்பன்போல வாஞ்சையுடன் கவனிக்கும் தயாபரனுக—'அவனை' உருவகப்படுத்தி பேசினுர்...

நம்பிக்கைச் சுடர் மக்களின் கண்களில் எரிந்தது, உள்ளம் உவகையால் உயிர் பெற்றது. அவர்களிடம் லேசாகப் படிந்திருந்த சந்தேகம் அடியோடு புதையுண்டது—

நமக்கு செங்கொடி வேண்டாம்—வழுக்கைத்தலையன் இதைக் கூறிக்கொண்டே கூட்டத்தின் முன்னே சென்றுன். தோளில் மஞ்சள் பட்டியுடன் கூடிய கருப்பு மேலங்கி அணிந்திருந்தான் அவன்...பாதிரி கேபன்...

தோழர்களே! நமது ரத்தத்தின் நிறம் சிவப்பு...செங்கொடி வேண்டும்...கூட்டத்திலே உறுதியான ஒரு குரல் சீட்டியடித்தது.

ஏய்! நிறுத்து! நாம் நமது தந்தையிடம் போகிறோம், நமக்கு தீங்கு ஏதும் செய்யமாட்டான்...'சுய மோச உணர்விலே' ஒருவன் கத்தினன்.

மறந்துவிடாதீர்கள் தோழர்களே! மக்கள் சக்தியின்றி வேறெதுவும் நம்மை விடுவிக்க முடியாது...

அவனை விரட்டுங்கள் கலாட்டாக்காரன்-ஒரு பெரியவரின் ஆத்திரம்!

தயக்கத்தை உதறித்தள்ளிவிட்டு கொஞ்சம் வேகமாக அடியெடுத்து வைத்தார்கள். 'அவன்' அவர்களுடைய கற்பனையில் வளர்ந்து கொண்டே போனுன். கூட்டத்தினர் தாங்களே சிருஷ்டித்த பொருளின் அன்பில் நம்பிக்கை வைத்து முன்னேறினர்...

பல தெருக்களையும் கடந்து, ஆற்றின் கரையை அடைந்த போது பாலத்துக்குச் செல்லும் பாதையை தடுத்து ஒரு போலீஸ் பட்டாளம் நிற்பதை மக்கள் பார்த்தனர்.

ஆற்றின் அக்கரையில் ஒரு பெரிய மாளிகை எழிலோடு எழுந்து நின்றது. அங்குதான் 'அவன் ...ஜார்...இருக்கிறுன்.

சிப்பாய்களின் வரிசையைக் கண்டு மக்கள் பயந்துவிடவில்லை. தங்கள் குறைகளைக் கூறவரும் மக்களை தடுக்குமாறு தன் சிப்பாய்களுக்கு 'அவன்' உத்தரவிட்டிருக்க முடியாது என்று மக்கள் நம்பினுர்கள்,

எனினும் பலருடைய முகங்களில் குழப்பம் சிறகு விரித்தது. முன்வரிசையிலிருந்தவர்களின் நடை தளர்ந்தது. சிலர் கூட்டத்தைவிட்டு நடைபாதையில் ஏறிக் கொண்டனர்.

புத்துலகச் சிற்பி—ஸ்டாலின்

"சத்தம் போடாதீர்கள். ஒழுங்கை நிலைநாட்டவே சிப்பாய்கள் இங்கு இருக்கிறுர்கள்..."

"சிப்பாய்கள் வாழ்க"

நம்பிக்கை கலந்த குரல்கள் முணுமுணுத்தன.

மஞ்சள் நிற மேலங்கி அணிந்த ஒரு அதிகாரி வாளை தலைக்குமேல் ஆட்டியபடி கூட்டத்தினரை பார்த்து சத்தமிட்டான்.

"அவர்கள் என்ன செய்கிறுர்கள்!—உடல் பருத்த ஒருத்தி கேட்டாள். அவள் கேள்வி அனுதையாக மடிந்தது.

நமது ஜாரிடம் நாங்கள் போகிறோம்—பலர் சேர்ந்து இப்படி சத்தமிட்டனர்,

திரும்பிப் போய்விடுங்கள், போகாவிட்டால் சிப்பாய்களை சுடும்படி உத்தரவிடுவேன்—அதிகாரியின் பதிலைக் கேட்டு மக்கள் திகைப்படைந்தனர்.

நம்மை விடமாட்டார்கள் என்று நான் அப்போது சொல்லவில்லையா?

சுடுவார்களாமே!

தைரியமிருந்தால் சுடட்டும்!

'கசமுச'வென்று பல குரல்கள் எழுந்தன. கோபப் பேச்சும், கேலிச் சொற்களும் வாரி வீசப்பட்டன. மக்கள் உள்ளங்களில் உணர்ச்சிப்புயல் சுழன்றது. ஆற்றிலிருந்து குளிர் கோர்த்த காற்று வீசியது.

முட்டாள் தனத்தினுல் பகுத்தறிவு சின்னபின்னமாக உடைத்தெறியப்பட்டு மௌனமாக இருந்தது. துப்பாக்கி முனைகள் பளபளத்தன.

முன்னேறிய கூட்டத்தில் சட்டென்று ஒரு சலசலப்பு! ஒரு கணம் எல்லோருடைய குரலும் ஒடுங்கியது. சுடுகாட்டு அமைதி சூழ்ந்தது.

சுடு—யாரோ கத்தினுர்கள்.

அடுத்த கணம் அங்கு மிங்கும் கூக்குரல்கள் வெடித்துச் சிதறின.

டுமில்—டுமில்

கூட்டத்திலிருந்தவர்களின் காலடியில் பல உடல்கள் கிடந்தன. மார்பை கரங்களால் அழுத்தியபடி ஒருத்தி ஊக்க ஓலமிட்டுக் கொண்டே ஓடினுள்—

மீண்டும் துப்பாக்கிகளின் கர்ஜனை கேட்டது. இருவர் மூவராக மக்கள் தரையில் சாய்ந்தனர். சிலர் வயிற்றை அழுத்திப்பிடித்துக் கொண்டு விழுந்தனர். சிலர் நொண்டி விழுந்தனர்.

பனி படிந்த தரையில் செந்நிற ரத்தம் திட்டு திட்டாக சிதறிக் கிடந்தது.

கூட்டத்திலிருந்து உடலை நடுங்க வைக்கும் பயங்கரமான கூச்சல் கிளம்பியது. வேதனை— தன்மை—பீதி—ஆர்ப்பரிப்பு ஆகிய அனைத்தும் கலந்த குரலாக...உதவி நாடி ஓலமிடும் கூக்குரலாக...அது இருந்தது.

கொல்லப்பட்டவர்களையும், காயமடைந்தவர்களையும் தூக்க பலர் அங்குமிங்கும் ஓடினர்.

காற்றுல் சுழற்றிச் செல்லப்படும் உலர்ந்த சருகுகளைப்போல பீதியால் குழப்பமடைந்து அவர்கள் ஓடவில்லை. அவர்கள் கண்களில் வெறி ஏறியது. கண்ணெதிரே கண்ட காட்சி அவர்கள் இதயத்தை உறையச் செய்துவிட்டது.

அசையாமல் நிலைத்து நின்று பனிக்கட்டி மீது வழிந்தோடிய ரத்தத்தைப் பார்த்தனர். 'அவனி'ன் மாளிகை மீது மளமளவென்று மின்னிய தங்க தேவதையின் உருவத்தை சிலர் வெறித்துப் பார்த்தனர்.

சில விநாடிகளுக்கு முன்புதான் அவர்கள் உள்ளத்தில் 'அவன்' கடவுளைப் போல கம்பீரமாக நினைத்திருந்தான். ஆனல் இப்பொழுதோ ரத்த வெள்ளத்தில் மிதக்கும் பிணங்களுக்கிடையே அவர்கள் நின்றனர்.

விளக்குக் கம்பத்தின் மீது ஏறிக்கொண்டு ஒரு சிறுவன் கத்தினுன்.

கேபன் ஒரு துரோகி...

குறை சொல்ல வந்த நமக்கு அவர்கள் தரும் வரவேற்பைப் பார்த்தீர்களா, தோழர்களே!......

"இல்லை, சகோதரர்களே! நம்மை வேறு யாரோ என்று நினைத்து விட்டார்கள். போய் விளக்கிச் சொல்லுவோம்......"

முட்டாள்தனமாக பேசாதே! மக்களைப் பற்றி அந்தப் பிசாசுகளுக்கு கவலை இல்லை...

ஒருவருக்கொருவர் கொதிப்படைத்த வார்த்தைகளை வாரி வீசிக்கொண்டனர். இரண்டு தொழிலாளர்கள் ஒரு பெண்ணை தூக்கி வந்தனர். அவள் உடல் பனியால் மூடப்பட்டிருந்தது, அவள் விரல் நுனி வழியாக ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது'

திடீரென்று இடிபோல ஒரு குரல் அதிர்ந்தது.

குதிரைப்படை வருகிறது ஓடுங்கள்——

மக்களுக்கு திடீரென்று தங்கள் முகத்தில் சுழற்காற்று அறைந்ததுபோல இருந்தது. வெறி பிடித்தவர்கள்போல ஓடினுர்கள்.

குதிரைகளின் குளம்படி சப்தம் அவர்களுக்கு கேட்டது. குதிரை வீரர்கள் ஊளையிட்டனர்.

"ஐயோ......"

காயமடைந்தவர்களை தூக்கிவந்தவர்கள் அவர்களை கீழேபோட்டு விட்டு ஓடினர். குதிரையிலிருந்தபடியே வீரர்கள் மக்களை அடித்து விரட்டினர். காயமடைந்து கிடந்த பெண்ணின் முகத்தில் தனது முன்னங்காலை வைத்து அழுத்தியபடி ஒரு குதிரை ஓடியது.

வந்த வழியே திரும்பி ஓடினுர்கள். குளம்புச்சப்தம் அடங்கியது. திகைப்பும் பீதியும் கோபமும் கலந்த குரல்கள் தீத்துண்டுகளென சுழன்றன.

படுகொலை பயங்கரமான படுகொலை!

நம்மை துண்டுதுண்டாக கிழித்தெறிகிறுர்கள்!

ஆதிக்கக் காரர்கள் நம்மை குதிரைகளை விட்டு மிதிக்கச் சொல்கிறுர்கள்

ஒருவருக் கொருவர் விசித்திரமாக வெறித்துப் பார்த்தனர். அவர்கள் கண்கள் கோபத்தால் பிதுங்கின.

வாருங்கள், காயம் பட்டவர்களை தூக்குங்கள்—ஒரு இளைஞனின் குரல் கணீரென எழுந்தது.

திகைப்பிலிருந்து விடுபட்டு ஆற்றை நோக்கி வேகமாக சென்றனர். எதிர்திசையிலிருந்து உடம்பெல்லாம் ரத்தக் களரியுடன் காயமடைந்தவர்கள் வந்து கொண்டிருந்தனர். குடல் சரிந்தோர் கரமிழந்தோர் காலிழந்தோர் கண்களை பறிகொடுத்தோர்—

அவர்கள் இரத்தம் கொதித்தது. ஜாரை, பெரிய வீரராக தர்மப்பிரபுவாக இனதயாளுவாக அவர்கள் செய்திருந்த கற்பனை தூள் தூளாகியது!

அவர்கள் எதிரே ஒரு வயதானவர் வந்தார். மங்கலாகப் பிரகாசித்த அவன் மண்டையில் ரத்தம் ஒழுகியது. கால்கள் பின்னிக்கொண்டன. ஒரு பெண்ணும் ஒரு இளைஞனும் அவனை தாங்கி வந்தனர். அவர்கள் முகம் செத்திருந்தது.

மக்களை சுடுகிறுர்கள் நம்பிக்கையுடன் வந்தவர்களை நாய்போல சுடுகிறுர்கள். கொடுமை! சகிக்க முடியாத கொடுமை

ஆனலும் நடக்கிறது.—

இரக்கமின்றி சுடுகிறுர்கள். கொஞ்சிடும் குழந்தைகளின் இருதயங்களை கிழிக்கிறுர்கள். பெண்களை துப்பாக்கி முனையால் கீறி எறிகிறுர்கள். வயோதிகர்களை குதிரைகளை விட்டு மிதிக்கிறுர்கள். வாலிபர்களை குண்டுகளால் துளைக்கிறுர்கள்.

காயமடைந்த ஒருவன் தன் முதுகை சுவற்றின் மீது சாய்த்துக் கொண்டு கத்தினுன்—

தோழர்களே! அவர்கள் நமக்கு பிணமாளிகை கட்டுகிறுர்கள், நமது ரத்தச் சகதியில் தங்கள் ஆனந்தத்தை மலரவிடுகிறுர்கள். எந்த சட்டத்தின்படி! யார் உத்தரவின் பேரில்! அவர்களுக்கு எப்படி துணிவு வந்தது!

தெரு முனையில், வேலிபோரமாக பலர் கூடி நின்றனர். கோபம் கொப்பளிக்கும் குரலில் ஒருவன் மூச்சுத் திணற கத்தினுன்—

பாதிரி கேபன் நேற்று மந்திரியைப் பார்க்க சென்றிருந்தான். இன்று என்ன நடக்குமென்று அவனுக்கு தெரியும். இருந்தும்— அவன் நமக்கு துரோகம் செய்துவிட்டான்.

அவர்கள் முகங்கள் தீவட்டிபோல சிவந்தன.

கூந்தலணிந்த ஒரு பெண் தெரு வழியே சென்றுள். ரத்தம் சொட்டிய இடது கையை வலக் கையால் பிடித்தபடி அவள் புலம்பினுள்.

எப்படி என் குழந்தைகளை காப்பாற்றுவேன்! யாரிடம் என் குறையை சொல்வேன்! இனி நான் என்ன செய்ய முடியும்!

அவள் கக்கிய கேள்விகள் மக்கள் உணர்வில் புயலைப் புகுத்தியது! அவளை நோக்கி எல்லோரும் ஓடினுர்கள்.

மக்களுக்கென்று சட்டம் எதுவும் இல்லை என்பதுதானே இதன் பொருள்?

கோபமடைந்த கீச்சுக் குரல் ஒன்று ஒலித்தது—

என்னுடைய மகளின் காலை முறித்துவிட்டார்கள்.

என்னுடைய பீட்டருக்கு புதைகுழி தோண்டிவிட்டார்கள்.

யாகோவ் நெற்றியில் குண்டு பாய்ந்து மண்டை சிதறிவிட்டது.

பல குரல்கள் தீ உமிழ்ந்தன அவர்கள் குரல்களில் 'பழிக்குப்பழி' என்ற வெறி கொழுந்துவிட்டு எரிந்தது. களை இழந்த அவர்கள் முகங்கள் இறுகின. கண்களும் பற்களும் மட்டும் பிரகாசமாக பளிச்சிட்டன.

தோழர்களே! நாம் மீண்டும் போவோம் இதற்கு ஒரு முடிவு கட்டியாகவேண்டும்.

அப்போது "எனது அம்மாவைப் பார்த்தீர்களா? என்று அழுது கொண்டே ஒரு சிறுமி தெருவில் ஓடினுள்.

பேசிக்கொண்டிருந்தவர்கள் நிறுத்தினர். எங்கும் மயான அமைதி.

உருக்குலைந்த கைகளுடன் இருந்த ஒரு தாய் கத்தினுள்—நான் இங்கே இருக்கிறேன். இதோ—

அவர்கள் ஒருவரும் பேசவில்லை. ஆற்றை நோக்கி நடந்தனர். காயமடைந்தவர்கள் பலர் எதிர்ப்பட்டனர். ரத்தவாடை காற்றில் வீசியது.

'அவனுடைய' பெயரை ஒருவரும் உச்சரிக்கவில்லை. அந்த

26—ம் பக்கம் பார்க்க

ருஷ்யநாட்டு முதல்வர் மாலெங்கோவ்

# மாவீரன் மார்க்ஸ்

22ம் பக்கத் தொடர்ச்சி

போராட்டம் முதலாளித்துவத்திற்கும் தொழிலாளிக்கும் உண்டாக வேண்டும் என்று சிந்தித்தான்.

வளைந்தவாழ்வை நிமிர்த்தவேண்டுமானால் தொழிலாளி தன்னை நன்கு உணரவேண்டும் என்று எண்ணினான் கொதிக்கும் நெஞ்சமுடையவர்களை கூர்வாளாக்க முனைந்தான். அடக்குமுறை மடியவேண்டுமானால் ஆயிரம் ஆயிரம் தொழிலாளிகள் தங்களின் மகத்தான சக்தியை உணரவேண்டும் என்று திட்டமிட்டான். அப்போழுது தான் நல்லதொரு ஆட்சியை அமைக்க முடியும்; உண்டாக்க முடியும்; மக்கள் வாழ வழி செய்ய முடியும்; என்ற கருத்துக்கு வந்தான்!

இக்கருத்துக்கேற்ப மார்க்ஸின் ஒவ்வொரு எண்ணத்திற்கும் செயலுக்கும் தூண்டுகோலாக விளங்கினான் எஞ்சல்ஸ்!

மார்க்ஸின் பேனா முனையில் உதிர்ந்த எழுத்துக்கள் மூலை முடுக்குகள் எல்லாம் உருண்டோடியது! உணர்ச்சியற்றுப்போன உள்ளங்களுக்கு உயிர் ஊட்டியது! வாடிய உள்ளங்களுக்கு வழி காண்பித்தது!

மார்க்ஸ் பெல்ஜியத்தில் இருந்தான் பல்வேறு நாட்டுச் சங்கங்களுடன் உறவு கொண்டான். நாடுவிட்டு ஓடிய புரட்சிக் காரர்கள் மார்க்ஸுடன் கடிதத் தொடர்பு கொண்டனர். ஒவ்வொரு சங்கத்திற்கும் புரட்சிக் காரர்களுக்கும் சம் கொள்கை, அபேதவாதம் பரவ வேண்டியதின் அவசியம் எல்லாம் உணர்த்தினான் மார்க்ஸ். அகில உலக புரட்சி இயக்கம் ஒன்று நிறுவ முயன்றான். எவ்வளவோ நாட்கள் பாடுபட்டான். நாட்கள் பல துயில் ஒழித்தான் அவனது அவா ஈடேறிற்று.

தன்மான இயக்கத்தின் தனிப்பெருந் தலைவர்—திராவிடத் தந்தை பெரியார் அவர்கள்

சென்னை மாநிலத்திலே—மேதின விழாவை முதன் முதலாகக் கொண்டாடியதற்கு வழி காட்டிய மேதை.

1847–ல் இலண்டனில் மாபெரும் மாநாடு ஒன்று நடந்தது புரட்சி இயக்கம் ஒன்று தோற்றுவிக்கப் பட்டது. அந்த இயக்கத்திற்கு எழுத்துலக மன்னன் மார்க்ஸ் முதல் தலைவன் ஆனான்.

நன்கு உழைத்தான். சட்ட திட்டங்களை நன்கு வரையறுத்தான். புத்தம் புதிய சிருஷ்டிகளைக் கொண்டு வந்து விளக்கினான்:

1848ம் ஆண்டு! உழைப்பெல்லாம் உருவமாகிக் கொண்டிருந்த வேளை. பல்வேறு புரட்சிக்காரர்களும் ஒத்துழைப்புத்தந்த தருணம். மார்க்ஸ் ஓர் திட்டத்தை வெளியிட்டான்.

'தொழிலாளர்கள் தான் மாபெரும் சக்தி. அவர்கள் தங்கள் சக்தியை உணர்ந்தால் அவர்களை யாரும் அடக்கியாள முடியாது. உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று முடித்தான். அதுதான் முதல் மாபெரும் புரட்சி பிரகடனமாக இருந்தது.

மாபெரும் இந்த சித்தாந்தத்தைக் கண்டு பயந்தது பெல்ஜியம். பயங்கரமானது என்று எண்ணியது. அதை நோக்கி அடக்குமுறை கொடுவாளை நீட்டியது.

1848ம் ஆண்டு! புரட்சிபூமி பிரஞ்சு எல்லையில் மறுமுறையும் காலைவைத்தான் மார்க்ஸ்! மறுநாள்—மார்க்ஸ் பாரீஸில் காலடிவைத்த மறுநாள் பாரீஸ் நகரில் இரத்த வெள்ளம்! புரட்சி ஏங்கியவர்கள் எழுந்தனர். சிறையிலே இருந்தவர்கள் சிங்கமாக மாறினர். எங்கும் தொழிலாளிகளின் அணி வகுப்பு புரட்சிப் புயல் பாரீஸை வளைத்தது.

மார்க்ஸ் ஜெர்மனி சென்றான். 1848ம் ஆண்டு நடைபெற்ற புரட்சியில் மார்க்ஸ் மிகுந்த பணி புரிந்தான். ஓடி ஆடி வேலை செய்தான் கனல் தெறிக்கும் நடையிலே கயவர்களின் கல்நெஞ்சைக் காட்டினான் ஜெர்மானியரின் ஒற்றுமையை வற்புறுத்தினான். பிரஷ்யாவின் பேயாட்சிக்கு சாவாட்சி நடத்தப் புரட்சி தூவினான். பிரஷ்ய அரசாங்கம் மார்க்ஸை சுற்றிவளைத்து குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டான். மார்க்ஸ்ஜெர்மனியிலிருந்து நாடு கடத்தப்பட்டான். அரசாங்கம் ஆள், அம்புகொண்டு அடக்கிவிட்டது. புரட்சி புகைந்தது.

ஜெர்மனியிலிருந்து விரட்டப்பட்ட மார்க்ஸை பாரீஸில் நுழைய அனுமதிக்கவில்லை பிரஞ்சு அரசாங்கம்.

இலண்டனை நோக்கி நடந்தான். 1849 ஆண்டு ஆகஸ்டு மாதம் மார்க்ஸை இலண்டன் மாநகரம் ஏற்றுக் கொண்டது!

எங்கும் புரட்சி சரிந்தது! தோல்வியுற்றது! மார்க்ஸ் பெரிய புரட்சிக் காரன், பயங்கரவாதி என்று பெயர் சூட்டியது பல்வேறு நாடுகள்! ஐரோப்பிய நாடுகள் அவன் பெயர் கேட்டு அஞ்சின.

வறுமையைக் கண்டு எவன் ஒருவன் அஞ்சாமல் வாழ்க்கை நடத்துகிறானோ அவன்தான் பெரிய புரட்சிக்காரன்! அறிஞன் என்று ஒருவன் சமுதாய வாழ்க்கையில் நுழைந்தானோஅன்றே அவன் வறுமையைத் தானாகஅழைத்துக் கொண்டதாகத்தான் அர்த்தம். மார்க்ஸ் இதற்கு விதி விலக்கல்ல! இலண்டன் நகர் வந்தபிறகு மிகுந்த தொல்லைக்குள்ளானான் மார்க்ஸ் அவன் குடும்பம் மிகுதியும் அவதிப்பட்டது, போதிய வருவாய் இல்லை. கோரமான வறுமை பணம் கொடுத்து உதவுவார் யாரும் இல்லை! உற்றநண்பன் ஏன்ஜல்ஸ் அப்போதைக் கப்போது உதவி வந்தான்.

1883ம் ஆண்டு உழைப்பு அவனை ஒருவாறு உருமாற்றம் செய்துகொண்டிருந்தது. வறுமை வாட்டியது சொல்லொணாத்தொல்லை! அதேஆண்டு அவன் மறைந்தான்.

உலகத் தொழிலாளிகளின் சுயேச்சை உணர்வை ஊட்டிய வீரன் மார்க்ஸ் பாட்டாளி வர்க்கம் உய்யும் பொருட்டு ஒப்பற்ற **'மூலதனம்'** என்ற நூலை அளித்து விட்டுச்சென்ற புரட்சிக்காரன் மார்க்ஸ். இன்றைய தினம் மேதின விழா சிறப்பாகக் கொண்டாடும் அளவிற்கு முதல் பாதையை வகுத்துக் கொடுத்து விட்டு மறைந்த மாவீரன் மார்க்ஸ்.

மே தினம் கோடிக்கணக்கான தொழிலாளிகளின் புரட்சி தினம் மாவீரன் மார்க்ஸின் வழியைக் கடைபிடிக்கும் தினம்.

இன்றைய மே தினவிழாவில் அவன் குரல் எங்கும் ஒலிக்கட்டும் அவன் கண்ட உண்மைகள் ஒலிக்கட்டும்.

1818ல் மண்ணிலே பிறந்தான்!
1883ல் மண்ணிலே மறைந்தான்.
மாவீரன் மார்க்ஸின் கொள்கை வளர்க
மேதினம் வாழ்க.

# முதலில் மனிதர்களாவோம்

மு. சண்முகம், சென்னை

**"ஒருவனை ஞானியாக்குவது அப்புறமிருக்கட்டும்; முதலில் அவனை மனிதனாக்க முயலுங்கள்!**

**இப்படிக் குரல் கொடுத்தான்** ஒருவன்—மனித சமுதாயமத்தனைக்கும் அதிகாரக் குரலில் ஆணையிட முற்றும் உரிமை படைத்த ஒருவன்—அவன் தான் **ரூசோ!**

அவனுடைய போதனை பொய்த்துப் போகவில்லை. ஞானியாகவேண்டுமென்ற ஆசையில், தனது மனிதத் தன்மையை அடகு வைத்துவிட்ட ஒவ்வொரு மனிதனும் ஆர்ப்பரித்தெழுந்தான்—தனது அடிமைத் தனத்துக்கு காரணமான அத்தனையையும் 'ஒரு கை' பார்த்து ஓய்ந்தான்! தான் மனிதத் தன்மை பெற்றுவிட்ட 'சமாச்சாரத்தை' பிரஞ்சுப் புரட்சியென்ற பெருந் தமுக்கில், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற பேரொலியெழுப்பித் தெரிவித்துவிட்டான்!

ரூசோவின் போதனையினால் புதுமுறுக்கேற்றிக்கொண்ட பிரஞ்சுச் சமுதாய வண்டி. ஒழுங்காக நெடுங்காலம் ஓடியதா இல்லையா என்பது வேறு விஷயம்; ஆனால், அதுவரையில் உலகில் நிலவிவந்தசம்பிரதாயங்களனைத்தும் ஒரு அசக்கு அசைத்துவிட்டது என்பதென்னவோ மறுக்கமுடியாத உண்மை.

ரூசோ தீட்டிய சுதந்திரக் கனவின் விளைவுகளுக்குமாகச் சரியான விளக்கம் கொடுத்த கார்லைல் என்னும் பெரும் புலவன்,

**"மனித வாழ்க்கை மனந் திரும்புதலால் பூரண மடைகிறது"**

என்றெழுதி ஆண்டாண்டு காலமாக 'பாடம்' செய்து மூளையில் அடைத்து வைத்திருக்கும் மோசமான கொள்கைகள் மாறினால், அப்போதுதான் வாழ்க்கையே பூரணத்துவம் பெற்றதாக ஆகிறது என்று தெளிவாகப் பறைசாற்றிவிட்டான்.

முன்னவன் 'இருள் அகலட்டும்' என்றான்; பின்னவன் 'ஒளி புகுந்தாக வேண்டும்' என்றான்.

இந்த இரண்டையும் ஒன்றாக்கிக் காட்டி, செயல் மூலமாகவே சாதித்து விட்ட பெருமைத் தட்டிக்கொண்டது, இந்த **மே முதல் நாள்!**

மேதினச் சரித்திரம் ரத்தநெடி வீசுவது; ஏனென்றால் அது ரத்தத்தால் எழுதப்பட்டது. ஆகவேதான், இந்த மேதின நினைவு ஒவ்வொரு மனித இருதயத்திலிருந்து வெளியேறும் ஒவ்வொரு துளி ரத்தத்தையும் திண்மையுடையதாக, கொதிப்பேறியதாக, கொடுங்கோன்மையைச் சாய்க்கும் உறுதி பெற்றதாக மாற்றுகிறது-மாற்ற முடிகிறது!

சிகாகோ நகரில் தங்களுடைய செங்குருதியை மண்ணில் கலக்கவிட்டு, மேதினம் என்ற மகத்தான பெருநாளை மனிதப் பரம்பரையின் நிரந்தரச் செல்வமாக்கிவிட்டுச் சென்ற தொழிலாளர்களின் தியாகத்தை, எத்தனையோ அறிஞர்கள், எத்தனையோ இயக்கத்தவர், எத்தனையோ தலைவர்கள் எப்படியெல்லாமோ வியாக்கியானம் செய்து வைத்திருக்கிறார்கள்—செய்து வருகிறார்கள்.

ஆனால், நாம் சொல்லுகிறோம்; அது சிகாகோ தொழிலாளர்களின் செப்பரிவத்தியாகம்—மனிதத் தியாகம்—மனித சமுதாயம் மன மாறுதலைப் பெற்றாக வேண்டும் என்பதற்கும், மூளையில் திணித்து வைத்திருக்கும் 'அழுக்கு' மூட்டைகளை அப்புறப்படுத்தினாலொழிய மனித சமுதாயத்துக்கு, தான் நினைத்ததைக் சாதித்துக்கொள்ளும் நெஞ்சுறுதி வராது என்பதற்கும் மிகச் சரியான எடுத்துக்காட்டான நுணுக்கமான அறிவிப்பு!

இதனால்தான், மேதினம் உலகமனைத்துக்கும் பொதுவான பெருநாளாகிவிட்டது. சிகாகோ நகரின் மேதின எழுச்சி பெரும் பொருளாதார மாற்றத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்குமானால், கார்ல் மார்க்சின் மூலதனம் என்ற நூலுக்கு, நியூயார்க் நகரமல்லவா, 'பாஷ்யம்' செப்பிக்கொண்டிருக்கும்? ஐசன்ஹோவரின் குறிப்பையல்லவா சிகப்புச்சீனாவும் சோவியத் ரஷ்யாவும் எதிர்பார்த்துக் காத்திருக்கும்? மேதினப் புரட்சி, பொருளாதார மாற்றத்தைக் கோரி மட்டும் செய்யப்பட்டிருக்குமானால், லெனின் ரஷ்யாவிலல்ல, டோரண்டோ நகரிலோ, கலிபோர்னியா மண்ணிலோ பிறந்திருப்பான்!

ஆகவே, மே தினப் புரட்சி ஒரு குறிப்பிட்ட லட்சியத்திற்காக மட்டும் செய்யப்பட்டது என்பதை நாம் ஒப்புக் கொள்ளமுடியாது. அதுவரையில் முணுமுணுத்துக்கொண்டு, பழமையான எண்ணப்போக்கை அதனால் விளையும் பயங்கர விளைவுகளைச் சகித்துக் கொண்டு வந்த மனித சமுதாயத்தின் பொறுமைக்கு ஓர் விளிம்பு கட்டிவிட்டனர், சிகாகோ தோழர்கள்!

அதுமட்டுமல்ல, சிகாகோ தொழிலாளர்கள், தங்களுக்கு ஏற்பட்ட மன மாறுதலை, சில உயிர்களைப் பலியிட்டு விட்டதோடு தங்களுக்கும் ஓர் விளிம்பு கட்டிக் கொண்டனர்.

அவர்கள் உதறித்தள்ளிவிட்ட 'மன மாறுதல்' எனும் சூறாவளி, மேற்கே நகர்ந்தது; மாஸ்கோவிலே மணம் வீசுகிறது.

1921-ம் ஆண்டு சென்னை பக்கிங்காம் மில் தொழிலாளர் போராட்டத்தில் தொழிலாளர் தலைவர் திரு. வி. க. அவர்களுக்கு பக்கத்துணையாக நின்று தொழிலாளர் உரிமைக்குத் தூய பணியாற்றிய திராவிடப் பெருந்தகை

டாக்டர். ஸி. நடேசனார்

மே தினத்தில் சிந்திய உதிரத்துக்குச் சரியான 'பழிதீர்க்கும்' எண்ணத்தைப் பட்டுப்போகாமல் காப்பாற்றி வைத்திருக்கும் திறன் படைத்த 'லெனின்' ஒருவன் சிகாகோவில் பிறந்திருப்பானானால், அணுகுண்டு செய்யும் முறை மனித மூளைக்கு எட்டியிருக்காது; ஹைட்ரஜின் குண்டுகள் பரிசோதனை செய்யப்படமாட்டா! இந்த இடத்திலும் ரூசோவின் போதனை முற்றும் பலனளிக்கவில்லை.

தொழிலாளிவர்க்கத்துக்கு ஒருபெரும் விழிப்பை உண்டாக்கிவிட்டு, உறங்கிவிட்டது சிகாகோ நகரம்!

இனி, சிகாகோ நகரிலிருந்து மெல்ல மேற்கே நகர்ந்த மனமாறுதல் 'சண்டமாருதம்' எப்படியெப்படி உருமாறி, கடைசியில் பொருளாதார விடுதலையில் முடிந்தது என்பதையும் சற்று கவனிப்போம்.

*

*1799*-ம் ஆண்டுடன் 'ஆடி அடங்கிய பிரஞ்சுப் புரட்சி, நெப்போலியன் என்ற 'தலைவேதனைக் குழந்தையைப் பெற்றுப் போட்டுவிட்டு; கண்மூடி விட்டது. அந்த கிறுக்குக் குழந்தை 'ஆடிய ஆட்டம் சரித்திரத்தில் ஒரு சுவையான பகுதி, இந்தச் 'சுவைநடை' போடும் பகுதிக்கு மேலும் கொஞ்சம் மெருகு கொடுக்க. *1812*-ம் ஆண்டு ருஷ்யா மீது படையெடுத்தது, நெப்போலியன் என்ற குழந்தை! ருஷ்யர்களை மாஸ்கோ வரையில் துரத்திப்போன ஒரே திருப்தியுடன்—ஆனால் பெருஞ் சேதத்துடன் பிரான்ஸ் திரும்பினான். ருஷ்யாவிலிருந்து திரும்பியது, நெப்போலியனை 'கிராகாசாரம்' பிடித்துக்கொண்டது வேறு 'ரசனை மாக்க நாவல்.' அது இங்கு தேவையில்லை.

என்றாலும், நெப்போலியனிடம்பட்ட 'உதை', ருஷ்யர்களின் கண்களை அகலத் திறந்துவிட்டது ஒரு மகிழ்ச்சிக்குரிய சேதியாகும்.

நெப்போலியனுடைய மின்னல் அடியும், பிரஞ்சு வீரர்களின் பண்பட்ட போர் முறையும் ருஷ்ய மக்களுக்கு அவமானத்தையும், அதே சமயத்தில் ரோஷத்தையும் உண்டாக்கிவிட்டது.

அடிகொடுத்த பிரான்ஸ், அடிகொடுக்கக் காத்திருந்த ஜெர்மனி, எப்போது ருஷ்யாவில் நுழையலாம் எனக் காத்திருந்த இங்கிலாந்து ஆகிய நாடுகளில், உயர்தரப்படிப்பு பழகிக்கொண்டிருந்த (ஆம்! நெப்போலியன் சகாப்தத்தில் ருஷ்யாவில் உயர்தரப் படிப்பென்பதே தலைகாட்டவில்லை!) பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள்தான், ருஷ்யாவுக்கு நேர்ந்த அபகீர்த்தியைக் கண்டு கண்ணீர்விட்டார்கள்! "எப்படியும் எங்கள் ருஷ்யாவை ஒரு பிரான்சாக ஒரு ஜெர்மனியாக ஒரு இங்கிலாந்தாக மாற்றியாக வேண்டும்" என்று சபதம் எடுத்துக் கொண்டு பணியாற்ற முற்பட்டார்கள்.

பணக்கார ருஷ்ய இளைஞர்கள் வீறிட்டு சீர்திருத்தம் செய்ய கிளம்பி விட்டார்களே தவிர, அவர்களிடம் வேலைத்திட்டம் எதுவும் இல்லை.

அவர்கள் ஆவேசமாகப் பேசினார்கள். நெப்போலியன் நம்மைத் துரத்தியதற்குக் காரணம் என்ன தெரியுமா? அதாவது... என்று இழுத்துப்பேசி, காரணம் தெரியுமா என்று கேள்வி மட்டும் கேட்டுவிட்டு பதில் சொல்லத் திணறுவார்கள்; பதில் அவர்களுக்கே தெரியாதே!

இவர்களுடைய ஆவேசப் பேச்சைக் கேட்ட மக்கள், ஏதோ பித்தர்கள்; அயல்நாட்டுஉயர்தரப்படிப்பும் பங்களாவில் கிடைக்கும் உயர்தர மதுவும் செய்கிற வேலை இது என்று பரிகசித்து விட்டுப் போய்விடுவர்.

இதுபோன்ற அரைகுறை சீர்திருத்தப் பேச்சுக்களினாலேயே, மக்கள் திருந்தி, அவர்களுடைய ஆதரவைத் தங்களுக்கு அளித்துவிட்டார்கள் என்ற தைரியத்தில் அவர்கள் — சீர்திருத்த ஆவேசம்கொண்ட பணக்காரச் சிறுவர்கள்—ஜார் மன்னனிடமே நேரடியாகப் போராட்டப் பிரகடனம் தொடுத்தார்கள்,

விளைவு என்ன? எல்லா இளைஞர்களும் பீரங்கிக்கு பலியானார்கள்; தூக்கு மேடையை முத்தமிட்டார்கள்! இந்த சம்பவம்தான் டிசம்பர் புரட்சி என்றும் உயிரைப் பலி கொடுத்த இளைஞர்களையும் அவர்களைப் பின்பற்றியவர்களையும் தான் டிசம்பரிஸ்டுகள் என்றும் இன்றைய சரித்திரம் வர்ணிக்கிறது.

இந்த டிசம்பரிஸ்ட் இளைஞர்களின் தியாகம் *1905*-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *22*-ந்தேதி நடந்த 'ரத்த ஞாயிறு' படுகொலையிலே உயிர் துறந்த வீரர்களின் தியாகத்துக்கும் மேதினப் புரட்சியிலே உயிர்துறந்த சிகாகோ வீரர்களின் தியாகத்துக்கும் எந்த வகையிலும் மாற்றுக் குறைந்ததல்ல!

'டிசம்பரிஸ்டுகள்' உயிர் கொடுத்த செயலினால், ருஷ்ய மக்களின் எண்ணத்திலே மகத்தான மாறுதல்களை உண்டாக்கிவிட வில்லையானாலும், புஷ்கின், டர்கனேவ், கோகோல் போன்ற பேனா மன்னர்களை, தங்களுக்குப் பின்னால் போராடக்கூடிய படை வீரர்களாக உண்டாக்கிக் கொடுத்துவிட்டார்கள்.

டிசம்பரிஸ்டுகளின் நேரடி வாரிசாகத் தோன்றினான் புஷ்கின்! நாதியற்றுக்

டந்த ரஷ்ய மொழியிலேயே கனல் தெறிக்கும் நடையில் கவிதைகளை எழுதிக் குவித்தான்! ஆயிற்று....... ரஷ்ய மொழியிலே முதல் இலச்சியம் தோன்றவாரம்பித்தது; ரஷ்ய மக்களின் உள்ளத்திலே மறுமலர்ச்சிப் புயல் வீசத் தொடங்கி விட்டது. அது வரையில் அரசோச்சி வந்த சுயேச்சாதிகாரமும். பழமையும் தூள்...... தூள்! புஷ்கினைத் தொடர்ந்து டாக்சனீவ், அவனுக்குப் பின்னல் கோகேல் அதே பாதையில் பிலின்ஸ்கி லெர்மாண்டோவ் ஹெர்சன் செகாவ் மயாக்காவ்ஸ்கி டால்ஸ்டாய் மாக்சிம் கார்க்கி...புயல் புயல்..புரட்சி..

*

சிகாகோ தொழிலாளர் செய்யவேண்டியதை லெனின் செய்துமுடித்தான்!

*

இவ்வளவும் நாம் சொல்லும் காரணம் வெறும் பொருளாதார பேதத்தை காட்டியே அது மாறியாகவேண்டும் என்பதை எடுத்துச் சொல்லியே மக்களை மறுமலர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லமுடியாது.

ருஷ்யப்புரட்சி 1917-ஆம் ஆண்டு வெற்றி முரசு கொட்டியதென்றாலும் அதற்கு ஏறக்குறைய 1825-ம் ஆண்டு முதற்கொண்டே வேலைசெய்து நாட்டின் சூழ்நிலையைச் சரிப்படுத்தவேண்டியிருந்தது! 90 ஆண்டு காலமாக பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களின்மூலம் பல்வேறுபட்ட முறைகளைக் கையாண்டு பலப்பலர் பணியாற்றி யிருக்கின்றனர்.

லெனினுக்கு முன்னால் ரஷ்யாவிலே பொருளாதார சீர்த்திருத்தம் அவ்வளவாகப் பேசப்படவில்லை. சமுதாய சீர்திருத்தம் கலையில் மறுமலர்ச்சி ரஷ்ய மொழியின் வளர்ச்சி மேல் வர்க்கத்தாரின் கொடுமை களையவேண்டிய அவசியம் ஆகியவைகளைப் பற்றித்தான் பேசித் தீர்த்தார்கள், லெனினுக்கு முன்னால் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஒழித்துக் கட்டினால் எல்லாம் சரியாகிவிடும்என்பதையேமுக்கியமாகச்சொல்லவில்லை சீர் திருத்தம்தேவை, ரஷ்யா ஜெர்மனிக்குச் சமமாக பிரான்சுக்குச் சமமாக ஆகவேண்டும் என்பதே அவர்களுடைய முக்கிய ஸ்லோகமாக இருந்தன.

நாம் நம் நாட்டு மக்களிடத்திலே இப்போது எடுத்துச் சொல்லிவரும் சீர்திருத்தங்களைக் கேலி பேசி பொருளாதார விடுதலையால் எல்லாம் சரியாகிவிடும் என்று மார்தட்டும் கம்யூனிஸ்ட் தோழர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்று கேட்க விரும்புகிறோம்.

தி. மு. கழக எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் பாட்டாளிமக்களின் சர்வாதிகார ராஜயத்தை ஸ்தாபிக்கும் செயலை ஒத்திப்போட்டு வகுப்புத் துவேஷத்தைப் பரப்புவதாக பசப்பும் தோழர்களை ஒன்று கேட்கிறோம். ரஷ்யாவிலே பிலின்ஸ்கி என்ற சக்தி வாய்ந்த விமர்சகன், வெறும் பொருளாதார சீர்திருத்தம் தான் பேசிக்கொண்டிருந்தானு? புஷ்கின் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் ஒன்றைதான் தேவையென்று வாதாடி கவி புனைந்தானு? செகாவ் கதைகளிலே தி. மு. கழக எழுத்தாளர்களின் கருத்து தொனிப்பதை மறுக்கத்தயாரா? எல்லாவற்றிற்கும் மேலாக மாக்சிம் கார்க்கி ஒருவனைத் தவிர மற்ற ருஷ்ய மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் முழுக்க முழுக்க பொருளாதார சீர்திருத்தம் ஒன்றை மட்டுமே பேசித் தீர்த்தார்களா?



தென்னாட்டின் விஞ்ஞான மேதை
தொழில் நிபுணர்
கோவை ஜி. டி. நாயுடு.

டால்ஸ்டாய் எழுத்தின் வெண்டைக்காய் தன்மை ஜகப்பிரசித்தி பெற்றதாயிற்றே! முழுக்க முழுக்க மதத்துக்கு வக்காலத்து வாங்கிய டால்ஸ்டாயையே வானத்துக்கும் பூமிக்கும் வளர்ந்து நின்ற கலைஞர் என்று லெனின் வர்ணித்தாரே! அந்த டாவ்ஸ்டாய் எழுத்துக்களைவிடவா தி. மு. கழகத்தவரின் எழுத்து பழமைக்கு திரைபோடுகிறது? பாட்டாளி மக்களின் சாம்ராச்சியத்தை ஒத்திப் போடுகிறது?

லெனின் காலத்திலிருந்து மட்டுமே ருஷ்யச் சரித்திரத்தைப் புரட்டியவர்கள் நமது கம்யூனிஸ்டு தோழர்கள். அவர்களுக்காக நாம் பரிதாபப்படுவோம்! நெப்போலியன் படையெடுத்த காலத்திலிருந்தே விடுதலைப்பெற வேண்டி ருஷ்யசமுதாயம் மேற்கொண்ட பிராணவஸ்தைகளைப் படித்துப் பார்த்து அதற்குப் பிறகு தி. மு. சழகத் தோழர்களின் போராட்டத்தைப்பற்றி அபிப்பிராயஞ்சொல்லுமாறு இந்த மேதினந்தன்று நமது மதிப்புக்குரிய கம்யூனிஸ்ட் அன்பர்களை கேட்டுக்கொள்கிறோம்.

* * *

உலகம் சுருங்கிவிட்டது—உண்மை! ஆனால் ஒன்றுபடவில்லை. அதற்காகச் செய்யப்பட்ட—அல்லது செய்யப்படும் முயற்சிகள் அத்தனையும் தோற்றுப் போனது. தோல்விதொடருகிறது! உலகத்தை ஒன்றுபடுத்தவே பிறந்ததாக மார் தட்டிய ஜூலியஸ் சீசர், அவன் விட்ட இடத்திலிருந்து தொடங்கத் துடித்த நெப்போலியன் மற்றும் செங்கிஸ்கான், தாமர்லேன் அட்டில்லா அலக்சாந்தர் இவர்கள் எல்லோரையம் மிஞ்சி விடப்போவதாக கொஞ்சகாலம் நடித்த இட்லர்—முசோலினி ஆகிய எவரும் சாதிக்கவியலாத காரியத்தை மேதினம்—ஒரு சிலர் உயிர்கொடுத்த தியாகம்—சாதித்துவிட்டது.

மேதினத்தன்று உலக மக்கள் ஒன்றுபடுவதைப் போல் வேறு எதற்கும்—சாந்த தேவன் கிறிஸ்துவின் பேரிலாகட்டும்—கருணைக் கடல் புத்தனின் நிழலிலாகட்டும்-நபிநாயகத்தின் கொள்கையிலாகட்டும்-எல்லாவற்றிக்கும் மேலாக கார்ல்மார்க்ஸ் திட்டத்தினடிப்படையிலாகட்டும்—உலகம் ஒன்று ஒரே முகமாக ஒரே குறிக்கோளுடன் கலந்து நிற்பதில்லை.

அந்தப்பேறு இந்த மேதினம் ஒன்றுக்குத்தான் கிடைத்திருக்கிறது வாங்கூவர் துறைமுகத்திலிருந்து சிட்னிப்பாலம்வரை——ஐஸ்லாந்திலிருந்து கொழும்பு வரையில் எந்த இடத்திலும் மேதினம் ஒரு பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது. சமாதான ஆர்வம்கூட சாதிக்க முடிமுடியாத காரியத்தைச் சாதித்துக் காட்டும் இந்த மே தினத்தை உலகத்தை முன்னேற்றுவிக்கப் பாடுபடும் எல்லோரும் வெகுவாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்த மேதினத்திலே;

* ஒற்றுமையை வலியுறுத்துவோம்!

* மனிதத் தன்மையின் சாதனையைப் பற்றி போதிப்போம்!

* மூடநம்பிக்கைஏன் ஒழியவேண்டும் என்பதை விளக்குவோம்!

* பொருளாதார விடுதலையை துரிதப்படுத்துவது எதுவென்பதை ஆராய்வோம்!

* குல்லாவுக்குத் தகுந்த தலையென்றில்லாமல் தலைக்குத் தகுந்த குல்லாய் என்பதாக திட்டங்களை மாற்றியமைப்போம்!

பூலோக சொர்க்கத்தைக் கற்பனை செய்து பார்த்து அதில் ஞானிகளாக—உபதேசிகளாக உலவிக்கொண்டிருப்பதைவிட நமது தாய் நாட்டின் உண்மையான நிலையறிந்து அதில் மனிதர்களாகப் பிரவேசிக்க முயலுவோம்!

Tel : Add. WIND
ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

தினசரி மதராஸ் to திருச்சி—திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, கோயமுத்தூர், கள்ளிக் கோட்டை முதலான ஊர்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் லாரி மூலம் சாமான்கள் ஏற்றுமதி செய்யப்படும்.

லாரி புக்கிங் ஏஜண்டு, 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1
கிளை ஆபீஸ் : 92, தெற்கு ஆவணிமூல வீதி, மதுரை.

# கடவுளை நிந்திக்கும் கயவர் யார்?

கருத்துக் களஞ்சியங்கள்!

விற்பனையாகிறது!

சந்த லீலா
(இராதாமனாளன்) ... 0—8—0

நமது கடவுள்கள்
எல். வி. நடராசன் ... 0—4—0

பாரி மகளிர்
இரா. இளஞ்சேரன் ... 0—4—0

விரைவில் வெளிவருகிறது

மலையாள இலக்கியம்
இரா. இளஞ்சேரன் ... 1—0—0

திராவிடநாடு
திராவிடருக்கே!
திராவிடப்பித்தன் ... 1—0—0

விபரங்களுக்கு :
பாண்டியன் பதிப்பகம்
16, சீயன்ஸ் ரைஸ் மில்ஸ் தெரு,
சென்னை—1.

# மாவீரன் மார்க்ஸ்

அரசிளங்கோ

அறிவுலகம் இது! ஒப்பற்ற பல்வேறு அறிஞர்களைக்கொண்ட இருபதாம் நூற்றுண்டு! இதில் வலியவனும் உண்டு எளியவன் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறுன்! ஒருவனை ஒருவன் ஏமாற்றுவது—வலியவன் எளியவனைச் சுரண்டுவது—அவன் தன் நிலையை உணர முடியாமல் இருக்கும் வரையில்தான்! உணர்ந்துவிட்டால் உலகமே அவனுடையதாகிவிடும்! இதை உணர வைப்பதற்கு, வளைபவன் வாழ்வதற்கு, மக்கள் படும் துன்பத்திற்கு ஒரு எல்லைக்கோடு கொண்டுவந்தான் ஒருவன்! அவன்தான் மனித குலத்தின் ஒப்பற்ற மாணிக்கம் **மார்க்ஸ்**

ஜெர்மனி உண்மையிலேயே புகழ் மிகுந்த நாடு! ஜெர்மனி இல்லாவிட்டால் இன்றையதினம் மார்க்சியத்தின் முழுபலனையும் தெரிந்து கொண்டிருக்க முடியாது! வளரவும் வழி இருந்திருக்காது!

மார்க்ஸீயத் தலைவனின் முழுப்பெயர் **காரல் மார்க்ஸ்** பிறந்த இடம் ஜெர்மனி! 1818-ம் ஆண்டு மண்ணிலே விழுந்தான்! இஸ்ரேல் நாட்டு இனத்தவன்! தந்தையின் பெயர் ஹென்றி மார்க்ஸ். ஹென்றியட் என்று அழைக்கப் பட்டாள் மார்க்ஸின் தாய்!

உயர்நிலைப்பள்ளி படிப்புச் சொல்லிக் கொடுக்க அவனது பன்னிரண்டாவது ஆண்டில் அவனை அழைத்தது. உள்ளே நுழைந்தான். ஐந்து ஆண்டு அதில் அவனை உருளவைத்தது. அவனது பதினேழாவது வயதில் 'பான்' பல்கலைக் கழகம் அவன்பேரில் ஆசை கொண்டது அந்த ஒரு ஆண்டு அப் பல்கலைக் கழகத்தின் பேரப் பிள்ளையானுன்! இறுதியில் பெர்லின் பல்கலைக் கழகக் கட்டிடம் ஐந்து ஆண்டு அவனைத் தன்னிடம் இறுத்திக் கொண்டு விட்டது. இப்படியாகப் பல ஆண்டுகள் பள்ளி, பல்கலைக் கழகப் படிகளில் உருண்டான்! இளைஞன் மார்க்ஸ் படித்துக் கொண்டிருந்த காலத்தில் லத்தின், கிரேக்கம், பிரஞ்சு முதலிய மொழிகளைக் கற்றுக் கொள்ள அவன் தவறவில்லை.

1836! பூரிக்கும் இளமைம் பருவம்! ஆண்டு பதினெட்டு! அப்பொழுது பல்கலைக் கழகப்படிப்பு! அதே வேளையில் வாலிபத்தின் குறும்பு—அல்ல கோளாறு உண்டாகியது! ஆமாம் காதல்தான! மார்க்ஸை மயக்கினுள் ஓர் மண்ணழகி! பெயர் ஜென்னி! மயங்கினுன் மார்க்ஸ் இல்லை; மயக்கப்பட்டான் மார்க்ஸ்! கீழே விழவில்லை கெட்டிக்காரனுக இருந்த காரணத்தினுல்! காதல் முளை விட்டது, பூத்தது, அதே சமயத்தில் புரட்சிக் கருத்துக்கள் அவன் உள்ளத்தில் கொப்பளித்துக் கொண்டிருந்தன!

கல்லூரி தான் வாலிபனின் காளைப் பருவம் என்பது இல்லாமல் கருத்துப் பருவமாக இருந்தது இளைஞன் மார்க்ஸுக்கு!

பல நூல்களைப் படித்தான்! சிந்தித்தான்! நூற்றுக்கணக்கான நூல்கள் அவன் விரல்பட்டுப் புரண்டன. அவன் படித்த புத்தகங்களிலே பல வகை கருத்து மாற்றம் தெரிவிக்கும் நூல்கள் ஏராளம்! அவன் அறிவைப் பெருக்கிய ஏடுகள் பல, மார்க்ஸ் தன் மனதையே பல்கலைக் கழகமாக்கி கொண்டான் அந்தக் காலத்தில் தான் அவன் மனம் தத்துவ சாஸ்திரத்தில் ஈடுபாடு கொண்டது அப்பொழுது சிறப்பாக வளர்ந்து கொண்டிருந்த தத்துவ இயக்கத்தில் சேர்ந்தான். வாதப்பிரதிவாதங்களில் கலந்து கொண்டான்.

பேசிப்பேசி, கேட்டுக் கேட்டு கருத்தை, அறிவைப் பெருக்கிக் கொண்டான். சதா சிந்தனை அதில் தத்துவத்தின் பல்வேறு செதில்கள். சிந்தனையில் ஓர் புயல்! அதில் அறிவுப்போராட்டம். பழமையை ஏண்ணி எண்ணிப்பார்க்கும் போது புதுமை எங்கோ ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டான். நன்ருக சிந்தித்தான் விழிகளைத் துலக்கிக் கொண்டு பார்த்தான். புதுமை எங்கோ ஒரு விளிம்பில் எட்டிப்பார்த்தது. பழமையை அப்படியே அழித்துக்கொன்று விட்டான் மார்க்ஸ்!

படிப்பில் மந்த நிலை! மனதிலே புரட்சி! இந்த நிலையில் தந்தை இறக்க படிப்பிற்கு 'குட்பை' வைத்தான் மார்க்ஸ்!

சிறந்த ஆராய்ச்சி செய்தான். தத்துவத்தில் நிகரற்ற புலவன் ஆனுன்! அவன் ஆராய்ச்சியின் அருமையை உணர்ந்து டாக்டர் பட்டம் கொடுத்தது ஒரு பல்கலைக் கழகம்! இளைஞன்! இன்னும் திருமணம் ஆகவில்லை! அதற்குள் டாக்டர் பட்டம்! அவன் 23-வது ஆண்டில்!

**அரசாங்கம் மக்களின் நலனுக்குத்தானே ஒழிய மக்கள் அரசாங்கத்தின் நலனுக்கல்ல!** என்று எழுதினன் 'ரைன் லாந்து கெஜட்' என்ற பத்திரிகையில். அவனே அதன் ஆசிரியன் ஆனன். ரஷ்யாவில் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த எதேச்சதிகாரத்தைக் கண்டித்தான்! அவனது பேனு வெறி கொண்டது, தீக் குழம்பை அள்ளி வீசியது. அவனது வளமிகு எழுத்துக்கள் அரசாங்கத்தின் நெஞ்சை வாள் கொண்டு அறுத்தன,

ரைன்லாந்து கெஜட்! அதன் எழுத்தின் மன்னன் மார்க்ஸ்! மக்களிடையே உலவினன்! கருத்து வளர்ந்தது, மக்கள் பெருகினர்கள். ரஷ்ய அரசாங்கத்தின் தூண்டுதலால் ஜெர்மானிய அரசாங்கம் மார்க்ஸை முறைத்துப் பார்த்தது! மார்க்ஸ் பத்திரிகையிலிருந்து விலகினன். பத்திரிகைக்கு முடிவுரை அன்றே நடந்தது. வெற்றிகரமாக முடிந்தது.

வாலிபத்தின் ஒப்பற்ற எல்லைக்கோடு இருபத்தைந்தாம் ஆண்டு! தேக்கப்பட்ட நீர்மட்டம் உயராது. ஆனல் கலங்கிக்கொண்டிருக்கும் 'களுக்' 'களுக்'கென்ற சப்தமும் கேட்கும்! அனுபவ வாதிகளுக்குத்தான் அது தெரியும். மார்க்ஸ் தன் பதினெட்டாவது ஆண்டில் மங்கை ஜேன்னியைக் கண்டான்! காதல் கொண்டான். இருபத்தைந்தாம் ஆண்டில் வாழ்க்கையில் குதித்தேவிட்டான் வெகு தைரியமாக. ஜென்னி அழகி! அன்புள்ளம் கொண்டவள்! மார்க்ஸின் மனைவியானுள்!

அந்தக் காலமே ஒரு அலாதியான காலம். 'பாரீஸ்' பகட்டுக்கு உரியதாக விளங்கியது! பாரீஸ் என்ருலே பலப்பல எண்ணங்கள் எழும் மனதில்! குறிப்பாக இளைஞர்களுக்கு! இருந்தாலும் அந்த சமயத்தில் பிரஞ்சு நாட்டில் பல்வேறு அறிஞர்கள் இருக்கத்தான் செய்தனர். சுதந்திரக் கருத்துக்கள் மிளிர்ந்து கொண்டிருந்தன.

தாயகம் துரத்திய வீரர்களை நன்கு வளர்த்தது பாரீஸ்நகரம். பிறநாட்டவர்கள் நன்கு உலவ, சுயேச்சையாக இருக்க, கருத்துக்களை பரிமாறிக் கொள்ள இடம் கொடுத்தது அங்குள்ள மக்களின் அறிவு ஆர்வம்!

மார்க்ஸின் மணம் முடிந்தது. தான் இரண்டாள்ஆனபின் பாரீஸில் குடியேறினுன் மார்க்ஸ்.

எந்த நாட்டில் மக்கள் நிலை மதிக்கப் படவில்லையோ அந்த நாட்டில் கண்டிப்பாக புரட்சி தோன்றியே தீரும்! மலை போன்ற மாறுதல்கள் நிகழத்தான் செய்யும். வளைந்து நடந்தவன்தான் வறுமைக் காலத்தில் வாள்முனை ஆகின்ருன், துவண்டு கிடப்பவன் முன் துப்பாக்கியெல்லாம் தூள் தூளாகிறது. அதற்குச் சான்று பிரஞ்சுப் புரட்சி! உலகத்தில் மூலை முடுக்குகளில் நடைபெற்ற பல்வேறு புரட்சிகளுக்கும் பாதை வகுத்துக் கொடுத்ததுதான் பிரஞ்சுப் புரட்சி! பிரஞ்சு நாட்டில் பலப்பல புரட்சிகள் நிகழ்ந்தன! உண்டாயின, அறிவியக்கத் தூண்கள் ஒவ்வொருவராக மறைய மறைய ஒவ்வொருவர் தோன்றிவரலாயினர்!

மார்க்ஸ் பிரஞ்சு நாட்டில் அடி வைத்தபோது அறிவியக்கத் தலைவர்கள் இருக்கத்தான் செய்தார்கள்!

அவர்களிலே ஏன்ஜல்ஸ், பிளான் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஏன்ஜல்ஸ் மார்க்ஸின் உற்ற நண்பன் ஆனுல் சிறந்த அறிவாளி. சிந்தனை சித்தாந்தம் போன்றவைகளில் மார்க்ஸிற்குக் குறைந்தவன் அல்ல. வகுத்த பாதையை நன்கு செப்பனிடும் ஓர் ஆள்! மார்க்ஸை நினைக்கும் போது ஏன்ஜல்ஸ் கண்டிப்பாக கண்முன் நிற்பான். ஏன்ஜல்ஸை நினைக்கும்போது மார்க்ஸ் வருவான்! மார்க்ஸ் பாட்டாளி வர்க்கம் வாழவழி வகுத்தான். ஏன்ஜல்ஸ் அந்த வழியை நன்கு செப்பனிட்டு முடித்தான்.

ஊர் ஓரத்தில், ஒதுப்புறத்தில் வாழும் மலர்ச்சியில்லாத மன்னர்களைப் பற்றி சித்தரித்தான் மார்க்ஸ். வளைந்தவர்களைப் பற்றி எழுதினுன் 'வாழ்வுதர' வாழ முடியாதவர்களுக்கு என்று புரட்சி செய்தான் எழுத்து வடிவில். சிந்து பாடிடும் சீமான் உள்ளத்தில் உள்ள செங்குருதி எப்படி வந்தது, வளர்ந்தது என்று எடுத்து விளக்கினுன் பாட்டாளி உலகிற்கு· ஜெர்மன் அரசாங்கத்தின் அட்டகாசம், மன்னன் தலையிலே உள்ள மணிமுடி—எல்லாவற்றையும் அம்பலத்திற்குக் கொண்டு வந்தது அவனது பேனு முனை. எழுத்து முனையிலே கனல் தெறித்தது. அதன் முதல் தாக்குதல் ஜெர்மானிய மன்னனைப் போய் தாக்கியது. பாரீஸில் இருந்து கொண்டு புரட்சித் தூள்களை வீசிக் கொண்டிருந்தான் ஜெர்மனியில்! சிந்தித்த நடையில் உலவ ஆரம்பித்தனர் ஜெர்மணிய மக்கள். சிந்திப்பவர்கள் சில காலம் சென்ருல் சீறுவார்கள் என்பதை மன்னன் உணர்ந்தான். அவன் தூண்டுகோலால் பிரஞ்சு அரசாங்கம் மார்க்ஸை நாடு கடத்தியது. ஏஞ்சல்ஸ் அவனைப் பின் தொடர்ந்தான் !

பிரஸ்ஸல்ஸ் பெல்ஜியத்தின் தலைநகர் சிறந்தப் பட்டிணம்! அங்கே சென்ருன் மார்க்ஸ்.

மார்க்ஸ் கல்லூரியிலிருந்து வெளி வந்து பிரஸ்ஸல்ஸில் காலடி வைக்கும் வரையில் அளவிலாத பணி புரிந்தான். தொழிற்சாலைகளில் இரத்த வியர்வையை வெள்ளமாக வடிக்கும் வாடிய உள்ளங்களைக் கண்டான். கூனி, குறுகி, மக்கிப்போன மனிதஉள்ளங்களிலிருந்து வரும் வார்த்தைகளை கேட்டான், ஆயிரமாயிரம் தொழிலாளிகளின் கண்ணீர்த் துளிகள் தங்களின் சுய சரிதையை நன்கு உணர்த்தின அவனுக்கு. கேட்டுக் கேட்டு உள்ளம் விண்டான்! உணர்ச்சியால் வெட்கிப் போனுன். பாடுபடும் பட்டாளி உலகிற்கு, உழைத்து நாயினும் கேடாய் நெளியும் தொழிலாள உலகிற்கு, மண்ணிலே உருண்டு வாழும் உயிர்களுக்கு. அரசாங்கத்தின் சர்வாதிகார போக்கிற்கு வழியே இல்லையா என்று எண்ணினுன். பல நாட்கள் சிந்தனை! நல்ல நண்பன் ஏன்ஜல்ஸின் தொழிலாளிகளைப் பற்றிய அறிய உண்மைகள், அவனிடத்தில் பல்வேறு சித்தாந்தங்களைக் கொண்டு வந்து நிறுத்தியது,

பாட்டாளி, தொழிலாளி வாழத்தான் வேண்டும்! கோழை உள்ளம் கொண்டவர்களைக் கொடுவாளாக்க வேண்டும்! சுரண்டி வாழும் சீமானை, மணிமகுடம் தரித்த மன்னர்களின் மதோன்மத்த புத்தியை தகர்த்தெறிய வேண்டும் அதற்கு மகத்தான மனிதகுல ஒற்றுமை வேண்டும். அதுதான் மருந்து, வாழ்விக்கு விருந்து என்று எண்ணினுன்!

பாட்டாளிக்கும் முதலாளிக்கும் உள்ள பேதங்களை விளக்கவேண்டும். சமுதாய அமைப்பில் உள்ள ஊழல்களையும் தம் வாழ்விற்கு யார் யார் இடையூருக இருக்கிருர்கள் என்பதையும் வாழவேண்டுமானுல் ஒரு வகையான,

18 பக்கம் பார்க்க

# மக்கள் கவிஞர் மார்வெல்.

நாஞ்சில் அன்பெழில்

புன்னகை! சுழன்றடிக்கும் அலைகள், அதனுள் சுற்றிச் சுற்றி வரும் சுறுமீன், நீரினுள் மறைந்திருக்கும் மலை, நிர்ணயிக்க முடியாத ஆழம். இவைகளினிடையே மூச்சடக்கி நீரினுள் மூழ்கி முத்தெடுக்கும் வீரனின் முகத்திலே ஒளிரும் புன்முறுவலில் பொதிந்துள்ள பொருள் அவன் வீரத்திற்கோர் விளக்கம்! ஊராரின் கண்களை உறக்கம் அணைக்கும் வேளையில் கருத்துச் சூலிலே தோன்றி, பேனு முனையிலே பிறந்த, கட்டுரை, கதை, கவிதைகளாக காட்சியளிக்கும் எண்ணச் சோலை, எழுத்தோவியம் அச்சேதி ஏட்டிலே இடம் பெற்று விட்டதென்றால் இளம் எழுத்தாளனின் இதழோரத்தில் ஒளிரும் புன்னகை, அவன் அறிவாற்றலிற்கோர் அத்தாட்சி! கருணை வள்ளல் காந்தியாரின் வாரிசு, அகில இந்தியாவையும் அடக்கியாளும் அதிகாரம் பெற்ற தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் காசி நகரிலே, கங்கைக் கரையிலே பூசுரர்கள் இருநூறு பேர்களின் காலைக் கழுவி புண்ணியம் தேடிய பொழுது வேதியனின் இதழோரத்தில் மின்வெட்டி மறைந்த குறுநகை வேதத்தின் முன் விவேகம் வீழ்ந்தது என்பதற்கோர் எடுத்துக்காட்டு!

இதோ, இந்தக் கட்டுரையிலே சித்தரிக்கப்படும் புன்னகை மேனுட்டு வரலாற்றிலே மின்னிக் கொண்டிருக்கும் ஒரு சிறு நிகழ்ச்சி! நிகழ்ச்சி சிறியது. ஆனால் அது புகட்டும் பாடமோ பெரிது, மிகமிகப் பெரிது. பதவி! இதன் சதிராட்டத்திலே அறிவிழந்து சதிபுரிந்து எத்தனையோ பேரரசுகளை யெல்லாம் பிடிசாம்பலாக்கி யிருக்கிறுர்கள் சுயநலவாதிகள் பலர்! பதவி! இது யாரைத்தான் விட்டது. குற்றுலமலையிலே பஜகோவிந்தம் பாடிக் கொண்டிருந்த குல்லுகப்பட்டரைக்கூட பாராளத் தூண்டிவிட்டது பதவி ஆசை!

ஆனால் அழைத்து அளித்த பதவியையும், அள்ளிக் கொடுத்த பொன்னையும், புன்னகையால் புறக்கணித்து துச்சமெனமதித்து தூர விலகிவிட்டு இரண்டாவது சார்லஸை (Charles II nd) எதிர்த்துப்போராடி மக்களுக்காக வாழ்ந்த மாபெருங் கவிஞன் ஆண்ட்ரூ மார்வெலின் (Andrew Marvell) வாழ்க்கைக் குறிப்பின் சிறு துணுக்குதான் இந்த கட்டுரை.

*

பதினேழாவது நூற்றுண்டின் கடைசிக் காலத்தில் பாராண்டு கொண்டிருந்த மன்னனை எதிர்த்து உரத்த குரலில் ஒலித்தது ஒரு சொல், இங்கிலாந்தில் 'ஐயோ பசி! என்ற அழுகைக் குரல் வெளியே, ஆனந்தமாகப் புசி ஆனந்தமாகப் புசி'' என்ற அன்பு விருந்து உள்ளே, அரண்மனையில் "பசிக் கொடுமை! பசிக் கொடுமை!" என்ற பல்லவி ஒரு புறம், "புசிப்பு வேண்டுமா கர்த்தரை வணங்கு" என்ற பேரிகை மறுபுறம் "உரிமை! உரிமை!" என்ற முழக்கம் செய்யும் மக்கள்! 'உதை படு! உதை படு!' என்று உற்சாகப் பண்பாடும் மன்னன்! புலம்பல் ஒரு புறம், புன்னகை மறுபுறம். இங்கிலாந்தின் சிங்காதனத்தில் இரண்டாவது சார்லஸ். தங்கத் தட்டிலே கொட்டும் தேன்! சீமான்களுக்கும் பூமான்களுக்கும் அது சிங்காரச் சோலை, ஏமாறும் ஏழைகளுக்கு சிரமறுக்கும் சாலை! 'செங்கோலோடு பிணைந்திருக்கும் ஜெபமாலை--வெண் கொற்றக் குடையிலே நெளியும் விஷநாகம்! இப்படி யிருந்தது இங்கிலாந்தின் அரசாங்கம் இரண்டாவது சார்லஸின் காலத்தில்.

மக்களின் மனம் உடைக்க உடைக்கச் சிதறிப் போகும் கண்ணுடிக் கோட்டையல்ல. அடிக்க அடிக்க உந்தி எழும் பந்து. வாழப் பிறந்த மக்களை மாளச் செய்யும் சார்லஸின் ஆட்சிக்கு சவக்குழி தோண்டவேண்டும் மென்று சங்கநாதம் செய்தனர் மக்கள். மக்களின் இதய கீதம் மன்னனின் அறிவிற்கு உதய கீதமாக ஒலித்தது. கரை புரண்டு வரும் காட்டாற்று வெள்ளத்தைக் கட்டுப் படுத்தி கழனிகளுக்கு பயன் படுத்த அமைக்கப்பட்டிருக்கும் கால்வாய்களைப் போல, மக்களின் உணர்ச்சி வெள்ளத்தை மட்டுப் படுத்தி சீரிய பாதையில் செம்மைப்படுத்தி அனுப்ப தலைவர்கள் பலர் முற்பட்டனர். மக்களின் தலைவர்கள் மேடைகளில் ஏறி உரிமை முழக்கம் செய்யும் போது மக்களின் மனதில் புகைந்து கொண்டிருக்கும் எரிமலை குமுற ஆரம்பித்துவிடும். இதய எரிமலைகளிலிருந்து சிதறிவிழும் உணர்ச்சி சுவாலைகளினால் ஆட்டிப்படைத்த அதிகார வர்க்கத்திற்கு எத்தனை எத்தனையோ சேதங்கள் ஏற்பட்டதுண்டு. இரண்டாவது சார்ளஸ் இந்த நிலையைக் கண்டு திணறினான், திகைத்தான், திக்குமுக்காடினான். அடக்கு முறையைப் பயன்படுத்தி அடக்க முடியாது என்பது அனுபவம் அவனுக்கு ஊட்டிய அறிவுரை. மக்களை மாக்களாக நினைத்து அடக்கு முறையை மட்டுமே துணையாக எண்ணி அரசாண்ட முதலாவது சார்லஸின் (Chrrles I) முடிவை நினைத்துப் பார்க்கும்போது பயத்தால் ஆட்டிப் படைக்கப்பட்டு நெருப்புக் குழியில் நிற்பதாக உணர்ந்தான் பாராளவந்த மன்னன். இந்த உரிமைப் போரை ஒழித்துக்கட்டி உல்லாசமாக வாழ்வதற்கு திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான் அவன்.

மேடைப் பேச்சிலே மட்டுமல்ல. பேனு முனையிலும் உரிமைப் புரட்சி துளிர்விட்டு தளிர்க்க ஆரம்பித்தது. எதிர்ப்பு சக்தியின் பலம் வளர்ந்து கொண்டே யிருந்தது. அதிகார வர்க்கத்தின் அடிபீடம் ஆட்டங் கொடுத்தது. மண், மன்னனின் முடியை நீ என்னை முத்தமிடும் நாள் வெகு தூரத்தில் இல்லை' என்று கூறி எள்ளி நகையாடியது. எழுத்துலகில் ஆங்காங்கே துளிர் விட்டுக் கொண்டிருந்த புரட்சி விதை கட்டுரை, கதை, கவிதை, வரலாறு ஆகிய எல்லாத் துறைகளிலும் படர்ந்து முளைத்தது. இந்த நேரத்தில் தான் கிண்டல் நடையில் கிளர்ச்சி விதையைத் தூவி கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும் வடித்தெடுத்து மக்களுக்கு விருந்தாக்கினார் ஒருவர். அந்த எழுத்து மக்களின் இதயத்தில் அழியாத ஓவியமாகி விட்டது.

அவர் சிந்தனையிலே பிறக்கும் செல்வங்கள் பொது மக்களின் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டிவிடும் புரட்சித் தீ. ஆளவந்து ஆர்ப்பாட்டம் புரியும் அதிகார வர்கத்திற்கு அதன் அடிப்படை பீடத்தையே கிடுகிடுக்க வைக்கும் பெரும் புயல். 'புன்னகை வராளி' பாடிக் கொண்டிருந்த அதிகார வர்க்கம் அந்த அறிஞரின் எழுத்தோவியங்களைக் கண்டு முகாரி பாடத் துவங்கியது. அத்தகைய இணையில்லா எண்ணச்சோலைகளின் மூலம் வளர்ந்து வரும் கிளர்ச்சிக்கு உணர்ச்சி ஊட்டிக் கொண்டிருந்த அறிஞர்தான் 'ஆண்ட்ரூ மார்வல்' (Andrew marvell) அவர் பெயர் கவிஞர் என்ற பட்டியலில் மட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலிலும் இடம் பெற்றிருந்தது. ஹல் நகர மக்களால் தேர்ந்தெடுக்கபட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர். ஹல் நகரத்து மக்களின் உள்ளங்களில் மட்டுமல்ல. இங்கிலாந்திலுள்ள அத்தனை மக்களின் இதயங்களிலும் இடம் பெற்றிருந்தார் அவர். இந்திய நாட்டு சட்ட சபைகளில் 'கைதூக்குவதன்றி வேறென்றறியேன் பராபரமே' என்றும் 'சட்டசபையில் தூங்குவது சரீரத்திற்கு நல்லது' என்றும் பாடிக்கொண்டு இருக்கைகளில் இருந்து தூங்குகிறார்களே அவர்களைப் போன்றவரல்ல ஆண்ட்ரூ மார்வல் அவர் பாராளுமன்றத்தில் மதிப்புமிக்க இடத்தைப் பெற்றிருப்பவர். இத்தகைய பெயரும் புகழும், மதிப்பும் அறிவும் நிறைந்த ஒரு கவிஞரை சிறைச் சாலையினுள்ளே அடைத்தால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்பதை மன்னன் நன்கு உணர்ந்திருந்த காரணத்தால் சிறைச்சாலை கவிஞரைப் பொருத்தவரையில் செயலற்றுக் கிடந்தது.

கவிஞரின் புகழ் வளர வளர அவர் உள்ளத்தில் கோபத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. வளர்ந்து வரும் புகழை மட்டந் தட்டி கவிஞரின் கொட்டத்தை அடக்குவது எப்படி என்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான் மன்னன். கூலி எழுத்தாளர்களைப் பிடித்து கவிஞரைக் குறை கூறி அவர் எழுதோவியங்களைக் குத்திக் குத்தி எழுதலாம் என்றாலோ அரசாங்கம் தரும் பிச்சைக் காசிற்கு அறிவொளி பரப்பும் பேனு முனைகளை விலை பேசி, எழுந்து வரும் மக்களின் ஆற்றலை எதிர்த்தும் திறமற்ற திறம்படைத்த விபீஷண வீணர்களின் தொகை மிகமிகக் குறைவு. அப்படி யிருக்கும் ஒன்றிரண்டு கவிஞர்கள் கூட ஆண்ட்ரூ மார்வெலின் பெயரைக் கேட்ட அளவிலேயே அலறிப் புடைத்து பயந்து ஓடினார்கள். கவிஞரின் எழுத்தோவியங்களுக்கு மறுப்புரை எழுத அவர்களின் எழுதுகோல்களுக்கு வலிவும் இல்லை. இதயத்தில் தெம்பும் கிடையாது. எனவே மன்னனின் மூளையில் துளிர்த்த இந்த திட்டம் தரைமட்டமாயிற்று.

மன்னன் முதலாவது சார்லஸிற்கும் அவர் தலையை அலங்கரித்துக் கொண்டிருந்த மணிமுடிக்கும் இடையே இருந்த தொடர்பைத் துண்டித்து அவர் தலைக்கு உடலிலிருந்து விடுதலை அளித்த மக்கள் தலைவர் கொள்கைக்குன்று, புரட்சி வீரன் 'ஆலிவர் கிராம்வெலின்' கட்சியைச் சார்ந்த ஆண்ட்ரூ மார்வல் அரசாங்கத்திற்கு ஒரு புதிர். இங்கிலாந்திற்கே ஒரு கேள்விக்குறி அவர் பெயரைக் கேட்கும் போதெல்லாம் மன்னன் அஞ்சி நடுங்கினான். மன்னனை மட்டுமல்ல அரச மன்றமே கவிஞரின் பெயரைக்கேட்டு கதிகலங்கியது. மக்கள் கவிஞர் மார்வலைத் தீர்த்துக் கட்ட தன் மூளைக்கு எட்டாத திட்டத்தைப் பற்றி முதலமைச்சர் 'டான்பி பிரபு'வோடு கலந்து ஆலோசித்தான். இங்கிலாந்தின் காவலன் இரண்டாவது சார்லஸ். அவர்களின் புத்திக்கு எட்டவில்லை கவிஞரின் சக்தியை அடக்கும்வழி. கோபத்தின் சிகரத்திலே நின்றுகொண்டு கொக்கரித்தான். மன்னன். 'அமைச்சரே! மார்வலின் பேனு முனைதான் மக்களின் புரட்சி ஒலி. அந்த எழுதுகோல் முறிந்து விட்டால் எதிர்ப்பு சக்தி அடங்கிவிட்டது என்று பொருள் அந்த கவிஞனின் சிந்தனையைக் கட்டுப்படுத்த வேண்டியது உமது வேலை. என்ன செய்வீரோ, எப்படி செய்வீரோ எனக்குத் தெரியாது மார்வலின் மமதையை மட்டம் தட்டி மக்கள் சக்தியை அடக்கி ஒடுக்க வேண்டியது உமது பொறுப்பு. இந்த கட்டளை நிறைவேற்றப்படாவிட்டால்... மன்னன் முடிக்கவில்லை, முதலமைச்சரின் இதழோரத்தில் ஒரு புன்னகை மின்னி மறைந்தது.

டான்பி பிரபுவின் இதயமேடையில் மகிழ்ச்சியும் மருட்சியும் மாறி மாறித் தாண்டவமாடின. 'மன்னனின் மூளையிலே தோன்றாத திட்டத்தை நம் சிந்தனை தீட்டி அந்த செயல் வீரனின் பேனுவைக் கட்டுப்படுத்தப் போகிறது' என்று எண்ணும் போது மகிழ்ச்சி. 'பணி நிறைவேற்றப் படாவிட்டால்......' என்று நினைக்கும்போது மருட்சி. ஆண்ட்ரூ மார்வலின் உயிர்

இருக்கும் வரை அமைச்சர் பீடமும் ஆட்டத்தில்தான் இருக்கும் என்பதை நன்றாக உணர்ந்திருந்தான் பரபு டான்பீ. எனவே கவிஞரைத் தொலைப்பதில் மன்னனைவிட அதிக அக்கரை அமைச்சருக்கு உண்டு. இதழும் இதயமும் மலர கவிஞரின் இல்லத்தைத் தேடி அலைந்தார் அமைச்சர் டான்பீ.

ஆண்ட்ரூ மார்வல் ஏழை பங்காளன், எளிமையின உருவம், வறுமையின் தோழன். அவர் வாழும் இல்லமோ சிறுகுடில். அந்த குடில் இருக்கும் இடமோ ஊரின் ஒரு மூலையில், ஒதுங்கிய சந்தில். அறிவு பொங்கி வழியும் அந்த குடிசையிலே ஏழ்மை தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. கவிஞர் தியாக மான்யம் பெற்று வாழும் காங்கிரஸ் தியாகியல்ல. அரச மன்றத்திற்கு அவர் பரம வைரி. 'எங்கள் தலைவன்' என்று போற்றினார்கள் மக்கள். 'இல்லை' இறப்புதான் உனக்கு தரப்படும் பரிசு' என்று எச்சரித்தான் மன்னன். கிளியைத் தேடி புலி புறப்பட்டது போல கவிஞரின் இல்லத்தை நாடி காவலனின் ஏவலன் புறப்பட்டான். உப்பரிகைகள், உயர்ந்த வீடுகள், ஓட்டுக் குடிசைகள் இப்படியாக ஏறி இறங்கி முடிவாக ஒளிந்ததோர் சந்தில் ஓட்டுக் குடிசை யொன்றைக் கண்டுபிடித்தார். அந்த குடிசையைப் பார்த்தபோது அமைச்சரின் கண்கள் அகலவிரிந்து ஆச்சரியப் பார்வை யொன்றை அள்ளி வீசியது. அதன் பெயர்தான் குடிசையே யொழிய உள்ளே நுழைந்து பார்த்தால் அது குகையேதான்.

புன்னகை யொன்றை தன் இதழோரத்தில் வரவழைத்துக் கொண்டு அந்த ஏழ்மையின் நிலைக் களத்தில்' அடியெடுத்து வைத்தார். செல்வத்தின் சிகரமான அமைச்சர். கவிஞரின் 'குகை' இதுவரை கண்டிராத உருவம் அது. கவர்ச்சிமிக்க உடை, கம்பீரமான உருவம், புன்னகை புரியும் இதழ், கூர்ந்து பரர்க்கும் விழிகள், இந்தப் புதிய உருவத்தைக் கண்ட கவிஞரை ஆச்சரியம் ஆட்டிப் படைத்தது. கவிஞரின் இதழோரத்தில் புன்னகை குமிழி விட்டோடியது. அமைச்சரை வணக்கம் கூறி வரவேற்று இருக்கையிலே அமர்த்தினர், எழுத்துலகச் சிற்பி. காரணத்தை அறிய விரும்பிய கவிஞர் கேள்விக் கணைகளைத் தொடுத்தார் தனது இதயத்தில். அமைச்சர் பேசினர். கனத்த குரலிலல்ல. "மன்னன் வேண்டுகோள் என்னை உங்கள் விருந்தாளியாக்கிற்று..." இதைக் கேட்டபோதும் கவிஞரின் இதழ்களைப் புன்முறுவல் கப்பிக் கொண்டது. "மகிழ்ச்சி' அரசரின் வேண்டுகோள்..." புன்முறுவலை முறித்துக் கொண்டு வந்த கவிஞரின் வார்த்தைகள் முடியவில்லை.'அதிசயமான தொன்றுமில்லை. மக்கள் மதியில் மதிப்பு பெற்றுள்ள தாங்கள் அரச மன்றத்திலும் அந்தஸ்து பெறவேண்டும் என்பதுதான் அரசனின் நோக்கம்." இதற்கும் சிரித்தப்படியே தன் சிந்தனை வடித்துதந்த பதிலை வார்த்தைகளால் சித்தரித்துக் காட்டினர் கவிஞர். "மன்னரின் நன்னோக்கத்தை எண்ணி எண்ணி மகிழ்கிறேன். நன்றி தெரிவியுங்கள் நமது மன்னருக்கு..." இந்த சொற்கள் அமைச்சரின் செவிகளில் செநதேனை வார்த்தன. பின்னும் புன்னகை பூத்தபடியே கவிஞர் தொடர்ந்தார்.

"ஆனால் அந்த மதிப்பு மிக்க பதவியை நான் மானத்தோடு தாங்கிக்கொள்ள முடியுமா என்பது பதில் காணமுடியாத கேள்வி மட்டுமல்ல அரச மன்றத்தில் மன்னரின் எதிர்க்கட்சியில் அங்கத்தினராக இருந்துகொண்டு மன்னருக்கு எதிராக வாக்குரிமைகளை வழங்குவது மன்னிக்கமுடியாத ராஜ துரோகம். நான் அத்தகையதோர் ராஜ துரோகி உங்கள் சட்டப்படி. ஆனால் நீதிப்படியல்ல. அரசரின் ஆணைப்படி நடந்தால் நான் வாய்மைக்கு எதிராக மாறி மக்களின் வாழ்விற்கு சவக்குழி தோண்டும் நயவஞ்சகனகிவிடுவேன். மன்னனின் பதவியைவிட மக்களின் அன்பை அதிகமாக எடைபோட்டுக் காட்டுகிறது என் இதயத் தராசு. எனவே மன்னர் அன்போடு தந்த அரச பதவியை மறுக்கிறேன் அவர் நலம் கருதி. இதை அவருக்குத் தெரிவியுங்கள். என்னை 'அரசாங்க அன்பர்களின்' பட்டியலில் ஒருவனுக சேர்த்திருந்தால் அதுதான் எனக்கு மன்னர்தரும் மாபெரும் பரிசு. என் நன்றியறிதலை மன்னருக்குத் தெரிவியுங்கள்," எனற சொற்களை உதிர்த்த கவிஞரின் இதழ்களில் ஏறி இருந்து கொண்டு கேலி பேசிய புன்னகை அமைச்சரின் உள்ளத்தில் ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையும் கிளப்பியது.

பதவி என்ற பாசவலையில் சிக்காத கவிஞரின் மன உறுதியையும் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்தையும் கண்டு அமைச்சர் திகைத்தார். பிறகு ஒரு குறுநகையைத் தானே வரவழைத்து உதடுகளின் மேல் ஏற்றிவைத்துக் கொண்டு கவிஞரை ஏற இறங்கப் பார்த்தார். கவிஞர் மார்வலின் எதிரே ஒரு பொற்கிழியைத் தூக்கி வைத்துவிட்டு புன்னகை முன்னிருத்தி, "தங்கள் புலமைக்கு பரிசாக அரசர் இந்த பொற்கிழியைத்தருகிருர். வேறு ஏதேனும் தேவைப்பட்டால் வேண்டியபோது கேளுங்கள் என்ருர்.

பொற்கிழியையும் அமைச்சரையும் பார்த்துவிட்டு கவிஞர் சிரித்தார். அந்த சிரிப்பிலே கவிஞரின் எண்ணக் கோட்டைத் தவிடுபொடியானது! அந்த சிரிப்பு ஆணவ வெறியை சிறையிலே ஏற்றி வைத்து அதன் அடியிலே தீயை மூட்டியது! அமைச்சர் திகைத்தார். அந்த கேலிச் சிரிபைக் கிழிக்கொண்டு சொற்கள் உதிர்ந்தன. கவிஞரின் உதடுகளிலேயிருந்து. "அமைச்சரேரே! பதவி பணங்களைக்காட்டி என் வாழ்க்கையின் மணத்தையே மாற்ற விரும்புகிறீர்கள். என்னைக் கேலிசெய்து இண்டல் மொழி பேசி, எள்ளி நகையாடலாம் என்று எண்ணக்கோட்டை கட்டுகிறீர்கள் நீங்கள். மதிப்பு மிக்க பதவியும், மன்னர் தந்த பொன்னும் எனக்கெதற்கு. உண்மைதான் எனது உயரிய செல்வம், நாட்டின் நல்வாழ்வுதான் நான் விரும்பும் லட்சியம். என் வாழ்நாளை இன்பமாகக் கழிக்க வசதியுடையது இந்த சிற்றில் அறுசுவை உண்டியையும் அழகாக சமைத்துத்தர என் அன்பு மனைவி. இதோ, என் மனைவியைக் கேளுங்கள்..." என்று கூறியவாறே தன் அன்பு மனைவியை அழைத்தார் ஆண்ட்ரூ மார்வல்.

புன்னகை தவழ வந்துகொண்டிருந்த அந்த பெண்மணியிடம் சிரித்தபடியே கேட்டார் கவிஞர். 'அன்பே! 'நேற்று எனக்கு உணவாக என்ன தந்தாய்?' 'நேற்று ஒரு இறைச்சித்துண்டு.' 'ஆமாம், இன்று என்ன இருக்கிறது.' 'இன்று நேற்றைய இறைச்சித்துண்டில் மீந்திருப்பது.' 'சரி,நாளைக்கு அந்த இறைச்சித் துண்டிலுள்ள எலும்பை சூப்பு (Soup) செய்து கொடு,' என்று கூறியபடியே அமைச்சரைத் திரும்பிப் பார்த்தார் கவிஞர். அமைச்சரின் முகம் ஒரு நாடக மேடையாகபிருந்தது, அதில் ஆச்சரியக் குறி, கேள்விக்குறி, தோல்விக்குறி, ஆத்திரக்குறி எல்லாமே தாண்டவமாடின.

பொற்கிழியை கையிலே தூக்கிக் கொண்டு ஒரு புன்னகையைச் சிந்தியவாறு வெளியேறினர் அமைச்சர். ஆண்ட்ரூ மார்வலின் இதழோரத்தில் ஆனந்தப் புன்னகை நடனமாடிய நேரத்தில் அமைச்சரின் உதடுகளில் ஒரு அசட்டுப் புன்னகை மின்னி மறைந்து கொண்டிருந்தது, அமைச்சர் வெளியேறியதும் கவிஞரின் அன்பு மனைவி சிரித்தாள். அதைப் பார்த்தும் கவிஞரும் ஒரு புன்னகையைக் காணிக்கையாக்கினர். அந்தப் புன்னகையில் பொதிந்திருக்கும் பொருள்......?

★


# கேரள முரசு

தி. மு. க. சார்பு வார இதழ்

ஆசிரியர் : கே. ஏ. கலையழகன்

**1-6-54 முதல் தவருது வெளிவரும்**

அரசியல் விளக்கம்! அறிவியக்க கேள்வி—பதில்கள் அறிஞர் அண்ணவின் நிறைந்த பாதைக்கோர் அற்புத வழிகாட்டி! தேன்சுவையூட்டும், திராவிடத் திக்கெட்டும்!

தனி இதழ் 0—2—0 ஆண்டு சந்தா 3—12—0

நாடெங்கும் விற்பனை ஏஜெண்டுகள் தேவை.

கேரள முரசு
வண்டிப்பெரியார், : : திரு-கொச்சி.


**நிலவில்....தொடர்ச்சி**

மீண்டும் மீண்டும் பாய்ச்சப்பட்ட அறிவு ஒளி மக்கள் மன்றத்திலே நல்லதோர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. சிந்திக்கும் திறம்பெற்றோர் புலிகளாகித் தீர்ந்தனர். தங்களை அடக்கி ஒடுக்கிய பிற்போக்குக் கும்பலைப் பார்த்து சீறினர். "அடக்கிய காலம் போதும் இனியும் அடங்கோமென ஆர்ப்பரிந்தனர். எதற்காக நாங்கள் நாளெல்லாம் உழைத்துச் சாகவேண்டும். உழைப்பின் பயனை நீ அனுபவித்துக்கொண்டு எங்களுக்கு வேதனையைத் தந்துவிட்டு உழைப்பு நேரத்தை விரித்துக்கொண்டே போகிருய். நீ மாடமாளிகையிலே வாழவேண்டுமென்பதற்காக நான் மாடாகத் தேயவேண்டுமா? முடியாது...நானும் வாழவேண்டும். வாழப்பிறந்த நான் உங்களால் ஆளப்படுகிறேன். பாதிரியேயானுலும்—ஆண்டவனேயானுலும் எங்களின் சக்தியை இனிதடுத்து நிறுத்திவிட முடியாது" என பரணிபாடி பவனிவந்தனர். தங்களது உரிமைக் குரலை உலகதிர எழுப்பும் முறையிலே 1887ம் ஆண்டு சிகாகோ நகரத் தொழிலாலர்கள் போர்க்கொடி உயர்த்தினர். எட்டுமணி நேர வேலையை சட்டமாக்கு என்ற தங்களது இலட்சிய கீதத்தை இசைத்துக்காட்டினர். ஊராள்வோனின் போலீஸ் துருப்புகள் இரத்தத் தடாகத்திலே மக்களை மூழ்கடித்தனர். என்றுலும் இறுதிவெற்றி உரிமை முழக்கம் எழுப்பிய காளைகளின் பக்கம்தான். அதற்குப் பின் 1889-ம் ஆண்டு கூடிய சர்வதேச சமதர்ம மாநாட்டில் (பாரீஸ்) மே மாதம் முதல் தேதியை, உலகப் பாட்டாளி மக்களின் விடுமுறை நாளாகக் கொண்டாடும்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்றிலிருந்து தொடர்ந்துவரும் ஒவ்வொரு மே விழா நாளிலும் தங்களது விடுதலையை உறுதிப்படுத்தி வருகிறது பாட்டாளி வர்க்கம்.

தனி மனிதர்களையோ குறிப்பிட்ட சில தொழிலாளர்களையோ கசக்கியெடுப்பதுதான் முதலாளித்துவத்தின் கொள்கையென்பதல்ல. எங்கு பாட்டாளி வர்க்கம் மிகுதியாக வாழ்கிறதோ அங்கெல்லாம் தனது ஆதிக்கத்தை பலம் கொண்டமட்டும் பாய்ச்சி அந்தந்த நாடுகளையே கபளீகரம் செய்துவிடுகிறது. இதற்கு எடுத்துக்காட்டு வேண்டுமானுல் எங்கும் போகவேண்டியதில்லை. நமது திராவிடமே போதும். இந்த திருவிடத்தின் இன்றைய நிலை என்ன? பாட்டாளி மக்கள் பெரும்பகுதி வாழக்கூடிய இந்த நாட்டை யார் யார் ஆட்டிப் படைக்கிருர்கள் பார்த்தாயா? வடநாட்டு ஏகாதிபத்திய ஏவலர்கள்; அயல்நாட்டு திமிங்கலங்களெல்லாம் நம்மைச் சுரண்டிச் செல்கிருர்கள், அவர்களை எல்லாம் விரட்டியடித்து திருவிடத்தின் விலங்குகளை நீக்கினுல்தான் இந்த மேவிழா உண்மையிலே, நமக்கு விடுதலை விழாவாக இருக்க முடியும். அந்நியர்களின் பிடியிலே, அக்ரமக்காரர்களின் சூழ்ச்சியிலே அடிமையாகிக் கிடக்கும் அகில உலக நாடுகளெல்லாம் இந்த மேவிழாவிலே சபதமெடுத்திருக்கின்றன. எப்படியும் தங்களதுதாயகத்தைப் பெற்று தலைகுனிந்து வாழும் உழைப்பின் உருவங்களுக்கு 'புதிய பாதை காட்டித்தான் தீருவோமென குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்த நேரத்திலே நாமும் நமது தாயகத்தை கண்டாக வேண்டும்—விடுதலையடைந்தாக வேண்டுமென சபதமெடுத்துக் கொள்வோம்."

"அத்தான்...இப்படி திராவிடர் ஒவ்வொருவரும் சபதமெடுத்துக் கொண்டால் நிச்சயமாக அடுத்த ஆண்டு மேவிழாவுக்குள் நாம் விடுதலையடைந்த திராவிடத்தைக் கண்டுவிடலாம்!'.

......பேசி முடித்த தன் அன்பு மனைவியின் மலர்க் கரங்களை பிடித்திழுத்து கொண்டே அவன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அந்தரத்தில் நிலவு ஆடிக்கொண்டேயிருந்தது.

# காரணம், வறுமையல்லவா?

"பூவையான்"

"கருநாகப் பாம்பே!"

ஆமாம்! என் கருங்கூந்தற் பின்னல் ஒரு கருநாகப் பாம்புதான்.

சிக்கவைக்கும் சிலந்திக் கூடே!

சொக்கவைக்கும் கண்களுக்குச் செல்லப்பெயர் சூட்டுகிருய்.

ஆசை காட்டிக் காசு பறிக்கும் மோச வலையே;

பாசமுடன் புதுமனிதரோடு பேசுகின்ற புன்சிரிப்புக்கு புதுவிளக்கமோ?

மயக்கந்தரும் மதுக் கிண்ணமே!

மலரிதழ் பிரித்து மதுவுண்ண அழைக்கும் மாதரசியின் மலர் வாய்க்கு மறு பெயரிடுகிருய்

நச்சுப் பல்லாளே!

அச்சுக்கோர்த்தாற் போல விளங்கும் முத்துப் பல்வரிசை நச்சுக்கொண்டதல்ல; எச்சில் நிறைந்தது.

சாகசக்காரி!

அண்டி வருபவர்க்கு அழகு முகங் காட்டி, உள்ளத்தைத் திறந்து இன்பத்தைக் கொட்டி, எடுத்துக்கொள் என்று சொல்பவளின் பெயர் சாகசக்காரியா?

பேச்சிலே நீ ஒரு வானவில்!

வானவில்லா?

ஆமாம். உருவம் ஒன்ருயிருந்து பல வித வர்ண ஜாலங்களை வாரியிறைக்கும் வானவில் போலத்தான் நீ ஒருத்தியே பலரிடம் பலவிமாய்ப் பேசிப் பல்லை இளிக்கிருய்.

அது வண்ண விருந்தளிக்கும் வானவில்; நான் எண்ணத்தை ஈடேற்றும் இன்பமோகினி. ஏன்? அப்படித்தானே?

ஆமாம்! இன்ப மோகினிதான், பார்ப்பதற்கு பிறகுதான் தெரிகிறது, நீ துன்பக்கேணியின் தலைவி; அழிவுக் குழியின் அதிகாரி என்று.

அப்படியானுல் துன்பக் கேணியிலிருந்து நீர் எடுத்து அழிவுக் குழியை நிரப்புவதுதானே?

சீ! வேசி நாயே! மூடு வாயை!

ஆ......! அம்மா......! கன்னத்தில் அறைந்துவிட்டாயே, பெரிய மனிதனே! இதோ இன்னொரு கன்னமும் பாக்கியிருக்கிறது அறைந்துவிடு. கட்டியணைத்த கையா இன்று என் கன்னத்தில் அறைகிறது? இன்று என் கன்னத்தை இரத்தச் சிவப்பாக்கிய உன் கை விரல்கள். அன்றே உன் கண்களைக் குத்தியிருக்கவேண்டுமே அந்தப் பெண்ணைப் பார்க்காதே என்று. எண்ணத்தை எடுத்துரைத்தஉன் இதயத்தை அறைந்திருக்கவேண்டுமே அந்த விரல்கள்.

ஏன் முறைத்துப் பார்க்கிருய்? இன்று கனல் கக்கும் உன் கண்கள் அன்று கண்ணீர் சிந்தியிருக்கவேண்டுமே என்னைக் கண்டதும். இன்று எரிமலையாய்க் குமுறும் உன் உள்ளம் அன்று உதிரத்தைக் கொட்டியிருக்கவேண்டுமே, தமிழச்சியா இப்படி நடக்கிருள் என்று பண்டைய தமிழ்ப் பண்பைப் பாரறியச் செய்யவேண்டிய இன்றைய தமிழ்ப் பெண் ஏனிப்படி மாறினுள் அல்லது மாற்றப்பட்டாள் என்று நினைத்துப் பார்த்ததுண்டா?

மேகத்திரைக்குள்ளே மறைந்தோடும் முழுமதி போல் மோகத்திரைக்குள்ளே மின்னவிடும் பெண்மதி யென்று நினைத்தாயா? அன்று போகப் பொருளென்று நினைத்து என்னைப் பின்தொடர்ந்து வந்தாயே! சொகுசு நடையாளே! சோதனை செய்யாதே! இந்த வேதனையைப் பொறுத்துக்கொள்ள எனக்கு யாரும் போதிக்கவில்லை கண்ணே! என்று என் செல்லெரித்த குடிசையிலே சொல்விருந்து பரிமாறினுயே!

கல்யாணமாகாத கன்னித் தமிழ் பெண் கண்டவனிட மெல்லாம் கொண்டவனைப்போல் கொஞ்சி விளையாடும் குணத்தை எப்படிப் பெற்ருள் என்பதை எண்ணிப் பார்த்ததுண்டா? கற்புக்கு இலக்கணம் வகுத்த கண்ணகி பிறந்த இந்த மண்ணிலே, விபசார விருந்து படைக்கும் வேசி பிறக்கக் காரணம் என்ன என்று சிந்தித்ததுண்டா? தாசியாய் பிறந்துவிட்ட மாதவி மாசற்று விளங்கிய இந்நாட்டிலே, குலமகளாய்ப் பிறந்து விலைமகளாய் மாறிய விந்தையைக் கண்டுபிடிக்கச் சிந்தையை செலவிட்டதுண்டா சிறிதேனும்? வீரம் செறிந்த மாதரைக் கண்ட இந்நாடு இன்று சோரம்போகும் பெண்களைக் காண்பது ஏன்? பண்டைத் தமிழ்ப் பண்பைப் பறித்த பகைவர் யார்? மாடியிலே உலவும் மதம் பிடித்த பெண்கள் சிலர் மற்றவரை நாடினுல் அது நாகரீகம்; குடிசையிலே குமுறும் ஒருத்தி கும்பி கழுவ வழி தேடினுல் அது விபசாரமா?

ஏன் விழித்துப் பார்க்கிருய்? வேதனையாக இருக்கிறதா? உம்...! வேதனை

யாக மட்டுமா இருக்கும்? வெந்த புண்ணிலே வேல் சொருகும் காட்சியாகவும் இருக்கும். நொந்த உள்ளத்தை நெருப்புப்பந்தத்தால் தீய்ப்பதைப் போலவும் இருக்கும். இன்று வியாபாரம் செய்கின்றனர் பலர் பலவிதமாக. வியாபாரி பணத்தை முதலாக வைக்கிருன்; வியாபாரம் செய்கிருன்; விஞ்ஞானி மூளையை முதலாக வைக்கிருன்; முன்னேற்றங் காண்கிருன். எழுத்தாளன் எண்ணத்தைக் குவிக்கிருன். ஏதாவது கிடைப்பதைப் பெற்றுக் காலங் கழிக்கலாம் என்று கனவு காண்கிருன். திருடன் செய்வது முதலில்லா வியாபாரம் என்பர் — இல்லவே யில்லை. — அவன் உயிரை முதலாக வைக்கிருன். திருடுகிருன். தெரிந்துவிட்டால் திண்டாடுகிருன். தெருவிலே இழுத்துச் செல்லப் படுகிருன். சிறையிலே பூட்டப்படுகிருன். சித்திரவதை செய்யப்படுகிருன்.

நானும்தான் வியாபாரம் செய்கிறேன் அழகையும், பருவத்வையும் முதலாக வைத்து அண்டினவர் முன் மண்டியிடுகிறேன். அகப்பட்டதைச்சுருட்ட முயல்கிறேன். 'வியாபாரமா இது? பேச்சு கற்றநாயே! விபச்சாரம்; பச்சை விபச்சாரம்' என்று கூறி மற்ருேர் அறை

அறையத் தோன்றும் உனக்கு. நீ, அடித்து எனக்கு விளக்கத் தேவையில்லை. வெட்ட வெளிச்சமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல ஏன்? கண்ணுடியிலே தெரியும் உருவத்தைப் போலப் பளிச்சென்று நன்ருகவே தெரிகிறது நான்செய்வது விபச்சாரம் என்று. ஆனுலும்தெரிந்தே செய்கிறேன் மது, போதையைத்தரும் என்று தெரிந்தும் அதை அருந்துகிருன்; பொய்யுரைப்பது பாவமெ ன்று தெரிந்தும் மெய்யுரைக்க முடியவில்லை பல சமயங்களில். அதேபோல மானத்தை விலைக்கு விற்பது ஈனத்தொழில் என்று தெரிந்தும் அதை நான் நிறுத்தவில்லை, நிறுத்த முடியவில்லை ஏன்? அங்குதான் இருக்கிறது, நீ தெரிந்துகொள்ள வேண்டியதும், நான் தெரிவிக்க வேண்டியதும்.

"பெண்ணுகிய என்னை மட்டும் விபசாரி என்று சொல்லத் துணிந்ததேஉன் நாக்கு நீ மட்டும் யார்? பெண்தவறினுல் விபசாரம்; ஆண் தவறினுல்...? உன்னை விபசாரம் செய்யத் தூண்டியது எது? வறுமையா? இருக்கமுடியாது. நீ ஏதோ சம்பாதிக்கிருய், ஒரு லாரியில் வண்டியோட்டியாக. பருவக்கோளாரு? அப்படியும் இருக்கமுடியாது? உனக்கு மணமாகியிருக்கும்; என்னிடம் காணும் இன்பத்தைவிட உன் மனைவியிடம் காணும் இன்பம் அதிகமாக இருக்கும். அப்படியிருக்க நீ என்னை நாடி வரக் காரணம் என்ன? புத்தம் புது மலரை நித்தம் ஒன்ருகக கண்டு, மதுவுண்டு மயங்கப் பறந்துவரும் நீ ஒரு வண்டு உனக்கு இது ஒரு பொழுதுபோக்கு. ஆனுல், எனக்கோ உயிரின் வாதை; உயிர் பிழைக்க வேண்டிய கட்டாயத்தில் இந்த இழிந்த வேலையில் நான் இறங்க வேண்டியதாயிற்று." பெண்ணுக்கே உரித்தான—என்றும் நிலைத்திருக்கும் கற்பைக் கொன்றுவிட்டு, அழிந்துபோகும் உடலை வளர்ப்பது கேவலம்; அதைவிட நீ செத்தொழிந்திருக்கலாம்" என்று சொல்லத் தோன்றும் உனக்கு. அப்படிப் பார்த்தால் இந்த ஊரில்—ஏன்?—இந்த நாட்டிலேயே பாதி மக்கட்தொகை இறக்க வேண்டியதாகிவிடும்."

"பாவி! உன்னைப்போலவே மற்றவரையும் நினைத்துக்கொண்டாயா? அப்படிப் பேசாதே! உன் குற்றத்தை ஊரார் மேலும் சுமத்தாதே! உன்நாக்கு அழுகிவிடும்; பேசமுடியாது. உன் கண்கள் அவிந்துவிடும்; பார்க்க முடியாது."

"அப்படியெல்லாம் நடந்திருந்தாலும் இந்த மோசமான நிலை வந்திருக்காதே. அதெல்லாம் புராணத்தில்தோன்றும் கற்பனை;பழங்காலக்குப்பை. நான் என்ன செய்வேன்? எனக்கு மட்டுமல்ல என் பெற்ருேருக்கும் உழைக்க உடலில் வலுவிருக்கிறது? ஆனுல்,வேலைதர யார் காத்திருக்கிருர்கள்? வேலையோ வேலை என்று வீதி வீதியாய்த் திரிந்தோம்; நாடெல்லாம் அலைந்தோம். குடிக்கக் கூழுக்கும் வழியில்லை; உடுத்த கந்தைக்கும் கதியில்லை. அழுதோம்; அழுதோம் கண்ணீர் வற்றிப்போகுவரைஅழுதோம். சாகத்துணிந்தனர். பெற்ருேர் ஆனுல், நான் வாழத் துணிந்தேன்; வாதாடினேன். வறுமையைப்போக்க வழிகண்டு பிடித்துவிட்டேன் என்று ஒரு பொய்யுரைத்தேன். வீடு திரும்பினேம்.

"பொங்கி விம்மும் என் அங்க நெளிவைக்கண்டு ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தான் ஒரு காளை. முன்பு நான் மறுத்துவிட்டுச் சென்றேன். பிறகு, அவன் கருத்துக்கு இசைந்தேன். அவன் வெறுக்கவில்லை; விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தான். புதுவிருந்துண்டான்; நானும் புதுமை இன்பத்தில் திளைத்தேன்; பொங்கிப் பூரித்தேன் கடைசிவரைக் காப்பாற்றுவான் என்று நம்பினேன் என் நம்பிக்கையில் மண் விருந்தது. அவன் இன்னொருத்தியை நாடிச் சென்ருன். அவன் மார்பிலே துவண்ட நான், அவனுடைய காலடியில் புரண்டேன். கதறினேன். நீயன்றி கதி வேறில்லை என்று ஒப்பாரி வைத்தேன். அவன் உதறித்தள்ளினுன்; வெளியேறிவிட்டாள். அவன் ஒரு ருசிகண்ட பூனை; இந்த உரியைவிட்டு வேருேர் உரியை தாவினுன். நான் திகைத்தேன்; விழித்தேன். விதி என்றனர் பெற்ருேர் மதியிழந்து "அல்ல, அல்ல. விதியல்ல வீணரின் சதி" என்றேன் "கடவுளே! உனக்குக் கண்ணில்லையா?" என்று கதறினுள் அம்மா.

இருக்கிறதம்மா! இருக்கிறது· நாம் பார்க்கும் கடவுளுக்குக் கண்மட்டுமா இருக்கிறது? பொன்னும் பொருளும் குவிந்து கிடக்கின்றன. நிலமும், நீரும் நிறைந்து கிடக்கின்றன தங்க நகைகள் அவன் மேல் தொங்குகின்றன; பட்டுப் பட்டாடைகள் மின்னுகின்றன. ஆனுல், அவற்றையெல்லாம் அனுபவிக்கத்தான் அவனுல் முடியவில்லை அவனுக்கு உருவத்தைத்தான் கொடுக்க முடிந்ததே தவிர உயிரைஊட்ட முடியவில்லை. அவனைச் செம்பாக்கினுர்கள். பித்தளைய;க்கினுர்கள்; கல்லாக்கினுர்கள்; அவனுடைய உள்ளத்தையும் கல்லாக்கி விட்டார்கள்· 'உனக்கு கண்ணில்லையா?' என்று கதறினுல் என்ன பயன்? கண் இருக்கிறது ஆனுல் பார்க்க முடியாது, காது இருக்கிறது; ஆனுல் கேட்க முடியாது வாய் இருக்கிறது; ஆனுல் பேச முடியாது· பார்க்க முடித்திருந்தால் நம் இழிந்த நிலையைப் பார்த்திருப்பார். கேட்க முடிந்திருந்தால் நம் குறைகளையெல்லாம் கேட்டிருப்பார். பேச முடிந்திருந்தால் நம்மை வஞ்சித்து வாழ்வைப் பறித்த பாதகரைப் பழித்திருப்ரார்—இல்லை சபித்திருப்பார்." இப்படியெல்லாம் நான் புலம்பினேன்.

"என் கண்ணீரைத் துடைத்தாள் அம்மா; ஆனுல் என் கற்புக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க முடியுமா? அழிந்து போகும் அழகை அள்ளிக் கொடுத்தவன் அந்த ஆண்டவனுனுல், அதை நிரந்தரமாக அனுபவிக்க ஒரு ஆடவனை ஏன் எனக்காகப் படைக்கக் கூடாது? போகட்டும் படைப்பதுதான்

28–ம் பக்கம் பார்க்க

தொழிலாளர் நலனை விசாரிக்க வந்த பாக்டரி கமிஷனிடம் அந்தக் காலத்திலேயே தொழிலாளர் நிலைமையை எடுத்துக்கூறி, அவர்கள் வேலை நேரத்திலும், கூலி உயர்விலும் நல்ல நிலைமை அடையச் செய்த திராவிடர் இயக்கத் தலைவரான

டாக்டர் டி. எம். நாயர்

# உலகம் உன்னுடையது!

பள்ளம் பறிப்பாய், பாதாளத்தின்
அடிப்புறம் நோக்கி அழுந்துக! அழுந்துக!
பள்ளந்தனில் விழும் பிள்ளைப் பூச்சியே,
தலையைத் தாழ்த்து! முகத்தைத் தாழ்த்து!
தோளையும் உதட்டையும் தொங்கவை! ஈன
உளத்தை, உடலை, உயிரைச் சுருக்கு!
நக்கிக்குடி! அதை நல்லதென்று சொல்!
தாழ்ந்துதாழ்ந்து தாழ்ந்த நாயினும்
தாழ்ந்துபோ! குனிந்து தரையைக் கௌவி
ஆமையைப்போல அடுங்கி ஒடுங்கு!
பொட்டுப் பூச்சியே, புன்மைத் தேரையே,
அழு! இளி! அஞ்சு! குனி! பிதற்றுக்!
கன்னங்கருத்த இருட்டின் கறையே.
தொங்கும் நரம்பின் தூளே! இதைக்கேள்:
மனிதரில் நீருமோர் மனிதன், மண்ணன்று!

இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்துச், சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!
உன்வீடு—உனது பக்கத்தின் வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறுவிடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறிநின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பைப்!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!

'என் குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்துகொள்! உன்னைச் சங்கமமாக்கு.
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேதமில்லை.
உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்; 'உடைமை மக்களுக்குப் பொது
புவியை நடத்துப் பொதுவில் நடத்து!
வானைப்போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# இரத்த ஞாயிறு

தொடர்ச்சி

பெயர் அவர்களுக்கு கடுவிஷமாக இருந் தது. தங்கள் அடிமன உணர்வு கொல் லப்பட்டு விட்டதாக ஒரு நினைவு அவர் களுக்கு ஏற்பட்டது. சூருவளி வீசும் இதயத்தோடு சென்றார்கள்.

ஜாரின் மாளிகையைச் சுற்றி போலீஸ் பட்டாளம் நெருக்கமாக நின் றது. குதிரைப் படையும் தயாராக நின் றது.

ஆயிரமாயிரம் மக்களடங்கிய பெருங் கூட்டம் சீறிவரும் கடலலைகளைப்போல சிப்பாய்களை நெருங்கியது. அதிகாரி ஒருவன் முன்னால் வந்து மக்களைப் பார்த்து ஊளையிட்டான்.

எங்கே போகிறீர்கள், அப்படியே நில்லுங்கள்.

ஜாரைப் பார்க்க வேண்டும்.

அவர் உள்ளே இல்லை. அதிகாரியின் கம்பீரக்குரல்

அவன் ஓரேயடியாகப் போய்விட் டான் என்கிறாயா? கேலிகலந்த ஒரு குரல்!

அவன் எங்குமே இல்லை!

மக்கள் தங்கள் மனக்கசப்பை, கிண் டல் வார்த்தைகளால் வெளிப்படுத் தினர். அதிகாரி, மேலதிகாரியுடன் கலந்து பேச உள்ளே ஓடினான்.

வெறுப்பும் வேதனையும் வழியும் விழி களால் சிப்பாய்களின் முகங்களை பலர் வெறுத்துப்பார்த்தனர். ராணுவ வாழ் வினால் பிணமாகிப்போன அவர்கள் உள் ளங்களில் உணர்ச்சி ஊட்ட பலர் முயன் றனர்.

"நீங்களும் மனிதர்கள். நாங்களும் மனிதர்கள். இன்று ராணுவ உடை யில் இருக்கிறீர்கள்! நாளை—"

"நீங்கள் சிப்பாய்கள்—கசாப்பு கடைக்காரர்களல்ல. எதிரிகளிட மிருந்து ரஷ்யாவை பாதுகாப்பதற்கே இருக்கிறீர்கள். ஆனால் அவர்கள், உங் களை, எங்களைச் சுடும்படி சொல்கிறார் கள்—"

"சிந்தித்துப் பாருங்கள் — மக்கள் யார்? அவர்கள்தான் ரஷ்யா?..."

ஒரு இளைஞன் கூட்டத்தினரைக் காட்டி சொன்னான்—" இதோ பாருங் கள்—இதுதான் ரஷ்யா—ரஷ்யர்—மக் கள்—"

ஆற்றின் அலைகள் அதன் கரையைத் தாக்குவதைப்போல கூட்டம் முன்னும் பின்னும் நகர்ந்து சிப்பாய்கள் மீது மோதியது.

சிப்பாய்கள் தங்கள் துப்பாக்கிகளை ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு மாற்றிக்கொண்டு விறைத்து நின்றனர். மக்களின் பேச்சைக் கேட்டு அவர்கள் பெருமூச்சு விட்டனர். உறைந்துபோன உதடுகளை நாக்கினால் தடவி விட்டுக் கொண்டனர்.

நீண்ட தாடியும் நீலக் கண்களும் உள்ள ஒருவன் பேசினான்—"போர் வீரர்களே! நீங்கள் யார்? ரஷ்ய மாதா வின் மாணிக்கங்கள்! வறுமைக் கடலில் மக்கள் தவிக்கிறார்கள். உணவில்லை; வேலையில்லை; தங்க இடமில்லை;—வாழ் வின் இன்பங்கள் வஞ்சிக்கப்பட்டவர் களாக...உணர்ச்சிகள் புதைபட்டுப் போன புதை குழிகளாக—இருக்கின் றனர். உதவி கேட்கவே அவர்கள் ஜாரிடம் வருகிறார்கள். ஆனால் ஜார், அவர்களைச் சுடும்படி உத்தரவிடுகிறான், உங்களுக்கு—மக்கள்—உங்கள் தந்தையர் கள்-உங்கள் சகோதரர்கள்-உதவிகோரு கிறார்கள். தங்களுக்கு மட்டுமல்ல— உங்களுக்கும்!...மறந்துவிடாதீர்கள்!"

சிப்பாய்கள் அவன் சொன்னதை கவனமாகக் கேட்டனர். சோகங் கலந்த பெருமூச்சு பலரிடமிருந்து கிளம் பியது. அவர்கள் உள்ளம் அடிபட்டது...

கொழுந்து சிவந்த முகமும், உருண்ட கண்களும் உடைய அந்த அதிகாரி அப்போது வெளியே ஓடிவந்தார். வாளை உருவியபடியே 'உங்களைக் கலைந்து போகுமாறு உத்திரவிடுகி றேன்' என்று கர்ஜித்தான்.

மக்கள் கலையவில்லை. ஆத்திரம் கக் கும் விழிகளுடன் அதிகாரியைப் பார்த் தனர். வசவும் ஏளனச் சொற்களும் வாரி யிறைக்கப்பட்டன,

அதிகாரி மங்கிய தன் கண்களை சிப் பாய்களின் வரிசையில் ஓட்டினான். திடீ ரென்று கொம்பு ஊதும் சத்தம் கேட் டது. சிப்பாய்கள் தொங்கவிட்டுக் கொண்டிருந்த துப்பாக்கிகளை தூக்கி நிறுத்தினர்.

மரணம் தங்களை இன்னும் ஒரு கணத்தில் நெருங்கப் போகிறது என் பதை மக்கள் உணர்ந்தனர். மரணத்தி லிருந்து தப்பிச்செல்ல வேறு இடம் கிடையாது. பலர் தரையில் படுத்து ஒட்டிக் கொண்டனர். மற்றும் சிலர் தங்கள் முகங்களைக் கைகளால் மூடிக் கொண்டனர்.

துப்பாக்கி முனைகள் பளபளத்தன...

பீதியும் வெறுப்பும் கலந்த உரத்த குரல் ஒன்று வானைநோக்கி பாய்ந்து 'கொலை காரர்களே! என்ன செய்கிறீர் கள்?...

அடுத்த வினாடி...

துப்பாக்கி வரிசை அசைந்தது, குண் டுகள் அதிர்ந்தன. மக்கள் ஒருவர் மேலொருவர் சாய்ந்தனர்.

துப்பாக்கிகள் மீண்டும் அதிர்ந்தன—

மீண்டும் ஒருமுறை—

விளக்குக் கம்பம் ஒன்றில் ஏறிக் கொண்டிருந்த சிறுவன் மீது குண்டு பாய்ந்து அவன் அப்படியே தலைகிழாகத் தொங்கினான்.

இறந்தவர்களின் உடல்கள் எங்கும் இறைந்துகிடந்தன. காயமடைந்தவர் கள் உடலிலிருந்து ரத்தம் கொட்ட கொட்ட ஓடினர். மாலையிலடிக்கும் வெப்பமான கடற்காற்றைப்போல ரத்த வாடை காற்றில் கலந்தடித்தது.

கூட்டம் பின்வாங்கியது. பின்வரிசை யிலிருந்தவர்கள் ஓடி ஒளிந்துகொண்ட னர். வேதனைக் கூக்குரல் மேகங்களைக் கலைத்தது.

சிப்பாய்கள் பிணங்களைப்போல அசை யாமல் நின்றனர். அகன்று திறந்த கண்களால் ரத்தத்தில் பிணங்கள் தெப் பங்களாக மிதக்கும் காட்சியைப்பார்த்த னர். அவர்கள் கண் இமைகள் அசைய வில்லை. துப்பாக்கி பிடித்த அவர்கள் கைகள் உதறலெடுத்தன...

தாடிக்காரன் ஒருவன் தரையிலிருந்து எழுந்து சோகம் கலந்த குரலில் சிப்பாய் களிடம் சொன்னான்—

"நீங்கள் என்னைக் கொல்லவில்லை— ஏனென்றால் நான் நீதியை-நேர்மையை- நியாயத்தை—உண்மையை உங்களுக் குச் சொன்னேன்..."

அதிகாரி கைத்துப்பாக்கியுடன்தாடிக் காரனைநோக்கி ஓடினான். அடுத்தவினாடி குண்டு வெடித்த சத்தம் கேட்கவில்லை. ஆனால் அவனுடைய கையைச்சுற்றி புகைப்படலம் எழுந்தது.

ஒருமுறை—இரண்டாவது முறை— மூன்றாவது முறை...

தாடிக்காரன் தடுமாறி விழுந்தான், அவன் தலை சாய்ந்தது. மக்கள் அதி காரியை நோக்கி கொந்தளிக்கும் ஆத் திரத்தோடு. ஓடினார்கள். ரத்தக்கறை படிந்த பனிக்கட்டிகளை அவன் மீது வீசி எறிந்தனர்!

அதிகாரி வாளை உருவினான். ஓடிவந்த சிறுவன் ஒருவனுடைய வயிற்றில் கத்தி யைப் பாய்ச்சினான். சிறுவன் வேதனை யோடு ஓலமிட்டபடி சுருண்டு வீழ்ந் தான்.

மீண்டும் கொம்பு சத்தம் கேட்டது. மரணப் பிடிப்பிலிருந்து விடுவித்துக் கொள்ள எல்லோரும் ஓடினார்கள்.

மீண்டும் துப்பாக்கிகள்அதிர்ந்தன— மீண்டும்—மீண்டும்—.

தெருவெல்லாம் ஒரே கூட்டம்.அன்று நடந்த படுகொலையைப்பற்றி ஒருவருக் கொருவர் பேசிக் கொண்டனர். என்ன செய்ய வேண்டுமென்று அவர் களுக்குப் புரியவில்லை. எரிமலையின் கர்ப் பத்தைப்போல அவர்கள் இருந்தார்கள்.

இத்தனை நாட்கள் வரை அவர்கள் எதைப்பற்றியும் சிந்திக்காமலேவாழ்ந்து விட்டனர். சர்க்கார்—சட்டம்—அதி காரிகள்—அவர்கள் உரிமைகள்—எதைப் பற்றியும் அவர்கள்கவலைப்படவேயில்லை.

ஆனால் இப்போது அவர்கள் உள்ளம் நடுங்கியது. பீதியால் இதயம் குளிர்ந்து விட்டது. மக்கள் உரிமையை மண்ணில் புதைக்கும் வெறிபிடித்த சக்தி தங்களை குதறித் தள்ளுவதை உணர்ந்தனர். வீதிகளில் ரத்த வெள்ளமும், பிணக்குவி யலும் இறந்துகிடக்கச் செய்யும் ஆண வத்தின் உண்மை சொருபத்தைக் கண் டனர். எதேச்சாதிகாரப் பேயர்களின் மரணப்பிடிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள புதிய வழிகளைப்பற்றிய சிந் தனை அவர்களுடைய மன வானில் மின்னலிட்டது.

ரத்தக்கரை படிந்த தன் கைகளை ஆட்டியபடி ஒருவன் கத்தினான்—"இது எனது ரத்தமல்ல. நம்பிக்கை வைத்தி ருந்தார்களே அவர்களுடைய ரத்தம்" அவன் முகத்தில் நரம்புகள் புடைத் தெழுந்தன.

கையில் குண்டுபட்டு துடித்துக் கொண்டிருந்த ஒரு தொழிலாளியை இரு பெண்களும் ஒரு மாணவனும் தாங்கி வந்தனர். அவன் கோபமாக பேசிக்கொண்டே வந்தான்—

"நம்மிடம் ரகசியம் இல்லை. நாம் பகிரங்கமாகவே சென்றோம். நமது நோக்கத்தை விளக்கும் மனு அவர்களி டம் இருக்கிறது. ஆனால்—அந்தக் கொலைகாரர்கள்—"

'மனுவில் என்ன எழுதியிருந்தீர்கள்'

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆட்சி நடத்த வேண் டும். காட்டுமிராண்டித் தனமான காட்டு தர்பார் கூடாது...என்று... ஆனால் அந்த அயோக்கியர்கள் ஆணவ வெறிபிடித்தவர்கள் இரத்த தாகம் கொண்ட பிசாசுகள் ரஷ்யாவையே பாழ்படுத்தி விட்டனர். எல்லோரது வாழ்வையும் சூறையாடிவிட்டனர்... ஏழைகளின் இன்பத்துக்கு 'கல்லறை' கட்டிவிட்டனர். மக்களின் உரிமைகளை சுடுகாட்டுக்கு 'பாடை'யில் கொண்டு சென்று எரித்து விட்டனர்.

கூட்டம் மெள்ள கலையத் தொடங் கியது. மக்கள் தங்கள் வீடுகளை நோக்கி தள்ளாடியபடி செல்ல ஆரம்பித்தனர்.

இருள் மக்களிடையே தொடர்பில் லாமல் செய்தது!"

இரவு வந்துகொண்டிருந்தது. தெரு விளக்கு இன்னும் ஏற்றப்பட வில்லை.

"குதிரைப்படை" காது செவிடாகும் படி ஒருவன் கத்தினான்.

சந்து ஒன்றிலிருந்து குதிரைப்பட்டா ளம் ஒன்று வெளிப்பட்டது, குதிரை கள் திடீரென்று மக்கள்மீது பாய்ந்து தாக்கின, போலீசார் விசித்திரமான குரலில் ஊளையிட்டனர். மிருகத்தன மாக அடித்தனர், சுட்டனர்!

"திருப்பித்தாக்குங்கள் தோழர்களே! ரத்தத்துக்கு ரத்தம்!"

"கல்லை எடுத்து வீசுங்கள்!"

"மக்களை மதிக்காத மதோன்மத்தர் களின் மண்டைகளை பிளந்து தள்ளுங் கள்!"

"நாம் இரத்தம் சிந்த காரணமாக இருந்தவர்களின் இரத்தத்தை அள்ளிக் குடியுங்கள்!"

"கோழையாகாதீர்! உழைப்பாளிகளை கொடுமைப்படுத்திய ஊதாரிகளை பழிக் குப்பழி வாங்குங்கள்!"

"ஆவேசக் கூச்சல்கள்...கொடுமை யைத் தாங்கமுடியாது கிளம்பிய வெறிச் சொற்கள்—ஒலித்தன!

மக்களை துவைத்து மிதித்துக் கொண்டு குதிரைகள் ஓடின. இரும்பு ஆயுதங்கள் ஒன்றோடொன்றுமோதின! அதிகாரி ஊளையிட்டான்!

கொம்பு ஊதியது. மக்கள் தலை தெறிக்க ஓடினர்!

தெருவில் ஆளரவமற்று விட்டது. ஆழ்ந்த அமைதி நிலவியது. காயம் பட்டு தெருவில் கிடந்தவர்களின் வேதனை முனகல்கள் மட்டும் பரிதாப மாகக் கேட்டன!—

குதிரைப்படை வந்த தெருவின் வழியே மீண்டும் கூட்டம் ஒன்றுதோன் றியது. கூட்டத்தின் முன்னே வந்து கொண்டிருந்த ஒருவன், தெருவில் கிடந் வனைப் பார்த்துக் கேட்டான்.

"உனக்கு காயம் பட்டதா தோழா?"

"அதிகமாக இல்லை!..."

"எனது காது துண்டாகிவிட்டது!"

"நீ கையில்லாமல் என்னசெய்வாய்?"

எங்கிருந்தோ ஒரு பெருமூச்சு கேட் டது!

கூட்டத்தினரிடையே ஒருவன் உரு வம் புலப்பட்டது. கம்பீரமான குரலில் அவன் அழைப்பு விடுத்தான்.

"விடுதலைக்கு போராட விரும்புகிற வர்கள் யார்? மக்களுக்காக—மக்களின் வாழும் உரிமைகளுக்காக—போர்முனை யில் உயிர் தத்தம் செய்யத் தயாராக இருப்பவர்கள் யார்? சுதந்திர தீபமேற்ற தங்கள் இரத்தத்தை தர முன்வருபவர் கள் யார்? விடுதலை வீணையில் தங்கள் நரம்புகளை இணைக்க விரும்புகின்றவர் கள் யார்?—வாருங்கள்!—"

எல்லோரும் அவனைச் சூழ்ந்துகொண் டனர்.

"இன்று ஆட்சியாளர்களின் முகமூடி கிழித்தெறியப்பட்டு விட்டது!"

"இந்த தினத்தை நாம் மறக்கமுடி யாது!"

பலர் பலவிதமாகபேசினர். அதற்குள் அந்த இளைஞன் வலது கையை உயரே தூக்கிப் பேசினான்.

"தோழர்களே! ரத்தமுத்திரை குத் தப்பட்ட சபதம் ஒன்றை இன்று நாம் எடுக்கிறோம். ரத்தக் கறைபடிந்த கரங் களை ஒன்றுசேர்த்து உறுதிமொழி எடுக்கிறோம்! ரத்த வாடை வீசும் காற் றில் நின்று கொண்டு நாம் அனைவரும் ஒரு பிரதிக்ஞை செய்கிறோம்! ஆம், இனி நாமே எல்லாம்! நமது கரங்களே சட் டம்! மக்கள் வாழ்வே நமதுஇலட்சியம்! ஆதிக்க வெறிபிடித்தோரை கீறி எறி யுங்கள்! எதேச்சாதிகாரத்திற்கு—மக்க ளுக்கு எதிராக உள்ள அத்தனை விஷ சக்திகளுக்கும்—பிரேதமண்டபம் கட்டு வதே நமது பணி! விடுதலை பெறுமோர் இலட்சியத்துக்கே நமது உயிரை காணிக்கை ஆக்குகிறோம்! உரிமைப் போராட்டத்திலே நமது ஜீவனை மலர விட நாம் சித்தமாயுள்ளோம்!

அங்கிருந்தோர் அனைவரின் முகங் களும் குறுகியிருந்தன; உதடுகள் ஒட் டிக் கொண்டிருந்தன; கண்கள் தீப்பந் களென ஜொலித்தன; சிந்தனை துடித் தது; இளைஞன் பேசினான் :—

"சுடர் முகம் தூக்குங்கள்; சுதந்திர தீபத்தை ஏற்றி வைட்போம்! புஜங்களை உயர்த்துங்கள்! புதிய ரஷ்யா நம்முடை யது!"

அவர்கள் நெருக்கமாக—வேகமாக— உறுதியாக—நம்பிக்கையோடு நடந்து சென்றனர்.

அவர்கள் பேச்சு ஒன்றோடொன்று கலந்து சாகரத்தின் பெரு மூச்சைப் போல கேட்டது!

இருள் சிறகு விரித்துவிட்டது!

ஒரு வீட்டின் ஜன்னல் வழியாக. வெளிச்சம் தெருவில் விழுந்தது. அதில் கருத்த இரு உருவங்கள் மங்கலாக தெரிந்தன. விளக்குக் கம்பத்தில் ஒரு வன் சாய்ந்தபடி அமர்ந்திருந்தான், வேறொருவன் அவன் மடியில்சாய்ந்திருந் தான். துயரம் தோய்ந்த குரலில் ஒரு வன் முணுமுணுத்தான்.

"இரத்தம்—இரத்தம்"

★

# அந்த நாளும் வந்திடாதா?

வ. பாலசுப்பிரமண்யம்

**1949-ம்** ஆண்டுக்கு முன் சீனவிலே பெண்களுக்கு உரிமையில்லை. அவர்களால் உரத்துப் பேசமுடியாது, அரசியலிலோ, சமுதாயத்திலோ, பொருளாதாரத்திலோ பெண்களுக்குப் பங்கு கொள்ள உரிமையில்லை. சல்லாபத்துக்கும் சமைத்துப் போடவும் பிறந்தவளே பெண் என்ற மனப்பான்மையிலே பெண்களை அடிமைப் படுத்தி வைத்திருந்தனர் சீனர். ஆண்களே பெண்களை ஆட்டிப் படைக்கும் சூத்ரதாரிகளாக இருந்துவந்தனர், திருமணத்துக்கு முன் ஒரு சீனப் பெண் தந்தைக்கு அடங்கி நடக்கவேண்டும். திருமணத்துக்குப் பிறகு அவள் தன் கணவனின் கைப் பாவையாக இருக்க வேண்டும். கணவனுக்குப் பிறகு மகனுக்கு அடங்கி நடக்க வேண்டும். இப்படி ஒரு சட்டம் இருந்து வந்தது சீன சமுதாயத்திலே! சராசரி சீன மனிதனொருவன் அரசாங்கத்துக்குக் கட்டுப்பட வேண்டும்; அடுத்தபடி குடும்பச் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படவேண்டும்; மூன்ருவதாக மதத்துக்கு அடிபணிய வேண்டும். ஆனல் சீனப்பெண்ணெருவளோ இம் மூன்ருேடல்லாமல் 'கணவன்' என்ருெரு நான்காவது பொருளுக்கும் அடிமையாக வேண்டும். இதுவும் சட்டம்!

பெண்ணின் விருப்பத்துக்கு மாருக பலாத்காரத் திருமணங்கள் சர்வசாதாரணமாய் நடந்து வந்தன. உரிய பருவத்தை அடையு முன்பே பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கும் பழக்கம் இருந்து வந்தது. பால்ய விவாகமும் நடைபெறுவதுமுண்டு.

திருமணத்துக்கு முன் எந்த ஆடவனையும் பார்க்க முடியாது, தன் வாழ்வின் சுகத்திலும் துக்கத்திலும் பங்குகொள்ளப்போகும் கணவனை மணவறையில்தான் காணமுடியும் அவளால்! பெற்ருேர்கள் தேர்ந்தெடுத்த கணவன் தனக்குத் தகுந்தவனுகத் தானிருப்பானென்று அவள் தன் மனதிலே கோட்டைகளெல்லாம் கட்டியிருப்பாள். பாவம்! அவளது பெற்ருேர்களோ அவளைப் பணத்துக்காகப் பணயம் வைத்திருப்பார்கள்! சொத்து சுகங்களுக்காக அந்தச் சொர்ண விக்ரகத்தை, சுடுகாடு போகக் காத்திருக்கும் கிழத்துக்கு முடிச்சுப் போட்டிருப்பார்கள். என்ன செய்வாள் பேதை? கொஞ்ச நாளில் மணப்பறை கொட்டிய அதே வீட்டில் பிணப்பறை முழங்கும். முகரப்படாத அந்த முல்லைக் கொடியாள் விதவையாகியிருப்பாள்! கட்டிளம் பருவத்தினளான அவளுக்கு — உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு பதில் சொல்ல முடியாத அவளுக்கு—மறுமணம் செய்து கொள்ள அனுமதி தராது சீன நாட்டுச் சமுதாயம்!

அதோ! அங்கே ஒரு சீமான் வாழ்கிருன். அவன் பெயர் 'பெங்-யூ-டாங்'. ஏற்கனவே அவனுக்கு ஐந்து மனைவியரிருந்தனர். சில காரணங்களுக்காக அவர்களிலிருவரை ஓராண்டுக்கு முன் பெங்-யூ-டாங் விற்றுவிட்டான். ஆம்! விற்றுவிட்டான். இப்போது போன இருவரின் இடத்தைப் பூர்த்திசெய்ய இரண்டு பெண்கள் தேவை அவனுக்கு! என்ன செய்வான் பாவம்? மூன்று மனைவியரை வைத்துக்கொண்டு திரும்பத்திரும்ப அவர்களுடைய முகத்திலேயே விழிக்க அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. பெங்-யூ-டாங்கின் பணம் வேலை செய்தது இளமை கொழிக்கும் இரண்டு புதுப் பெண்கள் கிடைத்துவிட்டார்கள் அவனுக்கு! அதை அனுமதிக்கத் தவறவில்லை சீன சமுதாயம்!

இரண்டு காட்சிகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அங்கே கணவனை இழந்த கைம்பெண்ணின் மறுமணம் மறுக்கப்படுகிறது. இங்கே மூன்று மனைவியர் போதாதென்று இன்னும் இருவரை விலைக்குவாங்கும் அக்கிரமம் அனுமதிக்கப்படுகிறது! அவளுடைய மனப்புழுகத்தைக் கவனிக்கவில்லை சமுதாயம்! இவனுடைய மன்மத லீலைகளையோ அனுமதிக்கிறது!

பழைய சீனவிலே கேள்வி முறையில்லாமல் ஆண்கள் எத்தனைப் பெண்களை வேண்டுமானலும் மணந்து கொள்ளலாம். விதவைத் திருமணத்திற்கு அனுமதி கிடையாது.

திருமணத்திற்குப் பிள்ளை வீட்டார், பெண் வீட்டாருக்குப் பணம் தரவேண்டும். பச்சையாகச் சொல்லவேண்டுமானல் பெண்ணை விலை தந்து பெறவேண்டும். பணம் படைத்தவர்களுக்கு இதனல் ஒரு விதக் கஷ்டமுமில்லை. பரம ஏழையான அன்ருடம் காய்ச்சும் ஒருவன் பெண்வாங்கும் அளவுக்குப் பணத்துக்கு எங்கே போவான்? ஒன்று பிரம்மச்சாரியத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் அல்லது கடன் வாங்கித் தொலைக்கவேண்டும். வாங்கிய கடனை அடைக்க அவன் படாதபாடு படவேண்டும்.

'திருமணமானவன் சம்பாதிக்கத் தொடங்கினல் அவன் சமாதியை நண்ணும்போதுதான் பணக்காரனுவான்' என்று வேல்ஸ் நாட்டிலே ஒரு பழமொழியுண்டு. திருமணத்துக்குக் கடன் வாங்கும் சீன வாலிபன், கிழவனுனலும் கடன் என்னவோ இளமைகுன்ருமல் இருந்தபடிதானிருக்கும், நித்திய தரித்திரம் அவன் வீட்டிலே தாண்டவமாடும், 'ஒண்டியிருந்தால் தனியொருவன் பட்டினி; திருமணமாகி மனைவி வந்தால் இருவர் பட்டினி; குழந்தை பிறந்தால் மூவர் பட்டினி!' என்ற சீனப் பழமொழி இந்தப் பரிதாப நிலையைச் சொல்லவே பிறந்ததாகும்.

திருமணமான பிறகு மணமகளைக் கணவன் இஷ்டப்பட்டால் ஆடுமாடுகளை விற்பதுபோல் பணம் வாங்கிக் கொண்டு விற்றுவிடலாம் என்ற வழக்கம் இருந்து வந்திருக்கிறது. கணவனே கணவனின் தந்தையோ அவளை எது வேண்டுமானலும் செய்யலாம். அடிக்கலாம், உதைக்கலாம், சூடு போடலாம், அடித்த அடியில் செத்தாலும் கேள்விமுறையில்லை. கல்லானலும் கணவன்...புல்லானலும் புருஷன்! அவன் சொற்படிதான் அவள் கேட்கவேண்டும். மீறினல் மண விலக்கு, அடி, உதை, குத்து வெட்டு, அத்தனையும் நடக்கும். கேள்வி கேட்பாரில்லாத காரணத்தால் பணம் படைத்தவன் எத்தனை பெண்களை வேண்டுமானலும் வரித்துக் கொண்டான். இஷ்டப்பட்டபோது வேண்டாத மனைவியை விலக்கினன்—விற்ருன்.

சீனவிலே ஆடுமாடுகளாக நடத்தப்பட்டார்கள் பெண்கள்! ஆட்டி வைத்தால் ஆடும் பொம்மைகளாக இருந்தார்கள் பெண்கள்! பாம்பின் வாய்த்தேரைகளாக இருந்தார்கள். வெளியுலகம் அறியாத கிணற்றுத் தவளைகளாகத் தத்தளித்துக்கொண்டிருந்தார்கள்! நேற்று இன்ருகவா? ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக!

"இந்தப் பத்தாம்பசலிக் கொள்கைகள் என்று ஒழியுமோ? என்று நம் துயர் நீங்குமோ?" என்று ஏங்கித் தவித்தார்கள் சீனப் பெண் மணிகள்! அந்த நாளும் வந்தது!

**1950 மே முதல் நாள் சீனப் பெண்களின் திருநாள் அது!** யுகயுகாந்திரமாய் அடிமைப் படுகுழியில் விழுந்து உழன்று கொண்டிருந்த அவர்களது விடுதலை நாள்! துயரந்தோய்ந்த முகங்களில் புன்னகை அரும்பிப் பொலிந்த நாள்! மூடநம்பிக்கைகள் ஒழிந்து அசட்டுப் பிடிவாதங்கள் அழிந்த நாள்! அடுப்பங்கரையே மோட்ச லோகமென்று நம்பி யிருந்தவர்களுக்கு வெளியுலகம் தெரிந்த நாள்! கட்டளையிடுபவன் கணவன், அதை நிறைவேற்றுபவள் மனைவி என்ற கட்டுப்பாடுகள் ஒழிந்து, ஆணும் பெண்ணும் ஒன்று என்ற சரிநிகர் சமத்துவம் அமுல் செய்யப்பட்ட நாள்! அன்றுதான் புதிய சீனவின் திருமணச் சட்டம் அமுலுக்கு வந்தது.

எட்டு பகுதிகளையும் இருபத்தியேழு அங்கங்களையும் கொண்ட புதிய சீனவின் இந்தத் திருமணச் சட்டம் பலாத்கார மணத்தைத் தடை செய்கிறது, பால்ய விவாகத்தைத் தடுக்கிறது! இருதார மணத்தை மறுக்கிறது. கள்ள நட்பையும் திருமணத்திற்காகப் பணம் பரிசு பெறுவதையும் தடுக்கிறது. விதவைத் திருமணத்தை ஆதரிக்கிறது, பரஸ்பரம் ஆண், பெண் இருவரது பூர்ண சம்மதத்தின் பேரிலேயே திருமணங்கள் அமையவேண்டுமென்று எடுத்த எடுப்பிலேயே இச்சட்டத்தின் முதல் அங்கமும் மூன்ருவது அங்கமும் சொல்லுகின்றன. உடற்கூறு அமைப்பிலே கோளாறுடையவர்கள், பெண் வியாதி பிடித்தவர்கள், தொத்து நோய்களுக்கு இருப்பிடமான நோயாளிகள், தொழுநோய்க்காரர்கள், பைத்தியம் பிடித்தவர்கள் ஆகியோர் திருமணம் செய்துகொள்வதை இச் சட்டம் தடுக்கிறது, ஆணுக்கு இருபது வயதும், பெண்ணுக்குப் பதினெட்டு வயதும் நிறைந்த பிறகே திருமணம் நிகழவேண்டுமென்று இச் சட்டத்தின் நான்காவது அங்கம் வரையறுக்கிறது.

வீட்டில் கணவனும் மனைவியும் சம அந்தஸ்தை அனுபவிக்க வேண்டும். புதிய சமுதாயத்தை உருவாக்குவதிலே அவர்களிருவரும் கைகோர்த்து வேலை செய்ய வேண்டுமேன்று இச் சட்டம் அறிவுறுத்துகிறது. கணவனுடைய சொத்தை மனைவியும், மனைவியின் சொத்தைக் கணவனும் அனுபவித்துக்கொள்ள இருசாராருக்கும் உரிமையுண்டு. கணவன் மனைவி—இருவரும் விரும்பினல் மணவிலக்கை அனுமதிக்கிறது இச் சட்டம். மணவிலக்குப் பெற்ற அவர்கள் சிறிது காலங்கழித்து மறுபடியும் தம்பதிகளாக விரும்பினல் அதற்கும் தடையில்லை. அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் படிப்பும், பராமரிப்பும் மணவிலக்கிற்குப் பிறகும் பாதுகாக்கப் படவேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளை இச் சட்டம் செய்கிறது.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானல், புதிய சீனவின் இந்தத் திருமணச் சட்டம் அளவில் சிறிதென்ருலும் பூரணத்துவம் பெற்றது. மூர்த்தி சிறிதென்ருலும் கீர்த்தி பெரிதென்பார்கள். அது போல இச்சட்டம் சிறிதென்ருலும் அது விளைவிக்கும் பயனே மகத்தானது. பெரும் பெரும் சட்டங்களை உலகம் வியக்க இயற்றலாம். ஏராளமாகப் பணம் செலவு செய்து வெளிநாடுகளில் அவற்றை விளம்பரப்படுத்தலாம். செயலில் நடைபெற வேண்டுமே!

இங்கேயும் தான் மதுவிலக்குச் சட்டமியற்றினர்கள்! அமெரிக்காவில் தோல்வியடைந்த மதுவிலக்கு இங்கு வெற்றி பெற்றது. என்று வெளிநாடுகளில் விளம்பரம் செய்தார்கள். நடப்பதென்ன?

இருதார மணத்திற்குத் தடைவிதித்துச் சட்டம் இயற்றினர்கள் சட்டம் ஏட்டளவில் இருக்கிறது. நாட்டில் இருதாரத் திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.

இவற்றுக் கெல்லாம் காரணம் என்ன? சட்டம் இயற்றுவதோடு தங்கள் கடமை முடிந்ததென்று கைகழுவிவிடும் கனதனவான்களை நாம் தேர்ந்தெடுத்து அனுப்பியதுதான்.

சீனவிலே நிலச் சீர்திருத்தம் கிராமங் கிராமமாக செய்யப்பட்டு வருகிறபோதே இத் திருமணச் சட்டத்தையும் அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். அங்கங்கே அது ஒழுங்காக இயங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவ்வப்போது செய்துகொண்டே சென்ருர்கள். அதற்குப் பலன் உடனடி

28-ம் பக்கம் பார்க்க

# நம்ம சர்க்காராக இருந்தால் மட்டும் போதாது அது நல்ல சர்க்காராகவும் இருக்க வேண்டும்

சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர், (மேல்சபை) எதிர்க்கட்சித் தலைவர்

## டாக்டர் லட்சுமணசாமி அவர்களின் அறிவுரை

நவீன ஜனநாயகம், ஐரோப்பிய நாடுகளில்புகுத்தப்பட்ட ஜனநாயகத்தைவிட வெகுதூரம் முன்னேற்றமடைந்திருக்கிறது.

கொள்கையில் மாறியிருப்பதால் அது செயலிலும் மாறிவிட்டது.

செயல்முறையைப் பொறுத்த வரையில் நவீன ஜனநாயகத்தின் நிலைமை பல்வேறு நடவடிக்கைகள் கொண்டதாகும்.

ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக அமைக்கப்பட்ட மக்கள் சர்க்கார் மட்டுமல்லாது பிரதிநிதிகளின்—சிறந்தவர்களின் ஆட்சி என்பதாகும்.

நல்ல சாக்காருக்கு ஆளும் கட்சி மட்டுமல்லாமல் ஆளும் கட்சிக்கு நல்ல எதிர் கட்சியும் இருக்க வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும்.

அரசியலாருக்கு எப்போதும் எதிராகவே எதிர்க்கட்சி இருக்க வேண்டும் என்று பொது மக்கள் நினைக்க கூடாது சட்ட பூர்வமான நல்ல காரியங்களை எதிர் கட்சிகள் வரவேற்று ஆதரவளிக்கலாம் ஆனால்அதே சமயத்தில் மக்கள் நலனைக் கெடுக்கும் சர்க்கார் நடவடிக்கைகளை எதிர்க்கத் தயங்கக் கூடாது.

நல்லதொரு சர்க்கார் பலம் வாய்ந்த எதிர்க் கட்சியால் ஏற்படுகிறது.

சட்ட சபையில் ஆளும் கட்சியின் பலம் அதிகரிக்க அதிகரிக்க அது தவறு செய்யும் தன்மையும் அதிகரிக்க வகை ஏற்படுகிறது.

எல்லா ஜனநாயக நாடுகளிலும் சர்க்கார் இலாகாவை நிர்வகிக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் அந்தந்த இலாகாவைப் பற்றிய முழு விவரமும் அறிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

நல்லவிதமாக ஒழுங்காக அமைக்கப்பட்டு திறமை படைத்த சர்க்கார் அதிகாரிகள் இருந்தால் போதும்.

மக்கள் நலனில் அக்கரையும் பொறுப்புணர்ச்சியும் கொண்ட சர்க்கார் அதிகாரிகள் சட்டசபையில் நடவடிக்கைகளை கவனித்து ஒப்பிட்டு மந்திரிகளுக்கு எடுத்துக் காட்டி ஒழுங்கு செய்ய வேண்டும், இதில் அரசியல் கூடாது; யார் மந்திரிகள் என்ற கவலையும் கூடாது.

ஜனநாயகம் சர்வாதிகாரமாய் மாறுவதைப்போல் நல்ல அரசாங்கத்துக்கும் மக்கள் நலனுக்கும் பெரிய அபாயம் வேறு எதுவும் கிடையாது.

இன்று ஜனநாயகம் ஒரு திருப்பத்தில் நிற்கிறது. 'துரதிர்ஷ்டவசமாக ஜனநாயக நாடுகள் பலவற்றில் சர்வாதிகார மனப்பான்மையின் பயம் இழையோடிக் கொண்டிருக்கிறது இந்த அபாயத்திலிருந்து தப்பினுல் தான் உண்மையான ஜனநாயம் நிலைத்திருக்க முடியும்.

★

---

### அந்த நாளும் வந்திடாதா—தொடர்ச்சி

யாக ஏற்படாவிட்டாலும், சிறுகச் சிறுக ஏற்பட்டுவருகிறது. பட்டிக் காட்டான் யானையைப் பார்ப்பது போல இச்சட்டத்தை, கிராமப் புரங்களிலே வசிக்கும் சீனர்கள் புதுமையாகப் பார்க்கிறார்களாம்.

சீனாவிலே இருந்த சீர்கெட்டுப் போன சமுதாய வாழ்வு நமது சமுதாயத்திலும் இருக்கிறது. மனைவியை விற்கும் கொடுமையான அந்த ஒரு பழக்கத்தைத் தவிர எஞ்சிய அத்தனை பழக்கங்களும் நம்மிடையே இருக்கின்றன. சாரதா சட்டமிருந்தும் பால்ய மணங்கள் நிகழாமலில்லை. விபசாரம் உண்டு இங்கே! மறுமண உரிமை கிடையாது இங்கே! ஆணுக்குப் பெண் அடிமை என்ற மனப்பான்மை இங்கே ஆதிகாலந்தொட்டே இருந்துவருகிறது. மணத்திற்காக இங்கு பணம் வாங்கும் பழக்கம் இன்னும் ஒழியவில்லை.

சீனாவின் சமுதாய வாழ்வு எப்படி இருந்ததோ அப்படியே நமது சமுதாய வாழ்வும் இருந்துவருகிறது. இன்று ஓரளவுக்கு நாட்டிலே விழிப்பேற்பட்டு சீர்திருத்தத் திருமணங்களும், பதிவுத் திருமணங்களும், கலப்பு மணங்களும் ஆங்காங்கே நடைபெற்று வந்தாலும், பெண்களின் நிலை, முன்னிருந்ததைப் போலவேதான் இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" என்றார் புரட்சி கவிஞர் பாரதிதாசன். மண்ணடிமை தீர்ந்த பிறகும் இந்த நாட்டிலே பெண்ணடிமை தீரவில்லை. பெண்களாவது தங்கள் மேல் சுமத்தப்பட்டுள்ள தளைகளையெல்லாம் போக்கிக் கொள்ளுகிறார்களா என்றால் அதுவுமில்லை. அழகுப் போட்டி நடத்தவே அவர்களுக்கு நேரம் போதவில்லை. என்ன செய்வார்கள் பாவம்? இந்தப் பரிதாபகரமான நிலை மாறவேண்டும். தானாக மாறாவிட்டாலும் நாம் மாற்றியமைக்கவேண்டும்.

சீனப் பெண்களும் நம்முடைய நாரீமணிகளைப் போல், சீரழிந்துதான் கிடந்தார்கள் மூன்றாண்டுகட்கு முன்னே! இன்றோ அவர்கள் நமக்கெல்லாம் வழி காட்டுகிறார்கள். அவர்களைப்போல் நம் பெண்கள் விழிப்படையும் அந்த நாளும் வந்திடாதோ என்ற ஏக்கந்தான் நம்முடைய இதயத்தைக் கப்புகிறது

★

### கரணம் வறுமையல்லவா...தொடர்ச்சி

ஆண்டவன் தொழில் என்றால் பாது காப்பது அரசாங்கத்தின் கடமையல்லவா? அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் அகப்பட்டதைச் சுருட்டவா பீடமேறினார்கள்? 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று புலம்பினனே ஒரு பாரதி அது எதற்காக? எல்லோரும் ஓர் குலமாயிருந்தால் இன்று ஏன் இந்த சாதி வேற்றுமை? எல்லோரும் ஓர் நிறை என்றால் ஏன் இந்த உயர்வு தாழ்வு? எல்லோரும் இந்நாட்டு மன்னனென்றால் ஏன் இன்று பிச்சைக்காரர் விடுதிகளும் கஞ்சித் தொட்டிகளும் தேவைப்படுகின்றன? வேலை கொடுக்க வக்கில்லாத இந்த அரசாங்கத்தை தட்டிக் கேட்க முடியாத நீ வேலை இல்லாமல் விபசாரத்தில் ஈடுபட்ட என்னை வெறுத்து அறைய என்ன உரிமை இருக்கிறது?

"அப்போதெல்லாம் விபசார விடுதிகளடங்கிய ஒரு வீதிதான் இருந்ததாம். இப்போது—அதைத் தடை செய்த பிறகு வீட்டுக்கு வீடு விபசாரம் குடியேறி விட்டதே. ஊருக்கோர் மதுக்கடை இருந்ததெல்லாம் போய் இன்று—மதுவிலக்கின் போது வீட்டுக்கோர் மதுக்கடை ஏற்பட்டு விட்டதே. இது போல்தானு அதுவும்? "விபசாரம் செய்தாயா? நீ குற்றவாளி!" என்று தண்டிக்கிறதே அரசாங்கம். "விபசாரம் செய்யவேண்டிய நெருக்கடி—சூழ்நிலை ஏனம்மா உனக்கு ஏற்பட்டது?" என்று கேட்டு அதற்குப் பரிகாரம் செய்ய ஏன் இந்த அரசாங்கம் முயலவில்லை?

. . . . .

"இப்போது புரிந்ததா நான் ஏன் விபசாரியானேன் என்று? நீ சொன்னுயே பட்டிணத்திலும் பரவிக்கிடக்கிறது என்று. ஆனுல் அது வீபசாரமாகவா பேசப்படுகிறது? நாகரீகமாகவல்லவா நடக்கிறது. அங்கு நடப்பதை நீயே சொன்னுயே ஒருநாள்:

"தாயும், மகளும் மாலை வேளையில் உலவவருகிறார்கள் கடற்கரைக்கு. பகட்டான அப்பெண்ணுடைய ஆடை மற்றவர் பார்வையைக் கவர்கிறது: எடுப்பான அவள் தோற்றம் அவர்கள் எண்ணத்தை ஈர்க்கிறது. அவள் நெளிந்து நடக்கும் நடையால் பார்ப்பவர் உள்ளம்குளிர்கிறது. ஏமாந்தவன்எவனாவது எதிர்பட்டால் அந்த மாயக்காரி மயக்கம் வந்ததுபோல சாய்கிறாள். அந்த அப்பாவி வாலிபன் நல்ல எண்ணத்தோடு அவளை அப்படியே தாங்கிக் கீழே படுக்க வைக்கிறான். சோடா வாங்கிவந்து தருகிறான். சோர்வைப் போக்குகிறான். கண் விழித்த கட்டழகி கட்டழகனை காண்கிறாள், துள்ளி யெழுகிறாள்; தூர விலகி நிற்கிறாள் நாணிக் கோணி. பெற்றெடுத்த பேய் சுற்றி வளைத்துப் பேசுகிறாள்: சொக்குப் பொடி போடுகிறாள்: "பார்த்தா நல்ல பிள்ளையா தெரியுது. என் கண்ணைக் காப்பாற்றின உனக்கு நான் எனனசெய்யஇருக்கிறது. வீட்டுக்கு வாப்பா கொஞ்ச நேரம் பேசிவிட்டுக் காப்பி சாப்பிட்டுவிட்டு வரலாம் என்று கூப்பிடுகிறாள். அவன் பரவாயில்லை. அதெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம், நான் என்ன அப்படிப் பிரமாதமான உதவி செய்துவிட்டேன் என்று நழுவப் பார்க்கிறான். ஆனுல் அந்தப் பெண்ணின் பார்வையில் சிக்கி விடுகிறான். எண்ணெயில் விழுந்த ஈயைப்போல வீடு செல்கிறான். அவர்களோடு விருந்துண்கிறான். வலையில் விழுகிறான்; வாரிவாரி யிறைக்கிறான். அண்டின அவனை ஆண்டியாக்கி அடித்துத் துரத்திவிடுகின்றனர். இது பட்டித்துணவிபசாரம்—அல்ல நாகரிகம் என்று சொன்னுய். அங்கு அப்படி நடக்கிறது இங்கே?

பகலவன் மறைந்தபின் பாதை ஓரம் ஒய்யார நடை போடுகிறேன். வருகிற லாரியின் வெளிச்சம் என்மேல் விழுகிறது. வண்டியோட்டியின் பார்வையும் என்மேல் பாய்கிறது. நிறுத்தப்பட்ட வண்டியில் நான் ஏறிக்கொள்கிறேன் வண்டியைத் துடைப்பவன் வண்டி ஓட்டுபவனுக மாறுகிறான். வண்டியோட்டி பின்னால் வந்து என்னை வாரி அணைத்துக்கொள்கிறான். இரவோடு இரவாக வெகுதூரம் செல்லும் வண்டியில் நானும் செல்கிறேன். பொழுது விடிவதற்குள் மறுபடியும் திரும்பிவந்து விடுகிறேன். இப்படி எத்தனையோ இரவுகள் என் வேலை நேரங்களாகின்றன, எத்தனையோ லாரிகள் என் படுக்கையறைகளாகின்றன. நான் பரோபகாரி யாகிறேன். எத்தனையோ டிரைவர்கள், கிளீனர்கள் எனக்குப் பிழைப்புத்தரும் 'புண்ணியாத்மாக்க'ளாகின்றனர். அந்தப் 'புண்ணியாத்மாக்களில் நீயும் ஒரு ஆள்!

போதும்! போதும்! சொல்லம்பால் என்னைக் கொல்லாதே- நீயாக விபசாரியாகவில்லை அப்படி ஆக்கப்பட்டாய்; இந்தப் பொல்லாத ஆட்சிமுறை என்று அழியுமோ? நல்லார் உலவிய இந்நாட்டைப் பொல்லாதாரின் வேட்டைக் காடாக்க விடமாட்டேன் எல்லோரும் வாழ என்னாலானதை இன்றே செய்யத் துவங்கவேண்டும். என் கண்களைத் திறந்தவளே! கற்பைத் துறந்தவளே! இரு! இரு! நான் திரும்பி வந்தால் உன்னை வாழ வைக்கிறேன். நான் வரவில்லையென்றால் செத்து ஒழிந்ததாக நினைத்துக்கொள், வருகிறேன்; போய் வருகிறேன்.

ஓடினான்; ஓடினான்; தலைதெறிக்க ஓடினான். ஓடுவதைக்கண்ட அவள் சிரித்தாள்; சிரித்தாள், வயிறு வெடிக்கச் சிரித்தாள். சிரிப்பு அதிகமாகி அழுகையாக மாறியது; அழுகை ஆத்திரமாக உருவெடுத்தது. ஆத்திரம் மூண்டு எரிந்தது. அவளும் ஓடினாள்; அவன் பின்னாலேயே ஓடினாள்!

அவன் எங்கே ஓடுகிறான்? அவனைத் தொடர்ந்து இவள் எங்கே ஓடுகிறாள்? அவர்களுக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? நாமும் அவர்களோடு பின்னால் ஓடினால்தான் விளங்கும். ஆனால் ஓடவேண்டாம். நம் சிந்தனையை ஓட விடுவோம்; அதுவே போதுமானது.

---

### தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்

முதலாளித்துவத்திற்கு முட்டுக் கொடுத்து நிற்கும் மூடப் பழக்கவழக்கங்களை முறியடியுங்கள்

# நாடற்றவர்?

சுவடி

ஐரோப்பாவில் வசந்தம்—அந்த வசந்த வேளையில் ஓர் கசந்த வாடை வெறும் கசந்த வாடை மட்டுமல்ல அந்த வசந்த வீசலில், நாசிக்குப் பிடிக்காத மத நாற்றமும் கலந்திருந்தது. இந்த மத ஊதலை சுவாசிக்க விரும்பியது ஒரு கூட்டம். காசப் பூச்சிகள் கலந்த காற்று வேண்டாமென்று ஒதுங்கி ஓடியது மற்றொரு கூட்டம்.

இந்த வாடை வந்த நேரத்தில்தான் மாதா கோவில்கள் பல அங்கு எழுந்தன. அதில் மண்டியிட மங்கையர் கூட்டங்கள் சில வருகைதந்தன. பாபத்தைப் போக்கி, பரந்தாமனை நோக்கி சுகிக்க ஒரு குறுக்கு வழியை மத குருக்கள் கண்டுபிடித்தனர். இந்த தகாத பாதைக்கு மன்னரும் பிரபுக்களும் வழி காட்டி கம்பங்களாக மாறி கைவிரித்து நின்றனர். இதைக் கண்ணுற்ற மக்கள் விரைந்தோடினர் ஆலய எல்லைக்கு. பாபத்தைப் போக்கிக்கொள்ள வந்த பரிதாப முகங்கள் ஒருபக்கம். வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத வறிஞர்களின் கூட்டம் ஒரு பக்கம். இந்தச் சுற்றத்துக்கு மதகுரு சாந்தமாக ஆண்டவன் காப்பாற்றுவார் என்று ஆறுதல் மொழி கூறி அனுப்பிவைத்தார்.

நள்ளிரவு வந்தால் கனிந்த கன்னியா வட்டத்திலே மதகுரு மமதையோடு நுழைவார் குழையவர் சிலரை அழைத்து மந்திரம் கேள் என்று தந்திரமாக அழைப்பார். வந்த சுந்தரிகளை "கடவுள் எங்கும் உள்ளார் அல்லவா அந்த இருட்டறையிலே காட்டுகிறேன் பார் என்று கூட்டிச் செல்வார். அவரது இந்தச்செயலால் கூச்சலிடுவர் அந்தப் பச்சைக்கிளிகள். அவர்களின் கூச்சலை மறைக்க மணியொலி தவருது ஊசலாடி ஒலிக்கும்.

இந்த அடாத செயலை அறிந்த பலர் அட்லாண்டிக் கடலிலே கலமேறி. கடல் கீறி புது உலக அமெரிக்காவின் கிழக்குக் கரையிலே தொங்கும் இரு தீவிலே பிலெடெல்பியா ப்ராவிடென்ஸ் என்று அந்தத் தீவுகளுக்குப் பெயரிட்டு புகுந்தனர் சொந்த நாட்டிலே வாழத்தெரியாதவர்கள். அமெரிக்காவில் மற்ருெரு மூலையிலே தொங்கும் கலிபோர்னியாவில் பொன்தேடி புகுந்தனர் பல நாட்டார், இவ்வாறு கனிச் செல்வங்களைக் காண வந்த அயலார் சொந்த நாட்டினரை மந்தப்படுத்தி அவர்களின் பூர்வீக வரலாறே வளராத அளவுக்கு செய்துவிட்னர்.

இப்படி இழிவான நிலைக்கு உள்ளான சில நாட்டோடு நைட்ரேட்டைத் தன்னகத்தே கொண்ட ஆண்டீஸ், வயிரச் சுரங்கத்தை வற்ருது வளர்த்த தென் ஆப்ரிக்கா பொன்குவியலைக் குவித்துக் கொண்டு புரியாது விழிக்கும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் பல ஓலமிட்டு அழுதன. இப்படி உள்ளே புகுந்தவர்களை வெளியேறு என்று கூறுமளவுக்கு அந்தப் பூர்வீகக் குடிகள் அறிவு விசாலம் அடையாமலிருந்தனர். இதன் காரணமாகத்தான் மனிதனை வளர்ந்து வந்தவர்கள் வந்தாரைக்கண்டு சொந்த செல்வங்களைத் தந்து கருங்காட்டுக்குள் ஓடி விலங்குடன் போரிட்டு வாழ்ந்தனர், அதுதான் அவர்கள் வாழும் இடம் என்றும் எண்ணினர்.

இவ்வாறு உலகில் வரலாறு வளர்ந்து வரும் காலத்தில் தங்கம் கொடுத்த அந்தத் தியாகிகளின் வரலாறு சுருங்கி புள்ளியாக மாறி பூதக்கண்ணாடியில் காணும் ஆராய்ச்சிக் கண்களுக்கு ஒன்றுமே விளங்காத கலைந்த புள்ளியாகத் தென்படுகிறது.

ஆனல். உலகத்தின் ஒரு முனையிலிருந்து உருகி விழுந்த இலங்கைச் சொட்டிலே தட்டுப்படுகிருன் தன்மானத் தமிழன். அவன் பொன்னுசை கொண்டு புகுந்தவனல்ல. — அந்நிய நாட்டினருக்கு இன்னல் செய்ய நினைத்தவனுமல்ல. நாட்டின் பண்பாட்டிலும் கலாச்சார வழிமுறையிலும் சற்றும் வேறுபடாத காரணத்தாலும் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் பெயராலும் அந்நாட்டிலே அவன் புகுந்தான் வாழ்ந்தான்—இன்று தாழ்ந்து போனன்.

வெள்ளையர் பிடியிலே இலங்கை சிக்கிய பொழுது கரடுமுரடான நிலத்தை சீர்ப்படுத்த முடியாமல் சிங்களவர் களைத்தபோது இந்த மேட்டை நாடாக்கித் தந்தால் வாழும் உரிமையை உங்களுக்குத் தருவோம் என்ருன் தமிழனைப் பார்த்து வெள்ளையன். அந்த வாக்குறுதியின் பேரில்தான் உழைப்பதைமுதலாகக் கொண்டு சிங்களத்தை சீர்படுத்த முயன்ருன் தமிழன்.

அத்தகைய நன்றியறிவிப்பெல்லாம் இன்று சிதரடிக்கப்படுகிறது. இறந்து போனவனுக்குச் சமமாக நிற்கும் ஈழத் தமிழனை இலங்கை-டில்லி ஒப்பந்த கணவாய் வழியாக, நாடற்றவனுக்கி அநாதையாக விரட்ட வழி தேடுகிருர்கள்.

பல நாட்டிலே உரிமைப் போர் நடத்தி வெற்றி கண்ட இயல்பினை அறிந்தும் சிங்களத்தில் தமிழர் தனி இடம் கேட்கவில்லை. ஒன்றி வாழத்தான் விழைகிருர்கள். சென்ற காலத்தில் சேனநாயகா கொடுத்த ஒரு சில வாழ்க்கை வசதிகளைக் கூட புது மந்திரி கொத்தலவாலா கொடுக்க மறுத்து பயனில்லா வாக்கியங்கள் பல பேசுகின்ருர்.

இறந்தவர்களைப் பார்த்து இரங்க வேண்டாம் இது இயல்பென்றிருந்து விடலாம். ஆனல் இரக்கிறவர்களைக் கண்டு இகழக்கூடாது. ஏன்? அவர்களுக்கந்த நிலையென்று சற்று சிந்திக்க வேண்டும்.

இங்குதான் விலங்குகள் செய்யாததை பகுத்தறிவின் காரணமாக மனிதன் சிந்தித்துச் செய்ய வேண்டும். வழியும் காண வேண்டும்.

ஆனல் இதை மறந்து விட்டு பாவாடை கட்டாத பால்முக தமிழ்ச் செல்வியை—மழலை மாருத மாணிக்கப் பேழையை கண் திறக்காத கௌதாரிக் குஞ்சியை நெஞ்சியில் ஈரமில்லாமல் வெளியே விரட்டுகிருர் கொத்தலவாலா

கன்னியாகுமரி விளிம்பிலிருந்து கைக்கெட்டும் தூர இலங்கையில் தமிழனுக்குக்கட்டிக் கொடுத்த கனல் வீட்டை நன்ருகப் பார்க்க முடியும். இது அல்ல ஒப்பந்தம். இது அல்ல. நமது நீடித்த சம்பந்தம், ஈழத் தமிழன் வாழ ஒரு பெரிய மாற்றம் தேவை. அந்த மாற்றத்தில் சில முன்னேற்றப் பொறிகள் காணவேண்டும். அதுமட்டுமல்ல அது என்றும் திருத்தப் படாதிருக்க வேண்டும்.

கடந்த டில்லி-இலங்கை ஒப்பந்தப் புள்ளியை மீறி மற்ருெரு புதிய வாக்கியத்தைச் சேர்த்து ஈழத் தமிழனின் கணவன் மனைவி இன்ப உறவிலே புறையோட வைத்திருக்கிருர். ஆனல் அந்த மை காயா வாக்கியம் விழிப்பது நமக்குத் தெரியாமலில்லை ஈழத் தமிழனின் மனைவி மகவைப் பெற தமிழகம் வந்தால் அவள் மறுபடி தன் சொந்த கணவனிடம் சுகங் காணமுடியாது. முகம் பார்க்கவும் முடியாது! அவன் அங்குதான் இவள் இங்குதான். எப்படி ஒப்பந்தம். இது நிலைக்க வேண்டுமா? இவ்வித அநீதி அமுலிலிருக்கும் போது தான் ஆசியாவின் ஜோதி நேரு பண்டிதரின் தங்கை விஜயலட்சுமி அம்மையார் தமது திருக்குமாரிகளுடன் இலங்கை சென்று அந்நாட்டுப் பிரதமர் கொத்தலைவாலாவுடன் திருநடனம் ஆடச் செய்தார்கள்!

ஆனல்—அன்று தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் நடத்திய உரிமைப் போருக்குத் தலைமை வகித்த காந்தியாரை வெள்ளையன் ஒருவன் சுட்ட போது அந்தக் குண்டை தன் மார்பிலே தாங்கி காந்தியைக் காப்பாற்றி பிணமாக விழுந்தாள் தஞ்சை தமிழச்சி தில்லையாடி வள்ளியம்மை! அவள் எந்த வெள்ளையனின் தோளிலே சாய்ந்து கொண்டு ஓரக்கண்ணுல் பார்த்தாள்!

அதற்காகத்தான் திராவிடம் தனியாகப் பிரியவேண்டுமென்ற முழக்கம் கண்ணீர்த்துளிகளாலும் கட்டாரி வீரர்களாலும் முழங்கப்படுகிறது. அறிஞர் அண்ணு கூறுவதைப் போல் இந்த திராவிட நாட்டுப் பிரிவினை முழக்கம் வெறும் கூக்குரலல்ல ஒரு குறைப்பட்ட இனத்தாரின் குமுறல் கீதம். இந்த கீதத்தை அண்ணு எழுப்புவதற்கு முன்னே ஆப்பிரிக்காவில் சுடப்பட்டு மாண்டாளே வள்ளியம்மை--வாருெளி தீபம் அவளது இரத்தச்சொட்டு கூறியது திராவிடநாடு பிரிந்தாகவேண்டுமென்று. சொந்நாட்டிலே வாழவழியின்றி வெளிநாட்டுக்குச் சென்று தூக்குக் கயிறுக்கு இரையானர்களே மறத் தமிழர்கள் அவர்களின் உள்ளக்குமுறல் கூறுகிறது.

இரத்தச்சொட்டும், ... எலும்புக்குவியலும் திராவிட நாடு கேட்கவந்திருப்பதைக் கண்டு சிலர் சிரிக்கலாம். அப்படி சிரித்தால் அவர்கள் சிந்தனையிலேசிலசிக்கல்நிறைந்திருக்கவேண்டும். இன்று பலநாடுகளின் சுதந்திர நிலைக்கு மேற்கூறிய உயிரற்ற மூன்றும் உதவி இருக்கிறது. ஆகையால் அவைகளின் உதவியும் இங்கு தேவைப்படும் என்று எண்ணப்படுகிறது, எனவே தனித்திராவிடம் பெற—பெற்ற பின் வாழ-அதன்வளமை என்றும் மாருமலிருக்க திராவிடர் இயக்கமும்-அறிஞர் அண்ணு அவர்களும் காட்டும் வழியைப் பின்பற்றி வெளி மாகாணங்களிலும் அயல்நாடுகளிலும் அவதியுறும் நம்நாட்டுத் தோள்வலிமைமிக்க தொழிலாள தமிழர்களை மீட்போமாக.

லெனின் — ஸ்டாலின்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# நம் இதய கீதம்!

அண்ணு அன்பன்

★

கி. பி. பதினுருவது நூற்ருண்டு—விஞ்ஞானக் குழந்தையை வளர்த்தத் தொட்டில்! அதே நேரத்தில் முதலாளித்துவத்தையும் தோற்றுவித்த மருத்துவ நிலையம்! பொருள்களை உற்பத்தி செய்வதற்குக் கரங்களை உபயோகித்தவர்கள் இயந்திரங்களின் மூலம் பொருளுற்பத்தி செய்யத் தொடங்கினர்கள். சிறு சிறு கூட்டமாகப் பிரிந்து பொருட்களை உண்டாக்கிய மக்கள், மூலதனம் போட்டு ஒருவன் கட்டிய தொழிற்சாலையில் நூற்றுக்கணக்கிலே கூடி பொருட்களை உண்டாக்கினர்கள். மூலதனம் போட்டவன் முதலாளியானுன்; அவன் மூலதனத்தைக்கொண்டு பொருளுற்பத்தி செய்தவன் தொழிலாளியானுன்! ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குச் செல்ல குதிரைகளையும் மாடுகளையும் உபயோகித்த மனிதன், விஞ்ஞானத்தின் துணைக்கொண்டு மோட்டார்களையும் புகை வண்டிகளையும் உபயோகித்து போக்குவரத்து சாதனங்களில் முழுமாறுதலை உண்டாக்கினுன். விவசாயத் துறையிலேயும் விஞ்ஞானத்தின் மூலமாக பொருள் உற்பத்தி செய்யும் முறையை மாற்றினுன்; அதேசமயத்தில் முதலாளித்துவம் வளர்ந்தது; தொழிலாளர் வர்க்கம் ஓங்கியது. ஒருசாராரிடத்தில் செல்வம்கு விந்தது? மற்ருெருசாராரிடத்தில் ஏழ்மை தழுவியது—இதுதான் சரித்திரத்தில் காணப்படும் புதுயுகத்தின் 'தொழிற் புரட்சி' நவீன உலகத்தின் முதல் அத்தியாயம்! படிப்படியாக வளர்ந்து செழித்த முதலாளித்துவம் கி. பி. பத்தொன்பதாவது நூற்ருண்டில் உச்சநிலையடைந்தது. ஆளும் [illegible] அதன் காலடியில், 'தெந்தினம்' பாடினர்; தொழிலாளர் வர்க்கத்தினர் அதன் மமதையைக் கண்டு 'பூப்ஜியாமா'வாக உருவெடித்தனர்! ஐரோப்பாவில் 'ப்யூடலிஸம்' ஒழிந்து 'காபிடலிஸம்' எழுந்தது! நிலப்பிரபுத்துவம் நசுங்குண்டு முதலாளித்துவம் வளர்ந்தது.

முதலாளித்துவத்தின் முத்துச் சிரிப்பிலே சிந்தையைப் பறிகொடுத்த அரசாங்கங்கள், அதன் மனதை நோகச் செய்யாமலிருப்பதற்காக பாட்டாளி பரம்பரையினர்க்குக் கொடுத்தத் தொல்லைகளும் வீசிய அடக்குமுறைச் சட்டங்களும் ஏராளம்—அதிலே அவர்கள் உயிரிழந்தது பல ஆயிரம், கையொடிந்தோரும் காலிழந்தோரும் கண் அவிந்தோறும் பல லட்சம்! உழைத்தும் வாழ்க்கையில் உயர்வுகாணுத உழைப்பாளர் கூட்டம்! முதலாளித்துவத்தை எதிர்த்து தோல்விகண்டு கடைசியில் தங்கள் வாழ்வு வளம் பெறுவதற்குத் தனித் தனியாகப் போராடுவது உகந்ததல்ல, ஏற்றதல்ல, நல்லதல்ல என்ற முடிவிக்கு வந்து—உலகத்தொழிலாளரெல்லாம் ஒன்று கூடி முதலாளித்துவத்திற்கு சாவு சங்கு ஊதவேண்டுமென்ற எண்ணம் அவர்களின் நெஞ்சில் உதித்ததின் விளைவாக, 1864-ம் ஆண்டு செப்டம்பர் 28ந் தேதி 'மார்டின் ஹால்' என்னும் மண்டபத்தில், சர்வதேச தொழிலாளர் கழகம் என்னும் பெயரில் ஓர் ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்கவும், அதற்காக பூர்வாங்கமாக ஒரு மாநாட்டைக் கூட்டி சிறந்த முடிவுக்குவரவும், இங்கிலாந்து தொழிலாளர்ளும் பிரெஞ்சு தொழிலாளர்களும் ஓர் கூட்டத்தை ஏற்படுத்தினர்கள். அந்தக் கூட்டத்திற்கு, பிரான்ஸ் இங்கிலாந்து பெல்ஜியம், ஜெர்மனி, இத்தாலி போலந்து—முதலிய நாடுகளிலிருந்து தொழிலாளர் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்—வந்திருந்த பிரதிநிதிகளெல்லோரும் சமுதாயத்தின் அமைப்பை முதலில் மாற்றியமைத்து அதன் பிறகு அரசியலில் பங்கேற்க வேண்டுமென்ற நோக்கமுடையவர்கள்! அந்தநோக்கமுடையவர்கள்தான் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்! அரசியலைக் கைப்பற்றிய பிறகு சமுதாயத்தை சீர்திருத்துவோமென பேசிடும் திராவிட கம்யூனிஸ்ட்டுகளுக்கு நேர் விரோதமாக இருந்தார்கள்! அவர்கள் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தை நிறுவ ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தில் பிறந்ததுதான் முதல் இண்டர் நேஷனல்!

முதல் இண்டர் நேஷனலின் முக்கிய நோக்கம், சமுதாய ஏற்றத் தாழ்வுகள் ஆண்டான் அடிமை அண்டுபவன் என்றும் பயங்கர வேற்றுமைகளை அடியோடு அகற்றிவிட வேண்டும். அதற்கு பொருளுற்பத்திக்குச் சாதனமாயுள்ள அனைத்தும்—ஆலைகளும் தொழிற்சாலைகளும் — தொழிலாளரின் உரிமையின் கீழ் மாறவேண்டும். பொருளுற்பத்தியின் பலன்களை—நல்ல பயனை இருந்தாலும் தீமை விளைவிக்கும் பயனை இருந்தாலும்—சமுதாயத்தைச் சார்ந்தோர் அனைவரும் வஞ்சகமற்ற முறையில் ஒரே மாதிரியாக அனுபவிக்க வேண்டும். இவைகளுக்கெல்லாம் தனிச் சொத்துரிமை—பிட்டாவும் ஜமீனும், முதலாளி பணக்காரன் என்னும் நிலைமையும் ஒழிக்கப்படவேண்டும்.

தொழிலாளர் வாழ்க்கைக்கு புதுவித ஒளியைத் தந்திடும் இந்த நோக்கங்களைக் கண்டு நெஞ்சிலே நஞ்சு ஊற்றுகொண்ட முதலாளித்துவம் முதலில் கேலிமொழி பேசினாலும் பிறகு பயத்தால் நடுங்கியது. தொழிலாளரின் எழுச்சியைக் கருகச் செய்ய தன்னை பலப்படுத்திக் கொள்ளவும் முனைந்தது. முதல் இண்டர்நேஷனல் தோன்றிய மூன்று வருடங் கழித்து, முதலாளித்துவத்தின் பலத்தின் மீது அதன் ஆதிக்கக் கோட்டையின் மீது அணுகுண்டு வீசப்பட்டது. சிந்தனைச் செல்வர் காரல் மார்க்ஸால்!

1867-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதி 'காபிடல்'—மூலதனம்—என்னும் நூல்—நூல் வடிவிலே காணப்பட்ட முதலாளித்துவத்தின் நச்சுத்தன்மையை முறிக்கும் தொழிலாளரின் நல்மருந்து தயாராகி, உலகின் முதலாளித்துவத்திற்கு எச்சரிக்கை செய்தது! அந்தக் 'காபிட'லை எழுதி முடிக்க காரல் மார்க்ஸ் எடுத்துக் கொண்ட காலம் பதினைந்து வருடம்...! அதற்காக அவர் படித்த நூல்களின் தொகை ஆயிரத்தைந்நூறு! லண்டன் நகரிலே கொட்டின் வறுமைத் தேள்களுக்கும் பிடுங்கிய வேதனைப் பாம்புகளுக்கும் இடையில், கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவத்திற்குச் சாவோலைத் தீட்டினர்!

கடன்காரர்களுக்குப் பயந்து ஒளிந்து கொண்டே அதற்கான குறிப்புகளைத் தொகுத்தார்! பசிக்காக பழைய பூட்ஸ்களை அடகு வைத்தபடியே அதை எழுதினர்! ஆம்...கார்ல் மார்க்ஸ் வறுமையின் முழு உருவம்! வேதனையின் இருப்பிடம்! கவலையின் சிறப்பிடம்—அவர்தான் முதலாளித்துவத்தை முறியடிக்க தொழிலாளர்களுக்கு புது வழி வைக்கட்டினர்! அவர் காலத்தில் வெளியான 'காபிட'லின் முதல் பாகம், அந்த தொழிலாளர் பங்காளன் — பட்டாளிகளின் பாதுகாவலன்—இறந்த பிறகு அவர் தோழன் பிரடரிக் எங்கல்ஸால் இரண்டாவது பாகமும் மூன்றாவது பாகமும் ஒன்பது வருடங்கழித்து வெளிவந்தன.

அந்த மூன்று பகுதிகளிலும்பொருள் உற்பத்தி முறை, பாட்டாளிவர்க்கத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் உள்ள சம்மந்தம், பொருள்களின் விற்பனை, நாணயப்பரிவர்த்தனை, பொருள் உற்பத்தி செய்பவர்களுக்கும் அந்தப் பொருளை வாங்கி உற்பத்தி செய்கிறவர்களுக்கும் இடையில் உண்டாகிற பல நிலைமைகள்' இந்த நிலைமைகளினல் ஏற்படுகிற பாதகபாதகங்கள். முதலாளித்துவத்தின் முடிவு, தொழிலாளர் சமுதாயத்தின் தோற்றம், அதன் உணர்ச்சியால் ஏற்படும் நல்விளைவுகள் ஆகிய வற்றை வெளியிட்டு முதலாளித்துவத்தின் கோலாகல வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளிவைத்தது.

'காபிடல்' முதலாளித்துவத்தின் நெஞ்சைப் பிளந்தது; தன் ஆதிக்கத்தை அழிக்க தொழிலாளர் சமுதாயம் கற்றுக் கொள்ளும்புதுப் பாடங்களைகண்டு மனம் மருண்டு, உலகத்தில் உள்ள எல்லா கொடிய பிரபுக்களின் பலத்தைவெல்லாம் கூட்டி ஒரே உருவத்தில் நிறுத்தி தொழிலாளரின் புது எழுச்சியை அடக்க சொல்லொணு கொடுமைகள் புரிந்தது. ஆனால் கொடுமைகளைக் கண்டு தெறிக்கு புதியதொரு சமுதாயத்தை உருவாக்கினர் பாட்டாளி பரம்பரையினர்...முதல் வெற்றி ரஷ்யாவில்! அடுத்து அதைச் சுற்றிலும் சார்ந்துள்ள சில நாடுகளில் சமீபத்தில் சைனவில் இன்று நிலைபெற்றது, இன்னும் உலகின் பலபாகங்களில் முதலாளித்துவத்தை அதன் மறுபதிப்பான ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உழைப்பாளர் வர்க்கம் போராட்டம் நடத்திக் கொண்டுதானிருக்கிறது! பத்தொன்பதாவது நூற்றுண்டு வரையிலும் முதலாளித்துத்தின் முன்னல் நெஞ்சுருகும் நிலையில் இன்ப வாழ்க்கையை எண்ணி ஏங்கிய பரிதவித்து வீழ்ந்து கிடந்த உழைப்பாளர் சமுதாயம் இருபதாவது நூற்றுண்டில் எழுச்சியுற்ற நிலையில் இருக்கிறது. தளர்வுற்ற தொழிலாளர் பரம்பரை புத்துணர்வு கொண்டு பொங்கியெழும் நிலைக்குக் காரணம் காரல் மார்க்ஸ் தந்த சிந்தனைக் குவியல்கள்தான்; அவன் காட்டிய புதுவழிதான்!

முதலாளித்துவத்தை எதிர்த்து உலகத் தொழிலாளர்கள் போர்முரசுகொட்டிய வரலாற்று நிகழ்ச்சிகளோடு இந்தியத் தொழிலாளரின் வரலாற்று சம்பவத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள், இந்தியத் தொழிலாளர்கள் புரட்சி வாடை அறியாதவர்கள், 'அகிம்சா' என்னும் பெயரிலே அந்நியநாட்டு மூலதனத்தை தாயகத்தில் இருப்பதற்கு இடமளித்து வெறும் அசோகச் சக்கரக் கொடியின் கீழ் ஆனந்த மடைடவர்கள் என்னும் முடிவுக்கு வரக்கூடும்.

நூருண்டுகளுக்கு முன்னர் பிரான்சு நாட்டிலே யிருந்த தொழிலாளர் நிலை நல்லோர் மனதிற்கு எப்படி வேதனை தரும் நிகழ்ச்சியாக யிருக்கிறதோ அதை விட அதிகமான அளவில் இன்று இந்தியத்தொழிலாளரின் வேதனையான வாழ்க்கைமுறை. எண்ணிப்பார்ப்போரின் நெஞ்சைக் குலுங்கவைக்கும் நிலையிலுள்ளது. சங்கம் அமைக்கும் உரிமையும் தங்கள் குறைகளை எடுத்துக்கூற வேலைநிறுத்தம் செய்யும் உரிமையும் தொழிலாளருக்கு இருப்பினும் அதை, வீண்பழி சுமத்தி பலவந்தமாகப் பறித்துக்கொள்ளும் உரிமையும் இந்தியக் குடியரசு சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது!

தொழிலாளரின் உரிமைகளையெல்லாம் வடநாட்டு முதலாளித்துவதிற்குப் பலிதந்துவிட்டு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு சீறியெழும் உழைப்பாளரை எந்தெந்த விதத்தில் ஒடுக்கியாள வேண்டுமோ அந்த முறைகளெல்லாம் இந்தியக் குடியரசு சட்டத்தில் கறை படிந்துகாணப்படுகின்றன!

இன்று திராவிடத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் பஞ்சமும் பட்டினியும் பிணியும் வேலையில்லா திண்டாட்டமும் பாட்டாளிகளைப் பயமுறுத்தி பலிவாங்கி வருகின்றன-மதத்தால் வாழ வேண்டிய உண்மை நிலையை மறந்து பொருளாதார ஏற்ற தாழ்வால் சமுதாயத்தின் அடித்தளத்திற்கு தள்ளப்பட்டு மூச்சுவிடக்கூட முடியாமல் திணறும் தொழிலாளர் வர்க்கத்திற்கு. புத்துணர்வையும் புதுவாழ்க்கைக்கேற்ற புத்தம் புது கருத்துக்களையும் எடுத்து ஊட்டி அவர்களின் நெஞ்சிலே பொங்கியெழும் வேதனைக் கேணியை தூர்த்து வரும் கட்சி, **திராவிடத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் !**

எனவே, திராவிடத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்னைகள் ஒவ்வொன்றிலும் திராவிடர் இயக்கம்தான் முக்கியத்துவம் பெறுகிறது. முதலாளியோடு போராடிஅதிகமான ஊதியத்தை பெறுவதோடு மட்டுமல்லாமல் தொழிலாளர் பிரச்னை தீர்ந்து விடமுடியாது. அந்த ஊதியத்தை மதத்தின் பெயராலும் கடவுளின் கோட்பாடுகளாலும் ஊதாரித் தனமாக உறிஞ்சி வாழும் மதவாதிகளின் ஏகபோக வாழ்வை முறியடிக்கவேண்டும் எனவேதான் சமுதாய அமைப்பை முதலில் மாற்றியமைத்து அதன்மீது அரசியலை எழுப்பக் கருதுகிறது திராவிட முன்னேற்றக் கழகம். இன்றைய திராவிடத் தொழிலாளர்களின் துயரத்தைத் துடைக்க அவர்களின் உள்ளத்தில் ஊறிக் கிடக்கும் குருட்டு நம்பிக்கைகளைக் கழுவிவிட முதலாளித்துவத்தின் ஆணவக் குரலை அடக்கி அதன் குரல்வளையை நசுக்கி நலிந்துபோன வாழ்க்கையை ஏற்றுக்கொண்டிருக்கும் பாட்டாளிகளுக்கு நல்வாழ்வளிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினுல்தான் முடியும், வருங்கால தொழிலாளர் சந்ததியினரை இன்ப புரியில் உலவவிடப் போகும் மகத்தான பணியை—வீழ்ச்சியுற்றிருக்கும் பாட்டாளி பரம்பரையினரை எழுச்சியுறச் செய்து முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறியடிக்க வேண்டிய கடைசி நிகழ்ச்சியை—திராவிடர் இயக்கந்தான் செய்து முடிக்கும். இது உறுதி!

வண்ண மலர்களின் வாசம்! எண்ணத்தை ஈர்க்கும் பாசம்!

அயர்ச்சியு மனத்திற்கு ஆனந்தமூட்டு அத்தர், ஜவ்வாது, புனுகு, அம்பர் முதலிய கதம்ப மலர் வாசனைக் கூட்டு.

நானவித நல்ல வாசனைச் சரக்குகள் 'தயாரிப்பதும் ஓர் நற்கலை

★

ஈவினிங் மைனர்
பர்கட் மீ நாட்
லேடி லவ்

நறுமணம் வீசும் வாசனை சந்தனம்
கஸ்தூரி ஜவ்வாது வத்திகள்
உயர்ந்த பன்னீர்கள்

சி. ஏ. ஆனந்தா அண்டு கோ.
செண்ட் & அத்தர் வியாபாரம்
T. G. N. ஜ்வல்லர்ஸ் பில்டிங். 28, சைன பஜார் சென்னை.

மக்கள் வாழ்வை மலரச் செய்த மாவீரன்—லெனின்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் : என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை-1